# இலங்கைச் சுங்கம்

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2015

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2015

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| இலங்கைச் சுங்கம் - அறிமுகம் | 3 |
| இலங்கைச் சுங்கத்தின் அமைப்பக கட்டமைப்பு | 5 |
| பிரதான அலுவலர்கள் | 7 |
| ஓட்டுமொத்த செயலாற்றுகை 2015 | 9 |
| ***அமுல்படுத்தல் கொத்தணி*** | *19* |
| தடுப்புப் பணிப்பகம் | 21 |
| சமூக பாதுகாப்புப் பணிப்பகம் | 25 |
| மத்திய விசாரணைகள் பணிப்பகம் | 43 |
| சட்ட அலுவல்கள் பணிப்பகம் | 49 |
| மத்திய புலனாய்வுகள் பணிப்பகம் | 51 |
| ***அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி*** | *55* |
| பிரகடனங்கள் பணிப்பகம் | 57 |
| கைத்தொழில் மற்றும் சேவைகள் பணிப்பகம் | 67 |
| சரக்குப் பரிசோதனைப் பணிப்பகம் | 73 |
| பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம் | 81 |
| ஏற்றுமதிகள் பணிப்பகம் | 85 |
| ***கூட்டுறவுக் கொத்தணி*** | *89* |
| கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம் | 91 |
| இணக்காப்படு மற்றும் இலகுபடுத்தல் பணிப்பகம் | 101 |
| மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம் | 111 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம் | 117 |
| விசேட சேவைகள் பணிப்பகம் | 119 |
| ***மனிதவளங்கள் கொத்தணி*** | *129* |
| மனிதவள முகாமைத்துப் பணிப்பகம் | 131 |
| மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம் | 135 |
| ஊழியர் சேவைகள் பணிப்பகம் | 139 |
| பொருள் வினியோகப் பணிப்பகம் | 141 |
| ***மாகாணக் கொத்தணி*** | *143* |
| பயணிகள் சேவை (கட்டுநாயக) பணிப்பகம் | 145 |
| அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக) பணிப்பகம் | 151 |
| அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம் | 153 |
| பயணிகள் சேவை (மாகாணம்) பணிப்பகம் | 155 |
| ***சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்*** | *157* |
| முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம் | 159 |
| நிதிப் பணிப்பகம் | 161 |
| அரசிறை செயலணி (விசேட செயலணி மற்றும் கண்காணிப்பு) பணிப்பகம் | 167 |
| உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு | 169 |
| முறைப்பாடுகள் பணிப்பகம் | 171 |
| ***இணைப்பு*** | *175* |

## இலங்கைச் சுங்கம் - அறிமுகம்

**தொலைநோக்கு**

இலங்கையைப் பாதுகாப்புடனும் செழிப்புடனும் மேம்படுத்துகின்ற ஒரு "சிறந்த நடைமுறையுள்ள" சுங்க நிர்வாகமாக அடையப் பெறுவதாகும்.

**பணிநோக்கு**

தேசிய செயற்பாடுகளுக்கும் மற்றும் சர்வதேச சுங்க நியமங்களுக்கும் உறுதுணையாக இருக்கும் சட்டவாக்க வாணிபம், பயணம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றினை இலகுபடுத்தும் அதே வேளை, சுங்கச் சட்டம், அரசிறைகளைக் கருத்திற் கொண்ட தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் சமூக, சூழல் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்கிச் செயற்படுவதும் அதனை மேம்படுத்துவதுமாகும்.

**குறிக்கோள்கள்**

- நாட்டின் எல்லைப் புறங்களில் அரசினதும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள், வாணிபம் மற்றும் இறுப்புக் கொள்கைகளைச் சரியான முறையில் அமுலாவதை உறுதிப்படுத்தல்.

- இடையூறு இல்லாத அரசிறைகளை அரசுக்குத் தோற்றுவித்து உரிய அரசிறையைச் சேகரித்து உரிய நேரத்தில் அவற்றினைக் கணக்கிடுதலை உறுதிப்படுத்தல்.

- நாட்டின் எல்லைப்புறங்களில் அரசினால் அமுல்படுத்தப்படவிருக்கும் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் அரசிறையினைத் தீர்மானிப்பதில் கொள்கைத் திட்டமிடலாளருக்கு அறிவுரைப் பாகமாக இருத்தல்.

- சுங்க மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களது அமுலாக்கலையும் உறுதிப்படுத்தும் அதேவேளை, பயணிகளதும் பொருட்களதும் அசைவுகளையும் அவற்றோடு தொடர்பிலான போக்குவரத்தையும் தடங்கலற்றதாக்குதல்.

- பயணிகள், பொருட்கள் மற்றும் போக்குவரத்து தொடர்பான வசதிகள் போன்றவற்றின் அசைவுகள் தகவல் பரிமாற்றம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட விடயங்கள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சகல சர்வதேச கடப்பாடுகளையும் அனுசரித்தல்.

- அரசுக்கும் பொது மக்களுக்கும் தகவல் மற்றும் புள்ளிவபரங்களை வழங்குதல்.

- அரசினது சகல முயற்சிகளிலும் முன்னேற்றத்தின் பங்காளியாகவும், தொழில் ரீதியான சேவைகளில் நிபுணத்துவத்துடன் வாடிக்கையாளரின் நேசமுள்ளவராகவும் இருத்தல்.

- கணக்காய்வு வழிமுறையியல் மற்றும் தெளிவுத்தன்மையை உறுதியாக்கல் என்பவற்றின் அடிப்படையிலான சிறந்த நிருவாகத்தின் மூலம் சுங்க சேவையில் முன்னேற்றத்துக்காக உழைத்தல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- ✓ இறுப்பு வர்த்தகம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட அரச கொள்கைகளை அமுல்படுத்தல்.
- ✓ இறக்குமதி, ஏற்றுமதி சுங்கத் தீர்வைகளை மதிப்பிடலும் சேகரித்தலும்.
- ✓ ஏனைய அரச அமைப்புகள் மற்றும் பிற சட்டங்கள் சார்பில் தீர்வைகள் /வரிகள் மற்றும் இதர வரிகளை மதிப்பிடலும் சேகரித்தலும்.
- ✓ தீர்வைத் தள்ளுபடிகள், விலக்களிப்புகள் மற்றும் தீர்வை சலுகைகளை (வழங்குதல்) அமுல்படுத்தல்.
- ✓ தீர்வைகள் மற்றும் இதர வரிகளை உத்தரவாதப்படுத்தலும் அவைகளைக் கணக்கில் இடுதலும்.
- ✓ சுங்கத் தீர்வைகளது மீளமைப்பு, தீர்வைக் குறைப்பு மற்றும் தள்ளுபடிகளை மேற்கொள்ளல்.
- ✓ சட்டவிரோத கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தலும் தடை செய்தலும்.
- ✓ தடை செய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட பண்டங்கள் தொடர்பிலான சட்டங்களை அமுல்படுத்தல்.
- ✓ சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் தொடர்பிலான இதர சட்டங்களின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை புலன்விசாரணை செய்வதும் விசாரிப்பதும்.
- ✓ குற்றவாளிகளைத் தண்டணைக்குட்படுத்தலும் /பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களைக் கைப்பற்றலும்.
- ✓ பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்களை விற்றுத் தீர்த்தல்.
- ✓ இறக்குமதி, ஏற்றுமதிச் சரக்குகளை அகற்றுவதற்கு உதவுதல்.
- ✓ பயணிகளையும் அவர்களின் பொதிகளையும் வெளியாக்க உதவுதல்.
- ✓ சரக்கு மற்றும் பயணிகள் அகற்றும் செயன்முறைகளைக் கணனி மயப்படுத்தல்.
- ✓ உள்நாட்டு கைத்தொழில் மற்றும் விவசாய பொருட்களைப் பாதுகாக்கும் வகையில் அரசிறை அளவுகோல்களை அமுல்படுத்தல்.
- ✓ ஏற்றுமதி இலகுபடுத்தல் திட்டங்களை முகாமை செய்தல்.
- ✓ சரக்கு குத இல்லங்களை முகாமை செய்தல் (பிணைத் திட்டம்)
- ✓ ஏற்றுமதி வாய்ப்புள்ள கைத்தொழில் திட்டங்களைக் கண்காணித்தல்.
- ✓ தகவல், வகைப்படுத்தல் விதிகள் போன்றவைகளை வழங்குதல்.
- ✓ வர்த்தக ஒன்றியங்கள், பொருள் அனுப்பும் முகவர்கள், சுங்க இல்ல முகவர்கள் ஆகியோருடன் கிரமமான கலந்துரையாடல்.
- ✓ பயிற்சி / விழிப்புனர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- ✓ பெயர் அட்டவணை, பகுப்பாய்வு, மதிப்பிடுதல் மற்றும் அமுலாக்கல் செயன்முறைகள் தொடர்பான விடயங்கள் பற்றி உலக சுங்க ஸ்தாபனத்துடன் கிரமமான தொடர்பினைப் பேணுதல்.
- ✓ உள்நாட்டு இறைவரித் திணைக்களம். நிதி அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,மது வரித் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் மற்றும் தொடர்பான முகவர்களுடன் தகவல் பரிமாற்றத்திற்காக கூட்டிணைப்பினை மேற்கொள்ளல்.

## இலங்கைச் சுங்கத்தின் அமைப்பக கட்டமைப்பு




சுருக்கக் குறிப்பு : சு.ப - சுங்கப் பணிப்பாளர்,
ப - பணிப்பாளர்

# இலங்கைச் சுங்கம்

## 2015

### பிரதான அலுவலர்கள்

**திரு. டபிள்யு.ஏ. சூலானந்த பெரேரா**
சுங்கப் பணிப்பாளர் நாயகம்
**திரு. ஏ. சேனாநாயக**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (மனிதவளங்கள்)
**திரு. ஆர்.பி.டி.ரி. செனவிரத்ன**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (பிராந்தியம்)
**திரு. ஏ. குலேந்திரன்**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அமுல்படுத்தல்)
**திரு. டீ.ஏ.ஐ. தரணகம**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அரசிறை மற்றும் சேவைகள்)
**திரு. எஸ்.ராஜேந்திரன்**
பதில் சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு)
**திரு. டீ.யூ.எஸ். விக்ரமஆராச்சி**
பிரதம நிதி அலுவலர்
**திரு. கே.ஏ.டீ.ஆர்.கிறிஸ்ரி**
சுங்கப் பணிப்பாளர் (தடுப்பு)
**திரு. எம். பாஸ்கரன்**
சுங்கப் பணிப்பாளர் (சமூகப் பாதுகாப்பு)
**திரு. கே.ஏ. தர்மசேன**
சுங்கப் பணிப்பாளர் (இணக்கப்பாடு மற்றும் இலகுபடுத்தல்)
**திரு. எச்.டீ.ஏ.ஏ.கே. சுபசிங்க**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய விசாரணை)
**திரு. ஜே.பீ. சந்திரரத்ன**
சுங்கப் பணிப்பாளர் (சட்ட அலுவல்கள்)
**திரு. யு. லியனகே**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய புலனாய்வு)
**திரு. எஸ்.பீரிஸ்**
சுங்கப் பணிப்பாளர் (பிரகடனங்கள்)
**திரு. எம். அசோகன்**
சுங்கப் பணிப்பாளர் (கைத்தொழில் சேவைகள்)
**திரு. ஜீ.ஏ.எல். காமினி**
சுங்கப் பணிப்பாளர் நாயகம் (ஏற்றுமதி)
**திரு. ரீ.ஏ.எல்.வீரசிங்க**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய சரக்குப் பரிசோதனை)
**திரு. பீ.கே. பந்துல**
சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை – கொழும்பு)
**திரு. டீ.யு.என்.ஆர். உடுவாவல**
சுங்ப் பணிப்பாளர் (பயணிகள் சேவை – கட்டுநாயக)
**திருமதி. டீ.யு.எல்.பீரிஸ்**
சுங்கப் பணிப்பாளர் (அரசிறை மற்றும் சேவைகள் - கட்டுநாயக)
**திரு. எம். ரவீந்ரகுமார்**
சுங்கப் பணிப்பாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராச்சி)
**திரு. ரீ. நந்தசிறி**
சுங்கப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல்)
**திரு. ரீ.டபிள்யு.ஏ. சேனாநாயக**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய பெறுமதி மதிப்பீடு)
**திரு. ஆர்.லமாஹேவ**
சுங்கப் பணிப்பாளர் (விசேட சேவைகள்)
**திரு. எஸ்.எம். பியதிஸ்ஸ**
சுங்கப் பணிப்பாளர் (பொருள் விநியோகங்கள்)
**திரு. கே.ஜீ.பீ. புஷ்பகுமார**
சுங்கப் பணிப்பாளர் (மனிதவள முகாமை)
**திரு. ஈ.ஏ. ரத்னசீல**

சுங்கப் பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி)
**திருமதி. ரம்யகாந்தி**
சுங்கப் பணிப்பாளர் (ஊழியர் சேவை)
**திரு. கே.டீ. நிக்லஸ்**
சுங்கப் பணிப்பாளர் (அரசிறை செயலணி)
**திரு. என். வாசலதிலக**
சுங்கப் பணிப்பாளர் (வருவாய்கள் மற்றும் சேவைகள் - மாகாணம்)
**திரு. எம்.ஆர். ராஜ்மோகன்**
சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை- மாகாணம்)
**திரு. எஸ்.மகேசன்**
பிரதிப் பணிப்பாளர் (மேல் முறையீடு)
**திரு. ஈ.ஏ. ரத்னசீல**
பணிப்பாளர் (உற்பத்தி வரி)
**திரு. என்.எம்.டீ. நவரத்ன**
பிரதம கணக்காளர்
**திரு. நளீன் ஓசன்**
பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
**திரு. யு.எஸ்.வணபுஸ்ப**
பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரவியல்)

# ஒட்டுமொத்த செயலாற்றுகை 2015

**அரசிறை சேகரிப்பு - 2015**

தேசிய வரி வருமானத்தினதொரு பங்காக*




*தற்காலிய தரவு

* மத்திய வங்கி, வருடாந்த அறிக்கை 2015

**இறக்குமதி மூலமான அரசிறை சேகரிப்பு – 2015 வரிச் சேர்க்கை**

| வகை | (ரூபா மில்லியன்) | மொத்தத்தின் ஒரு விகிதமாக |
|---|---|---|
| | | |
| இறக்குமதிகள் தொடர்பிலான பெறுமதி சேர் வரி | 83,726 | 12% |
| சுங்க இறக்குமதித் தீர்வை | 108,116 | 15% |
| இறக்குமதி செஸ் அறவீடு | 42,467 | 6% |
| துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி | 56,733 | 8% |
| உற்பத்தி வரி | 352,298 | 50% |
| விசேட பண்ட அறவீடு | 52,276 | 7% |
| தேச கட்டுமான வரி | 15,895 | 2% |
| ஏனையவை | 2,747 | 0% |



# இலங்கைச் சுங்கத்திலான அரசிறை சேகரிப்பு - 2015

| வருவாய் குறியீடு | விபரம் | மீளமைக்கப்பட்ட இலக்க (ரூபா மில்) | 2015 ஜனவாரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான செயலாற்றுகை (ரூபா மில்) | | | | 2014 மற்றும் 2015ஆம் ஆண்டின் ஜனவாரி தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான ஒப்பீட்டாய்வு(ரூபா மில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இலக்க | அடையப்பெற்றவை | வேறுபாடு | % | 2014 | 2015 | வேறுபாடு | % |
| **சர்வதேச வியாபாரம் தொர்பிலான வரிகள்** | | | | | | | | | | |
| 1001.01.00 | இறக்குமதித் தீர்வை | 92,000 | 96,000 | 108,116 | 16,116 | 118 | 77,726 | 108,116 | 30,390 | 139 |
| 1001.02.00 | ஏற்றுமதித் தீர்வை | 60 | 25 | 33 | -27 | 56 | 24 | 33 | 9 | 139 |
| 1001.04.00 | துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 95,000 | 55,000 | 56,733 | -38,267 | 60 | 68,646 | 56,733 | -11,913 | 83 |
| 1001.05.01 | செஸ் அறவீடு - இறக்குமதி | 42,000 | 50,000 | 42,467 | 467 | 101 | 35,622 | 42,467 | 6,845 | 119 |
| 1001.05.02 | செஸ் அறவீடு – ஏற்றுமதி | 3,400 | 4,000 | 2,713 | -687 | 80 | 3,085 | 2,713 | -371 | 88 |
| 1001.08.00 | விசேட பண்ட அறவீடு | 56,000 | 80,000 | 52,276 | -3,724 | 93 | 47,953 | 52,276 | 4,323 | 109 |
| **மொத்தம்** | | **288,460** | **285,025** | **262,339** | **-26,121** | **91** | **233,057** | **262,339** | **29,282** | **113** |
| **உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்)** | | | | | | | | | | |
| 1002.05.01 | உற்பத்தி வரி – சிகரெட்டுகள் | 80,000 | 75,000 | 79,981 | -19 | 100 | 57,204 | 79,981 | 22,776 | 140 |
| 1002.05.02 | உற்பத்தி வரி – மதுபானம் | | | 0 | 0 | | 12 | 0 | -12 | 0 |
| 1002.05.03 | உற்பத்தி வரி – பெற்றோலியம் | 34,000 | 50,000 | 45,092 | 11,092 | 133 | 28,732 | 45,092 | 16,360 | 157 |
| 1002.05.04 | உற்பத்தி வரி – மோட்டார் வாகனம் | 240,000 | 125,000 | 223,414 | -16,586 | 93 | 76,435 | 223,414 | 146,979 | 292 |
| 1002.05.99 | உற்பத்தி வரி – ஏனையவை | 10,000 | 7,800 | 3,812 | -6,188 | 38 | 3,087 | 3,812 | 725 | 123 |
| **மொத்த உற்பத்தி வரி வருமானம்** | | **364,000** | **257,800** | **352,298** | **-11,702** | **97** | **165,471** | **352,298** | **186,827** | **213** |
| **இறக்குமதிகள் மீதான ஏனைய உள்நாட்டு வரிகள்** | | | | | | | | | | |
| **1002.01.04** | இறக்குமதிகள் மீதான பெ.சே.வரி | 90,000 | 145,000 | 83,726 | -6,274 | 93 | 102,281 | 83,726 | -18,554 | 82 |
| **1002.12.03** | தேச கட்டுமான வரி | 18,000 | 20,000 | 15,895 | -2,105 | 88 | 16,089 | 15,895 | -194 | 99 |
| **இறக்குமதிகள் மீதான மொத்த உள்நாட்டு வரிகள்** | | **108,000** | **165,000** | **99,621** | **-8,379** | **92** | **118,370** | **99,621** | **-18,749** | **84** |
| **வரியல்லா வருமானம்** | | | | | | | | | | |
| **2003.02.17** | ஆடைகளது விற்பனை | 95 | 95 | 122 | **27** | 128 | 89 | 122 | 32 | 136 |
| **2003.02.99** | ஏனைய பெறுவனவுகள் | | | | | | | | | |
| **2003.99.00** | பலவகை சில்லறைப் பொருள்கள் | | | | | | | | | |
| **2003.03.00** | தண்டங்களும் பறிமுதல்களும் | 3,000 | 3,000 | 1,129 | **-1871** | 38 | | 1,129 | 1,129 | |
| **மொத்த வரியல்லா வருமானம்** | | **3,095** | **3,100** | **1,251** | **-1,844** | **40** | **89** | **1,251** | **1,162** | **1,401** |
| **மொத்த வரி வருமானம்** | | **760,460** | **707,825** | **714,258** | **-46,202** | **94** | **516,897** | **714,258** | **197,361** | **138** |
| | | | | | | | | | | |
| **மொத்த வருமானம்** | | **763,555** | **710,925** | **715,509** | **-48,046** | **94** | **516,987** | **715,509** | **198,523** | **138** |

*தற்காலிக எண்கள்* தரவு மூலம் – நிதிப் பணிப்பகம் - இலங்கைச் சுங்கம்

## அதிகூடிய அரசிறையினை ஈட்டித்தருகின்ற முதல் ஐம்பது பண்டங்கள் - (இயைபு முறைத்தலைப்பு வாரியாக)

| மட்டம் | இ.மு அத்தியாயம் | விபரம் | மொத்த வரி (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 87 | மோட்டார் வாகனங்கள் | 244,522,216,021 |
| 2 | 27 | பேற்றோலிய தயாரிப்புகள் | 89,435,791,212 |
| 3 | 84 | இயந்திர மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் | 22,323,081,250 |
| 4 | 15 | பாம் எண்ணெய் , பாம் ஸ்டியரின் மற்றும் மாஜரின் | 20,222,147,308 |
| 5 | 04 | பால் தயாரிப்புகள் | 18,968,870,390 |
| 6 | 25 | சீமெந்து மற்றும் சீமெந்து உருக்காங்கல் | 18,721,309,924 |
| 7 | 39 | பிளாஸ்ரிக்குகளும் அவற்றினது பொருள்களும் | 16,739,331,694 |
| 8 | 85 | மின்சார உதிரிப்பாகங்கள் | 15,527,881,085 |
| 9 | 17 | சீனியும் மற்றும் சீனி மிட்டாய் வகைகளும் | 13,281,278,411 |
| 10 | 72 | இரும்பும் உருக்கு இரும்பும் | 12,170,602,285 |
| 11 | 22 | பானங்கள் | 11,666,825,086 |
| 12 | 69 | மட்பாண்ட பொருள்கள் | 10,305,078,195 |
| 13 | 07 | உண்ணத்தகு மரக்கறிகளும் கிழங்குகளும் | 10,246,656,207 |
| 14 | 48 | கடதாசியும் கடதாசியட்டையும் | 9,404,934,323 |
| 15 | 40 | இறப்பரும் மற்றும் அவற்றினது பொருள்களும் | 9,133,697,410 |
| 16 | 73 | இரும்பு அல்லது உருக்கு இரும்பினது பொருள்கள் | 7,890,990,161 |
| 17 | 10 | ஓடு நீக்கப்படாத தானியங்கள் | 5,399,912,506 |
| 18 | 38 | பல்வகை இரசாயன தயாரிப்புகள் | 5,266,888,021 |
| 19 | 08 | உண்ணத்தக்க பழங்களும் விதைகளும் | 4,081,298,348 |
| 20 | 62 | ஆடை மற்றும் துணிமணிகளது பொருள்களும், பின்னப்படாதவை | 3,940,608,723 |
| 21 | 33 | வாசனைத்திரவியங்களது கலப்பு | 3,843,670,114 |
| 22 | 19 | மோல்ட் பிரித்தெடுப்புகளும் மற்றும் தயாரிப்புகளும் | 3,195,912,456 |
| 23 | 55 | மனிதரால் செய்யப்பட்ட இழை நார்கள் | 3,099,542,359 |
| 24 | 70 | கண்ணாடியும் கண்ணாடிப் பொருள்களும் | 2,995,269,899 |
| 25 | 32 | தோல் பதனிடும் அல்லது சாயந்தோய்க்கும் வடிசாறுகள் | 2,990,550,628 |
| 26 | 09 | கோப்பி, தேயிலை, மேற் நறுமணசரக்குகள் | 2,804,201,659 |
| 27 | 52 | பருத்தி | 2,679,941,347 |
| 28 | 16 | இறைச்சியினது அல்லது மீனினது அல்லது சிப்பிகளது தயாரிப்புகள் | 2,621,403,559 |
| 29 | 76 | அலுமினியமும் அவற்றினது பொருட்களும் | 2,527,687,591 |
| 30 | 23 | உணவுக்கைத்தொழிலிலி இருந்து கிடைக்கும் எச்சங்களும் கழிவுகளும் | 2,516,608,685 |
| 31 | 94 | தளபாடங்களும் முன்னமே தயாரிக்கப்பட்ட கட்டிடங்களும் | 2,507,622,092 |
| 32 | 83 | மூல ஊலோகங்களிலான நானவித பொருட்கள் | 2,434,524,455 |
| 33 | 29 | சேதனவுறுப்பு இரசாயன பொருள்கள் | 2,373,925,086 |
| 34 | 21 | நானாவிதங்களும் உண்ணத்தகு தயாரிப்புகளும் | 2,364,370,652 |
| 35 | 03 | மீன், ஓட்டுப்பிராணிகள | 2,218,104,408 |
| 36 | 20 | மரக்கறிகள், பழங்கள், விதைகளது தயாரிப்புகள் அல்லது தாவரங்களது பிற பாகங்கள் | 2,204,832,186 |
| 37 | 31 | வளமாக்கிகள் | 1,983,912,342 |
| 38 | 34 | சவர்க்காரம், மேற்பாகத்தாக்கு பொருட்கள், சலவைத் தயாரிப்புகள் | 1,861,753,020 |
| 39 | 44 | மரமும் மரத்திலான பொருள்களும் | 1,797,338,722 |
| 40 | 68 | கல்லால், சாந்தினால், சீமெந்திலான மூலப்பொருட்களிலானவை | 1,778,987,781 |
| 41 | 96 | பலவித உற்பத்திசெய்த பொருட்கள் | 1,766,297,066 |
| 42 | 28 | அசேதன இரசாயனங்கள் | 1,724,546,798 |
| 43 | 90 | ஒளியியல், நிழற்படவியல், சலனப்படவியல் உதிரிப்பாகங்கள் | 1,676,844,590 |
| 44 | 74 | செம்பும் அவற்றினது பொருட்களும் | 1,486,275,914 |
| 45 | 18 | கொக்கோவும் கொக்கோ தயாரிப்புகளும் | 1,280,136,131 |
| 46 | 82 | மூல உலோகத்திலான கருவிகள்,துணைக்கருவிகளின் தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி, கரண்டிகளும் சுவர் முட்களும் | 1,218,826,800 |
| 47 | 60 | பின்னப்பட்ட அல்லது வலைப்பின்னல் செய்யப்பெற்ற துணிகள் | 1,217,397,948 |
| 48 | 64 | காலணிகள் | 1,178,029,290 |
| 49 | 61 | ஆக்கப்பட்ட புடவைப்பொருட்களும் ஆடைதுணிப்பொருட்களும் | 1,001,089,307 |
| 50 | 11 | அரையல் தொழிற்சாலைகளது தயாரிப்புகள் | 994,977,365 |

## குறிப்பிடத்தக்க வருவாயினை ஈட்டித்தருகின்ற பண்டங்கள் - இறங்குவரிசையில் - 2015

| விபரம் | மொத்த வரி (ருபா) | மொத்த வருவாய்க்கு எதிரானதொரு விகிதமாக (%) |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 244,522,216,021 | 39% |
| எரிபொருட்களும் எண்ணெய்களும் | 89,435,791,212 | 14% |
| இயந்திர சாதனங்கள் | 22,323,081,250 | 4% |
| பாம் எண்ணெய் , பாம் ஸ்டியரின் மற்றும் மாஜரின் | 20,222,147,308 | 3% |
| பால் தயாரிப்புகள் | 18,968,870,390 | 3% |
| சீமெந்து மற்றும் சீமெந்து உருக்காங்கல் | 18,721,309,924 | 3% |
| பிளாஸ்ரிக்குகளும் அவற்றினது பொருள்களும் | 16,739,331,694 | 3% |
| மின்சார உதிரிப்பாகங்கள் | 15,527,881,085 | 2% |
| சீனியும் மற்றும் சீனி மிட்டாய் வகைகளும் | 13,281,278,411 | 2% |
| இரும்பும் உருக்கு இரும்பும் | 12,170,602,285 | 2% |
| ஏனையவை | 153,465,518,387 | 25% |



## அரசிறை சேகரிப்பினது ஒப்பீட்டாய்வு – 2014 மற்றும் 2015

(ரூபா மில்)

| | 2014 | 2015 | வேறுபாடு |
|---|---|---|---|
| **சர்வதேச வியாபாரம் தொர்பிலான வரிகள்** | | | |
| இறக்குமதித் தீர்வை | 77,726 | 108,116 | 30,390 |
| ஏற்றுமதித் தீர்வை | 24 | 33 | 9 |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 68,646 | 56,733 | -11,913 |
| செஸ் அறவீடு - இறக்குமதி | 35,622 | 42,467 | 6,845 |
| செஸ் அறவீடு – ஏற்றுமதி | 3,085 | 2,713 | -371 |
| விசேட பண்ட அறவீடு | 47,953 | 52,276 | 4,323 |
| சர்வதேச வியாபாரம் தொர்பிலான மொத்த வரிகள் | 233,056 | 262,338 | 29,283 |
| **உற்பத்தி வரி** | | | |
| உற்பத்தி வரி – சிகரெட்டுகள் | 57,204 | 79,981 | 22,776 |
| உற்பத்தி வரி – மதுபானம் | 12 | 0 | -12 |
| உற்பத்தி வரி – பெற்றோலியம் | 28,732 | 45,092 | 16,360 |
| உற்பத்தி வரி – மோட்டார் வாகனம் | 76,435 | 223,414 | 146,979 |
| உற்பத்தி வரி – ஏனையவை | 3,087 | 3,812 | 725 |
| **மொத்த உற்பத்தி வரி வருமானம்** | **165,471** | **352,298** | **186,827** |
| **இறக்குமதிகள் மீதான ஏனைய வரிகள்** | | | |
| இறக்குமதிகள் மீதான பெ.சே.வரி | 102,281 | 83,726 | -18,554 |
| தேச கட்டுமான வரி | 16,089 | 15,895 | -194 |
| **இறக்குமதிகள் மீதான மொத்த ஏனைய வரிகள்** | **118,370** | **99,621** | **-18,749** |
| வரியல்லா வருமானம் | | | |
| ஆடைகளது விற்பனை | 89 | 122 | 32 |
| பலவகை சில்லறைப் பொருள்கள் | | | |
| தண்டங்களும் பறிமுதல்களும் | | 1,129 | 1,129 |
| மொத்த வரியல்லா வருமானம் | **89** | **1,251** | **1,162** |
| **மொத்த வரி வருமானம்** | **516,897** | **714,258** | **197,361** |
| **மொத்த வருமானம்** | **516,987** | **715,509** | **198,523** |

## அரசிறை சேகரிப்பினது ஒப்பீட்டாய்வு – 2014 மற்றும் 2015



## மோட்டார் வாகன இறக்குமதி வரி வருமானம்

| | அரசிறை (ரூபா. மில்) | | |
|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 |
| ஜனவரி | 6,110 | 4,809 | 13,405 |
| பெப்ரவரி | 3,900 | 4,159 | 11,481 |
| மார்ச் | 5,778 | 5,558 | 23,138 |
| ஏப்ரல் | 6,648 | 6,577 | 17,466 |
| மே | 6,821 | 3,291 | 19,213 |
| ஜுன் | 6,985 | 7,916 | 23,508 |
| ஜுலை | 9,300 | 6,070 | 23,825 |
| ஆகஸ்ட் | 9,302 | 5,521 | 26,387 |
| செப்டம்பர் | 7,464 | 7,384 | 22,380 |
| ஒக்டோபர் | 8,433 | 7,410 | 27,211 |
| நொவம்பர் | 7,029 | 12,545 | 20,887 |
| டிசம்பர் | 6,515 | 21,080 | 15,282 |
| **மொத்தம்** | **84,285** | **92,320** | **244,183** |



# அமுல்படுத்தல் கொத்தணி

# தடுப்புப் பணிப்பகம்

## அறிமுகம்

தடுப்புப் பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் பிரதானமான சட்ட அமுலாக்கல் கரமாகச் செயற்பட்டுவருகிறது. குறிப்பாக கப்பற்துறைமுகங்கள், கரையோரப் பிரதேசங்கள், கடல் வழிப்பாதைகள் மற்றும் எல்லைப்புற கடற்பிரதேசங்கள், சர்வதேச விமானநிலையங்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள், ஏற்றுமதிச் செயலாக்கல் வலயங்கள், பொருள் சோதனைச் சாலைகள் மற்றும் உள்நாட்டு வெளியாக்கல் நிலையங்கள் போன்ற சுங்கத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டுப் பிரதேசங்கள் குறித்தான கண்காணிப்பினை மேற்கொண்டு வருகிறது.

இது நிர்வாகம்,“பீ” கிளை, செயற்பாடுகள், புலன்விசாரணைகள், கடல் சார் பிரிவு, பாரிய-கப்பற்துறை கண்காணிப்பகம், விற்பனைகள், மற்றும் தீவு முழுவதிலும் கரையோர நகரங்களில் உபாய முறையில் நிறுவப்பட்டுள்ள அனேக உப தடுப்புக் காரியாலயங்கள் ஆகிய பல்வேறு கிளைகளைக் கொண்டுள்ளது.

### பிரதான தொழிற்பாடுகள்

1. கள்ளக்கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைத் தடுத்தல்.
2. சுங்க குற்றமிழைப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளல்.
3. சுங்க குற்றமிழைப்புக்களை அதன் ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்தல், தவறான பொருட்களை பறிமுதல் செய்தல், குற்றமிழைத்தோருக்கு எதிராக புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மற்றும் வழக்குத்தொடர்தல்களையும் மேற்கொள்ளல்.
4. உரிய அரசிறைச் சேகரிப்பை உறுதிப்படுத்தல்.
5. நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழலியல்/ சுற்றால் சார்ந்த சிறப்பம்சங்களைப் பாதுகாப்பதோடு, இவற்றுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அமுலாக்கத்தைப் பேணுதல்.
6. கொழும்புத் துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேற்கொள்ளல்.
7. படகுகளின் நடமாட்டத்தையும் மற்றும் எல்லைப்புற செயற்பாடுகளையும் கட்டுபடுத்தல்.
8. இலங்கைச் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும் பொருட்களை விற்றுத்தீர்த்தல்.

### 1. கடத்தல், வர்த்தக ரீதியான மோசடிகள், மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் போன்றவற்றைத் தடுத்தல்.

கோட்டை தடுப்பு அலுவகத்தின் அமைவிடம் மாற்றப்பட்டதோடு, பிரதான அலுவலகத்திலிருந்த கிளை அலுவலகங்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு உள்ளேயும் மற்றும் வெளியேயுமான 03 இடங்களுக்கு இடமாற்றப்பட்டன. தற்போது தடுத்தல் நிர்வாகக் கிளை அலுவலகமும் தடுத்தல் அலுவலகப் பணிப்பாளரும் சுங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளன. இவை தவிர, திருகோணமலை, காலி, கொக்கலை, நீர்கொழும்பு மற்றும் சின்னப்படு ஆகிய குறிப்பான பாரிய கரையோரப் பிரதேசங்களில் பல “உப-தடுப்பு அலுவலகங்கள்” உள்ளன.

மேற்படி அலுவலகங்களிலுள்ள தடுப்பு அதிகாரிகள், நாட்டிற்குள் நோக்கியதும் மற்றும் நாட்டிலிருந்து வெளிநோக்கியதுமான கடத்தல்கள், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களை தடுப்பதற்கான ஆக்கபூர்வமானதும் முனைப்பானதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இது தவிர, சுதந்திர வர்த்தக வலயங்களில் கடமையாற்றும் தடுப்பு அதிகாரிகள் அவ்வலயங்களிலிருந்து தீர்வை விதிக்கப்படத்தக்க பொருட்களின் இரகசிய வெளியாக்கல்களைத் தடுக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

நாட்டில் சமாதானம் நிலவியதன் பின்னர், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலும் அதன் உப-தடுப்பு அலுவலகங்களை மீளத்தொடங்குவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம் எடுத்துள்ளது. இருந்தபோதிலும், சுங்கத்திற்கான படகுகள் மற்றும் பயிற்றப்பட்ட அதிகாரிகள் இன்மையின் காரணத்தால் கடல் சார்ந்த நடவடிக்கைகளை திணைக்களத்தினால் மீள-ஆரம்பிக்க முடியாமற்போனது. எனினும், இவ்விடயம் தொடர்பில்

ஆராயும் நோக்கிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அது பற்றிய விரிவானதொரு அறிக்கையும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை கப்பற்துறைமுகம் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் போன்ற இடங்களில் தற்போது தடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2. கண்டுபிடிப்புகள், பறிமுதல்கள், புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுப்புகள்.**

தடுப்புப் பணிப்பகத்திற்கு பல்வேறு சுங்க-குற்றச்செயல்கள் (கடத்தல், வர்த்தக மோசடிகள், மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்கள்) பற்றிய தகவல்கள் பிரதானமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழிமுறைகள் மூலம் கிடைக்கப்பெறுகிறது :

(அ) தடுப்புப் பணிப்பகத்திலுள்ள அதிகாரிகளின் தனிப்பட்ட தகவலாளர்கள்.

(ஆ) பொதுமக்கள் தகவலாளர்கள்

இவை தவிர, தடுப்பு அலுவலக அதிகாரிகள் தமது சொந்த முயற்சிகளின் பேரில் சரக்குப் பட்டியல் விபரம் மற்றும் இறக்குமதி வெளியாக்கல் ஆவணங்கள் போன்றவற்றை கண்டறிந்து பல்வேறு மோசடிச் செயற்பாடுகளை அடையாளங்கண்டிருந்தனர். மோசடிமிக்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை கண்டு பிடிப்பதற்கான இணையம் மூலமான வசதியானது கைமுறை மூலமான சரக்குப் பட்டியல் விபரம் மற்றும் சுங்கப்பிரகடனம் போன்றவற்றைக் கொண்டு கண்டு பிடிப்பதை விடவும் அதிகம் வழியமைத்துள்ளது.

தடுப்புப் பணிப்பகத்தின் மதிநுட்பம் மிக்க செயற்பாடுகள் சோதனைச் செயற்பாடுகளையும் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளதோடு, கடத்தப்பட்ட அல்லது சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்படாத பொருட்களைக் கண்டறிவதற்கும் வழிவகுத்துள்ளது. தடுப்பு அதிகாரிகளால் புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடரல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரிதாகவுள்ள மனித வளங்களின் பயனுறுதிமிக்க தன்மையினை சுங்க அமுலாக்கல் பிரிவின் மூலம் மேம்படுத்தும் வகையில் பொருத்தமான இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியினைப் பெறுவதற்கான கோரிக்கையினை அமுல்படுத்தவேண்டிய தேவை காணப்படுகிறது. மேலும், அமுலாக்கல் செயற்பாடுடன் தொடர்புடைய இலக்குகள் மற்றும் கடமைகள் தொடர்பான விசேட அவதானத்தைக் கொண்ட திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டங்களை தடுப்பு அலுவலக அதிகாரிகளுக்கு நடத்துவதும் அவசியமாகவுள்ளது.

**3. அரசுக்குரிய வருமானச் சேகரிப்பினை உறுதிசெய்தல்**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களிலிருந்தான அரசிறையினை சேகரித்தல் சுங்கத்தின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்றாகும். நம்பிக்கை மிக்க வர்த்தகர்களுக்காக சுங்கத் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட நீண்டகால அடைவுடைய வர்த்தக வசதியேற்பாட்டு நடவடிக்கைகள், அரசிறையினைச் செலுத்தாது சுங்கத்தினூடாக தப்பித்துச் செல்லும் மோசடிச் செயற்பாடுகள் தொடர்பிலான தீர்வினை ஓரளவு வழங்கியுள்ளது. அனேக வர்த்தகர்கள் சட்டத்தை மதித்து இணக்கப்பாடுகளை தன்னார்வமாக விரும்புபவர்களாகவிருக்கும் அதேவேளை, தமது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சரியாக விபரிக்காத, குறை மதிப்பிடுகின்ற அல்லது வெளிப்படுத்துகை செய்யாத சில தீய சக்திகளும் உள்ளனர்.

**2015 ஆம் ஆண்டின் போது தடுப்புப் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை விடயங்களின் விபரங்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 5234 |
| முடிவுறுத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 4809 |
| குற்றங்களென தீர்மானிக்கப்பட்ட மற்றும் பறிமுதல்கள் / அபராதங்கள் விதிக்கப்பட்டவை பற்றிய விசாரணைகளின் எண்ணிக்கை | 234 |
| சேகரிக்கப்பட்ட அபராதங்களதும் பறிமுதல்களதும் மொத்த எண்ணிக்கை (ரூபா.மில்) | 518 |
| மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.மில்) | 69 |
| சேகரிக்கப்பட்ட மொத்தத் தீர்வை (உள்நாட்டு விற்பனைகள்) (ரூபா.மில்) | 29 |
| மேலதிக நேர அல்லது ஏனையவை தொடர்பிலான மொத்த அறவீடுகள் (ரூபா.மில்) | 763 |
| **மொத்த சேகரிப்பு (ரூபா.மில்)** | **1,379** |

**4. நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார, சூழலியல் மற்றும் சுற்றாடல் சார்ந்த நலன்களை பாதுகாத்தலும், மற்றும் தொடர்புபட்ட சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்தலும்.**

தடுப்புப் பணிப்பகத்தினால் நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார, சூழலியல் மற்றும் சுற்றாடல் சார்ந்த நலன்களை அதன் நடவடிக்கைகள் மூலமாக பாதுகாக்க முடிந்துள்ளது.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கும் மேலாக, கீழே குறிப்பிடப்பட்டன போன்ற ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய சட்டங்களுடன் இணங்கிச் செல்வதனையும் தடுப்புப் பணிப்பகத்தின் அலுவலர்கள் உறுதிசெய்கின்றனர் :

1. ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் சட்டம்
2. தாவர, விலங்கினச் சட்டம்
3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம்
4. ஒப்பனைப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் ஔடதங்கள் சட்டம்
5. தொலைத் தொடர்பு ஒழுங்குவிதி ஆணைக்குழுச் சட்டம்
6. உணவு மற்றும் மருந்துகள் சட்டம்
7. வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்
8. புலமைச் சொத்துரிமைச் சட்டம்

**5. கொழும்பு துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஆகிய தொடர்பான கண்காணிப்பு**

கொழும்புத் துறைமுகம் தொடர்பிலான கண்காணிப்பினை இப்பணிப்பகத்தின், துறைமுக தடுப்பு அலுவலகம் மற்றும் கொச்சிக்கடை தடுப்பு அலுவலகம் ஆகிய இரண்டு பிரிவுகளும் மேற்கொள்வதோடு, இவை முறையே துறைமுகப் பிரதேசம் மற்றும் கொச்சிக்கடைப் பிரதேசம் போன்றன தொடர்பிலான கண்காணிப்பிற்கு பொறுப்பாகவுள்ளன. கொழும்புத் துறைமுகத்தைப் பொறுத்தவரை, துறைமுகத் தடுப்பு அலுவலகத்திலுள்ள தரைமார்க்க கடமை அதிகாரியும் மற்றும் கொச்சிக்கடை தடுப்பு அலுவலகத்திலுள்ள கொச்சிக்கடை கடமை அதிகாரியும் தொடர்ச்சியான சேவையில் ஈடுபடுவதனால், இவ் அலுவலகங்கள் ஒருபோதும் மூடப்படுவதில்லை. இவ் அதிகாரிகள் மேற்படி பிரதேசங்கள் உரிய முறையில் ஆட்களைக் கொண்டு சிறப்பாக தொழிற்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் நுழைவாயில்களில் பார்வையிடுகின்றனர்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் ஆகியன நய்க்கந்தவிலுள்ள உப-தடுப்பு அலுவலகத்தினால் கண்காணிக்கப்படுவதோடு, பியகம உப-தடுப்பு அலுவகத்தினால் பியகம சுதந்திர வர்த்தக வலயம் கண்காணிக்கப்படுகிறது.

இருப்பினும், பல்லேகல, ஹொரண, மீரிகம போன்ற இடங்களிலுள்ள ஏற்றுமதிச் செயலாக்க வலயங்கள் தடுப்புப் பணிப்பகத்தின் கண்காணிப்பின் கீழ் இல்லை. எனினும், சுங்கம் தொடர்பான அம்சங்களை முன்னெடுப்பதற்கு மேற்படி வலயங்களில் உப-தடுப்பு அலுவகங்களைத் தாபித்தல் அல்லது ஏனைய உப-தடுப்பு அலுவலகங்களின் அதிகாரிகளை அங்கு ஈடுபடுத்துவது அவசியமாகும்.

அண்மையில் செயற்பட ஆரம்பிக்கப்பட்ட டிகோவிட்ட மீன்பிடித்துறைகத்திலான அலுவலக செயற்பாட்டினை தொடங்குவதற்கும் மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தவதற்குமான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய வசதிகள் வழங்கப்படவில்லை என்பதுடன் டிகோவிட்ட மீன்பிடித்துறைமுகத்திலான தடுப்பு அலுவலக செயற்பாடுள் இன்னமும் ஆரம்பிக்கப்படவுமில்லை.

**6. கப்பல்களின் நகர்வுகள் மற்றும் எல்லைப்புறச் செயற்பாடுகள் தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கை**

நான்கு பிரதான துறைமுகங்களிலும் (அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட) கப்பல்களின் இயக்கத்தைக் கண்காணிப்பதும் தடுப்புப் பணிப்பகத்தின் பொறுப்புக்களில் ஒன்றாகும். கொழும்புத் துறைமுகத்தில் இந்நடவடிக்கையானது துறைமுகத் தடுப்பு அலுவகத்தினால் கண்காணிக்கப்பட்டு வரும் அதேவேளை, காலி, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களில் இந்நடவடிக்கைகள் அந்தந்த துறைமுகத்தில் தாபிக்கப்பட்டுள்ள உப-தடுப்பு அலுவலகத்தினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

துறைமுகத் தடுப்பு அலுவலகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள துறைமுக கடமை அதிகாரி கப்பல்களின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக 24 மணி நேர தொடர்ச்சியான சேவையிலுள்ளார். இவர் கொழும்புத் துறைமுகத்தில் அழைப்பிலுள்ள கப்பல்களைப் பெறுவதோடு, இவை கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைவதற்கான ‘‘இறுதியான துறைமுக அழைப்பு’’ இலிருந்தான அனுமதியைப் பெற்றுள்ளமையையும் உறுதிப்படுத்துவார். மேலும், ஐ.எம்.ஓ. விமானப் பணியாளர்களின் வெளிப்படுத்தல்களையும் பரிசோதிப்பர். கொழும்பு துறைமுகத்தின் அழைப்பிலுள்ள ஒவ்வொரு கப்பலும் தொடர்பிலும் உள்வரும் சரக்குகள் பற்றிய வெளிப்படுத்துகை, கப்பலில் ஏற்றப்படும் பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை மற்றும் மாற்றியேற்றப்படும் பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை என்பன தொடர்பான விரபங்களை சமர்ப்பித்து அவற்றை வெளிப்படுத்துகை செய்வது உள்நாட்டுக் கப்பல் முகவரின் பொறுப்பாகவுள்ளது.

புறப்பட்டுச் செல்கின்ற ஒவ்வொரு கப்பலுக்கும் துறைமுக தீர்வை அதிகாரியால் ‘‘வெளிச்செல்வதற்கான வெளிப்படுத்துகை’’ வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தேவைப்பாடுகளும்

பூர்த்திசெய்யப்பட்டிருப்பதனை அந்தந்த கப்பலின் மாலுமிக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற கப்பலின் உள்நாட்டு முகவரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இது வழங்கப்படுகிறது.

தற்போதுள்ளவாறு, கப்பல் முகவர்கள் ஏற்றுமதிச் சரக்குகளின் வெளிப்படுத்துகை பற்றிய விபரங்களை தடுப்பு அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதில்லை. எனவே, வெளிச்செல்லத் தயாராகவுள்ள கப்பலிலுள்ள ஏற்றுமதிச் சரக்குகள் பற்றிய விபரங்கள் தொடர்பில் வெளிச்செல்லல் அனுமதியை வழங்குகின்ற அதிகாரி அறிந்திருக்கமாட்டார்.

**7. இலங்கைச் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும் பொருட்களை விற்றுத்தீர்த்தல்**

மத்திய பொருள் அகற்றுகைப் பிரிவானது திணைக்களத்தின் பல்வேறு அனைத்து பணிப்பகங்கள் மற்றும் பிரிவுகளினாலும் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுத்தீர்ப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை பகிரங்க ஏலமிடல் மூலம் விற்றுத் தீர்ப்பதற்கான அதிகாரத்தை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் வழங்குவதோடு, அத்தகைய ஏலமிடலின் போது நிதிசார் ஒழுங்குவிதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட வினைமனு விற்பனை நடைமுறை பின்பற்றப்படுகின்றன.

# சமூகப் பாதுகாப்புப் பணிப்பகம்

**அறிமுகம்**

சமூகப் பாதுகாப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சுங்கத்தின் பல்வேறு பணிப்பகங்களிலும் இயங்கிவந்த சம்பந்தப்பட்ட பிரிவுகளை இதனுடன் ஒருங்கிணைத்துத் தனியானதொரு பணிப்பகம் தாபிக்கப்பட்டது. குறிப்பாக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு, மற்றும் உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு ஆகியன சுங்கச்சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களை கண்டிப்பாக அமுல்படுத்துவத்தும் பிரிவுகளென இனங்காணப்பட்டுள்ளன.

**பிரதான தொழிற்பாடுகள்**

இப்பணிப்பகத்தின் தொழிற்பாடுகள், சுங்க நிலையங்களில் இடம்பெறுகின்ற வர்த்தகர்களுக்கு வசதியளிக்கும் வகையிலான சம்பந்தப்பட்ட சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அரசுக்குரிய வருமானத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை, போதைப்பொருள், உள நிலைமாற்ற மருந்துப்பொருட்களைக் கடத்திச் செல்வதை தடுத்தல்/ இடைமறித்தல், மற்றும் சுற்றாடல், உயிர்ப்பல்வகைமை, கலாசாரம், தேசிய மரபுரிமைகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் போன்றவற்றையும் பாதுகாத்தல்.

## போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, சமூக-பொருளாதார, சுற்றாடல் மற்றும் கலாச்சார நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளை, சுங்கச் சட்டங்களையும் மற்றும் இறக்குமதிகள், ஏற்றுமதிகள், அன்பளிப்புப் பொதியுடைய அஞ்சல்கள், கூரியர் சேவைகள், பயணிகள் மற்றும் பயணிகள் பொதிகள் போன்றனவற்றுடன் போதைப்பொருட்கள் மற்றும் உள நிலைமாற்ற மருந்துகளைக் கடத்துவதைத் தடுப்பதுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களையும் அமுல்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டதாகும்.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. விமானநிலையத்தில் 24 மணிநேர கண்காணிப்பு
2. விமானம் மூலமான சரக்குகள், கப்பல் சரக்குகள், தபால் மற்றும் கூரியர் பொருட்கள் தொடர்பில் எழுமாறான கண்காணிப்பு
3. ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக இடம்பெறக்கூடிய இறக்குமி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களோடு போதைப் பொருட்கள் மற்றும் உள நிலைமாற்றி மருந்துகள் ஆகியவற்றின் கடத்தல்களை இனங்கண்டு அவற்றைத் தடுத்தல்.
4. நம்பத்தகு தகவல்கள் குறித்தான புலன்விசாரணைகளை மேற்கொள்ளல்.
5. விழிப்பூட்டல் மற்றும் திறன் கட்டியெழுப்புகை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
6. முன்னோடி இரசாயனப் பொருள் இறக்குமதிகள், கப்பல் மாற்றி ஏற்றுகைகள், ஏற்றுமதிகள் போன்றன தொடர்பில் விழிப்புடன் செயற்படல்.
7. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்துடன் இணைந்து கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | உண்மை | இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம் |
|---|---|---|---|
| **(01) : பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள மனோவியாதி மருந்துகள் மற்றும் போதைப்பொருட்களின் கண்டுபிடிப்பு** | | | |
| 1. சந்தேகிக்கப்படும் ஆகாய மார்க்கங்களையும் பயணிகளையும் இலக்கு வைத்தல் | 100% | 100% | |
| 2. பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள போதைப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் வகையில் துல்லியமாக சோதனையிடுகின்ற பொருத்தமான இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல் | 100% | 0% | சோதனை இயந்திரம் கலந்துரையாடல் மட்டத்திலுள்ளது. |
| 3. பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் போதைப் பொருள் பிரிவில் கடமை புரியும் சுங்க உதவி அத்தியட்சகர்களது கடமை ஏற்பாடுகளுக்கு மேலாக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள ஏனைய அலுவலர்களால் அடிக்கடி சமுகமளிக்கப்படுவதுடன் குழுவாக சமுகமளிக்கும் போது அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | 100% | 100% | |
| **(02 ): கூரியர் சேவைகள் மற்றும் அஞ்சல் பொதியூடாக கள்ளமான முறையில் கடத்தப்படுகின்ற போதைப்பொருட்கள் மற்றும் மனோவியாதி மருந்துகளைக் கட்டுப்படுத்தல்** | | | |
| 1. உள்வருகின்ற பொதிகளை பரிசோதனை செய்யும் வகையில் அடிக்கடி சமுகமளித்தல் மற்றும் அத்தகைய பரிசோதனைகளிலிருந்தான முடிவுகளை அறிக்கையிடல் | 100% | 100% | |
| **(03) : யு.என்.ஓ.டீ.சீ. மற்றும் உலக சுங்க அமைப்பகம் என்பவற்றின் வழிகாட்டலுடன் கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறுவுதல்** | | | *** இத்தொழிற்பாடு தற்போது துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவினால் கையாளப்படுகின்றன |
| 1. கொள்கலன் வகைப்படுத்தல் முறையினை அமுல்படுத்தல் | 100% | 0% | |
| 2. வியாபாரச் சரக்குகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கான இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | 100% | 0% | |
| 3. சந்தேகத்திற்கிடமான கடல் மார்க்க மற்றும் இறக்குமதியாளர்கள் போன்வற்றை இலக்கு வைத்தல் | 100% | 0% | |
| 4. தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகத்திற்கிடமான கொள்கலன்களைச் சோதனைக்குட்படுத்தல் | 100% | 0% | |
| **04) : கரையோரப் பகுதிகளில் கடத்தப்படுகின்ற போதைப் பொருட்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் கண்காணித்தலும்** | | | |
| 1. எல்லை மாற்றுக் குற்றங்கள் மூலம் போதைப் பொருள் கடத்தலில் புதிய போக்குகளை அவதானித்தல் | 100% | 100% | |
| 2. திறந்த கடல் மார்க்கங்களூடாக போதைப் பொருட்களின் உட்பாச்சலினது தாக்கத்தை அறிந்துகொள்ளல் | 100% | 100% | |
| **(05) : விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்கள்** | | | |
| 1.தேவையினைக் குறைக்கும் வகையில் விழிப்புணர்வுத் திட்டத்தினை மேற்கொள்ளல் | 100% | 100% | |
| 2. என்.டீ.டீ.சீ.பீ. மற்றும் மனித வள அபிவிருத்திப் பணிப்பகம் என்பவற்றின் உதவியுடன் சுங்க அலுவலர்களைப் பயிற்றுவித்தல் | 100% | 100% | |
| **06) : ஏனைய முகவர்களுடன் கூட்டிணைப்பினைக் கட்டியெழுப்புதல்** | | | |
| 1. போதைப் பொருள் கடத்தல் பற்றிய நிலைமைகளை விருத்தி செய்யும் நோக்கில் என்.டீ.டீ.சீ.பி., ரீ.என்.பீ., கரையோரப் பாதுகாப்பு மற்றும் ஏனைய இதர முகவர்கள் போன்றவற்றுடன் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளல். | 100% | 100% | |

## உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு

**உயிர்ப் பல்வகைமை குறித்தான பாதுகாப்பு**

சமூகத்தையும் அதன் மரபுரிமைகளையும் பாதுகாத்துப் பேணுவதும் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் இலக்குகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இச்செயற்பாட்டின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பானது இன்றியமையாததொரு அம்சமாகும். இம்முயற்சியில் அனேக சர்வதேச மற்றும் உள்நாட்டு முகவரகங்கள் ஈடுபடுத்தப்படுவதோடு அவை இலங்கைச் சுங்கத்துடன் சிறந்த தொடர்பினையும் கொண்டுள்ளன. இலங்கைச் சுங்கமானது ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளில் பல்வகைமை தொடர்பிலான பல்வேறு சட்டங்களை அமுல்படுத்துவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு தீவாக விளங்குகின்ற இலங்கையானது தாவரம் மற்றும் விலங்கினப் பல்வகைமைகளைப் பெருமளவில் கொண்டும் திகழ்வதோடு,''மிகச்சிறந்த பல்வகைமை நிலையம்'' எனும் அந்தஸ்த்தைப் பெற்ற எட்டு பிராந்தியங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது.இதனால், தாவர மற்றும் விலங்கின வேட்டைக்காரர்களைக் கவரும் வகையில் எமது நாட்டின் தாவர மற்றும் விலங்குகளின் இனப்பரம்பல்களுக்கானதொரு மிகப்பெரிய கேள்வியினை சர்வதேச ரீதியில் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்குரிய அத்தகைய இனங்கள் தொடர்பிலான தனிச்சிறப்பம்சங்கள், அரிதான இனங்கள், அலங்காரப் பெறுமானம், அமைப்பு மற்றும் தரப் பண்பு போன்றனவும் கூட இத்தகையதொரு பெருமைக்கு மெருகூட்டியுள்ளன. அதேவேளை,கடத்தல் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற நவீன தொழில்நுட்பம் மற்றும் அதிநவீன முறைகள் போன்றன,உயிர்ப் பல்வகைமை தொடர்பில் கண்காணிப்பதிலும் சட்டங்களைப் பிரயோகிப்பதிலும் இலங்கைச் சுங்கத்திற்கு பாரிய சவாலாக விளங்குகின்றன.

இத்தகைய இலக்கினை அடைவதற்கான தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டே ஒரு **உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்புப் பிரிவு** தாபிக்கப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறுகின்ற தகவல்களின் பிரகாரம் இதுவே உலகின் முதலான**உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்புப் பிரிவு**என அறியப்படுகிறது.

**கலாசார மற்றும் தேசிய மரபுரிமை குறித்தான பாதுகாப்பு**

இலங்கை நாடானது, வரலாற்று ஏடுகளின் பிரகாரம் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பிருந்தே தனது கலாசார மற்றும் மரபுரிமை அம்சங்களை மரபு வழியில் கொண்டுவந்துள்ளது. இருப்பினும் கிடைக்கத்தகு சான்றுகளின் பிரகாரம்,இம்மரபுரிமை அம்சங்கள் வரலாற்றுக்கு முந்திய மற்றுமொரு இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக் முன்னராகவுள்ளன எனவும் மேலும் அது நூறு ஆயிரம் ஆண்டுகள் வரை தொடர்வதாகவும் அறியப்படுகின்றது.

நாட்டின் பெறுமதி மிக்க கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதும் அவற்றை சட்ட விரோதமாக கடத்திச் செல்வதைத் தடுப்பதும் சுங்கத் திணைக்களத்தின் இலக்குகளில் ஒன்றாக விளங்குகின்றது.

சுங்கத்தின் மறுசீரமைப்புச் செயற்பாட்டுக் காலப்பகுதியின் போது,**உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்பு** எனும் கிளையானது 2010 இல் உருவாக்கப்பட்டு அது சமூக பாதுகாப்புப் பணிப்பகத்தில் பேணப்பட்டது. இருப்பினும், கலாசார மற்றும் தேசிய மரபுரிமைச் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் நோக்கில் உயிர்ப் பல்வகைமைப் பிரிவின் நோக்கெல்லையானது மேம்படுத்தப்பட்டது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. உயிர் பல்வகையுடன் தொடர்புபட்ட தயாரிப்புகளை எடுத்துச்செல்லுவதுடன் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
2. சகல உயிர் பல்வகையுடன் தொடர்புபட்ட ஏற்றுமதிகள், இறக்குமதிகளின் விபரம், வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி மதிப்பிடல் தொடர்பில் பரிசோதித்தல்.
3. உயிர் பல்வகைமையுடன் தொடர்புபட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை, தாவர விலங்கின மற்றும் தொடர்புபட்ட தயாரிப்புகளது இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போதான தேவைப்பாட்டு அனுமதிப்பத்திரத்துடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்.
4. நாட்டினது உயிரியல் மரபுரிமைக்கு தீங்கு விளைவிக்காத விதத்திலான தாவர,விலங்கினக்கூறுகளின் சட்டரீதியான இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஊடாக நாட்டினதுஅபிவிருத்தித்திட்டங்களை ஊக்குவித்தல்.

**குறிப்பிடத்தக்க கண்டுபிடித்தல்கள்**

**கட்டுப்பாடு விதிக்கப்பட்ட நீர்வாழ் உயிரிகளைக் கடத்திச் செல்வதற்கானதொரு முயற்சி கண்டுபிடிக்கப்பட்டமை**

கட்டுப்பாடு விதிக்கப்பட்ட உயிர்வாழ்நிலை நன்னீர் மீன்களை நாட்டிலிருந்து கடத்திச் செல்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியை உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் 2015 பெப்ரவரி 28 இல் முறியடித்தனர். குறித்த மீன்களைக் கொண்ட பெட்டியில் டெபுள்ளியா (*Puntius cumingii*) எனப்படும் உயிர்வாழ் நிலையிலுள்ள 180 மீன்கள் காணப்பட்டதோடு, இவை தென்னாபிரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இம் மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு,இக்குற்றத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தண்டனையும் விதிக்கப்பட்டது. பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட குறித்த மீன்கள் தேசிய விலங்கியல் பூங்காவிடம் கையளிக்கப்பட்டன.

இது 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளமூலங்கள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தை (235 ஆம் அத்தியாயம்) மீறும் வகையிலானதொரு குற்றச் செயலாகும்.



**உயிர் வாழ்நிலை ஆமைகள் கண்டுபிடிக்கப்பட்டமை**

2015 ஜுலை 08 இல் பண்டாரநாயக்கா சர்வசேத விமானநிலையத்தின் விமானச் சரக்குகளுக்கான வாயில் ஊடாக கடத்திச்செல்லப்படவிருந்த சுமார் 488 சிறிய ஆமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது குறித்த இம்மாதத்தில் இடம்பெற்ற இரண்டாவது பறிமுதல் நிகழ்வாகும். இது ‘‘உயிர்வாழ் நண்டுகள்’’ என அடையாளம் பொறிக்கப்பட்டிருந்த பொதியொன்றை சோதனை செய்யும் போது சிறிய வன்மையான ஓடுகள் பொலித்தின் உறையினால் சுற்றி மூடப்பட்டிருப்பதை சுங்க அதிகாரிகள் கண்டனை. அவற்றை நெருங்கிப் பார்த்த வேளையில் சில ஓடுகளிலிருந்து தலைகள் வெளியே எட்டிப்பார்ப்பது போல் தெரிந்தன. இது உயிர்வாழ் ஆமைகள் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தியது. மலேசியா, கோலாலம்பூருக்கு கடத்திச் செல்லும் வகையில் இவ்வாறான ஏழு பொதிகள் காணப்பட்டன.

இத்தகையதொரு கண்டுபிடிப்பானது 2015.06.03 ஆம் திகதியும் இடம்பெற்றது. இதில் நாட்டிலிருந்து கடத்திச்செல்லப்படவிருந்த 124 சிறிய ஆமைகள் காண்டுபிடிக்கப்பட்டன. இலங்கையைச் சேர்ந்த பயணி ஒருவரின் பொதியை சோதனை செய்தபோதே இவ்வாறு குறித்த ஆமைகள் மறைத்துவைக்கப்பட்டிருந்தன. இக் குறித்த நபர் விமானநிலையத்தின் புறப்படும் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார். இவ் ஆமைகளும் கோலாலம்பூருக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக இருந்தவையாகும். இது தாவரம் மற்றும் விலங்கு பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தை (235 ஆம் அத்தியாயம்) மீறும் வகையிலானதொரு குற்றச்செயலாகும்.





**இலங்கைக்கேயுரிய விலைமதிப்பற்ற வள்ளப்பட்டை (*Gyrinops walla*) கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டமை**

2015 மார்ச்சு 10 ஆம் திகதி 4.6 கி.கி. எடையுள்ள வள்ளப்பட்டையினை இலங்கைப் பிரஜை ஒருவர் இந்தியாவுக்கு கடத்திச் செல்ல முற்பட்டபோது பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுகை நுழைவாயிலில் வைத்து பிடிக்கப்பட்டது.

2015 ஒக்டோபர் 13 ஆம் திகதி 23.3 கி.கி. எடையுள்ள வள்ளப்பட்டையினை இலங்கைப் பிரஜை ஒருவர் சாஜாவுக்கு கடத்திச் செல்ல முற்பட்டபோது பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுகை நுழைவாயிலில் வைத்து பிடிக்கப்பட்டது.

வள்ளப்பட்டையானது (*Gyrinops walla*) இலங்கைக்கே உரித்தானதொரு தனிச்சிறப்பு வாய்ந்த தாவர இனமாகுமென்பதோடு, இதன் நறுமணம் தொடர்பிலான பெறுமானமானது அண்மைக்காலத்திலேயே இனங்காணப்பட்டது. இது நறுமணங்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ரெசின் எனப்படுகின்றதொரு பதார்த்தத்தை உற்பத்தி செய்வதோடு, இப்பதார்த்தம் ஏனைய நாடுகளில் உயர் விலைபெறுகின்றது.வள்ளப்பட்டடையானது ஒரு காட்டு இனத் தாவரமாகவிருந்த போதிலும், அதனை ஏற்றுமதி செய்வதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதனை செல்லுபடியாகும்அனுமதியின்றி ஏற்றுமதி செய்வதானது வனக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தினை (235 ஆம் அத்தியாயம்) மீறும் வகையிலானதொரு குற்றச் செயலாகும்.



**சந்தனக்கட்டை கண்டுபிடிக்கப்பட்டமை**

54 கி.கி. எடையுடைய சந்தனமரக் (*Santalum album*) கட்டைகள் 2015 மார்ச்சு 11 ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் நுழைவாயிலில் வைத்து அதிகாரிகளால் கண்டுபடிக்கப்பட்டன. இவை வெற்றிலைகளினுள் மறைத்துவைத்து பாகிஸ்தான் பிரஜை ஒருவரால் பாகிஸ்தானுக்கு கடத்திச் செல்லப்படவிருந்த வேளையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

 

**சந்தன எண்ணெய் விமானச் சரக்கில் கண்டுபிடிக்கப்பட்டமை**

25 கி.கி. எடையுடைய சந்தன எண்ணெய்யைக் கொண்ட அலுமினியம் பரல் கூரியர் நிறுவனம் ஒன்றினால் விமானச் சரக்கு நுழைவாயிலூடாக அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த வேளையில் 2015 பெப்ரவரி 07 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த இவ் எண்ணெய் இலவங்கப்பட்டை எண்ணெய் என பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

சந்தன மரமானது (*Santalum album*) தாவர, விலங்குப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றதொரு மரமாகையால், அதன் எந்தவொரு பாகத்தினையும் ஏற்றுமதி செய்வதானது தடைசெய்யப்பட்டுள்ளது.சந்தன மரத்தின் எந்தவொரு உற்பத்தியையும் ஏற்றுமதி செய்வதானது வனக் கட்டளைச்சட்டம் மற்றும் சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்) ஆகியவற்றை மீறுகின்றதொரு குற்றச்செயலாகும்.

**உலர்த்தப்பட்ட கடற்குதிரைகளைக் கண்டுபிடித்தமை**

60 கி.கி. எடையுடைய உலர்த்திய கடற்குதிரைகள் (*Hippocampus spp*) இரு சீனப் பிரஜைகளால் சீனாவுக்கு கடத்திச் செல்லப்படவிருந்த வேளையில் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் நுழைவாயிலில் வைத்து 2015.04.27 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டன.

உலர்த்தப்பட்ட கடற்குதிரை பாலுணர்வைத் தூண்டும் மருந்தாக சீனாவில் பயன்படுத்தப்படுகிறது. எனவே, சீனா, தாய்வான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இதற்கு உயர் கேள்வி நிலவுகின்றது.கடற்குதிரைகள் குறித்தான வர்த்தக நடவடிக்கையானதுCITES(அருகிவரும் வன வாழ் தாவர மற்றும் விலங்கினங்களின் சர்வதேச வியாபாரம் குறித்தான சமவாயம்) இனால் சர்வதேச ரீதியில் ஒழுங்குபடுத்தப்படுகிறது – பின்னிணைப்பு II. கடற்குதிரைகளை ஏற்றுமதி செய்வதானது சுங்கக் கட்டளைச்சட்டத்தினை (235 ஆம் அத்தியாயம்) மீறும் வகையிலானதொரு செயலாகும்.



**உயிர்வாழ் சிங்கியிறால்களைக் கண்டுபிடித்தமை**

737.3 கி.கி. எடையுடைய உறைநிலை சிங்கியிறால்கள் 2015 பெப்ரவரி 28 ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் விமானச் சரக்கு நுழைவாயிலில் கண்டுபிடிக்கப்பட்டது. இவை உறைநிலை இறால்கள் என சுங்கத்திடம் பிரகடனம் செய்யப்பட்டு,சிங்கி இறால்களை ஏற்றுமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்ட காலப்பகுதியில் ஏற்றுமதி செய்வதற்கு முயற்சித்த போது கண்டுபிடிக்கப்பட்டது.

2015 ஜூலை 08 ஆம் திகதி 683 எண்ணிக்கையான உயிர்வாழ் நிலையிலுள்ள சிங்கியிறால்கள் (குறித்த அளவை விடச் சிறியவை), அவை சமையல் மீன்கள் என சுங்கத்திடம் பிரகடனம் செய்யப்பட்டு தாய்வானுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு இருந்த வேளையில் விமானச் சரக்குகள் நுழைவாயிலில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டன. குறித்த அளவைவிடச் சிறிய சிங்கியிறால்களை ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வள மூலங்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்) ஆகியவற்றின் பிரகாரம் பறிமுதல் செய்யப்பட்ட சிங்கியிறால்க்ள கடலுக்குள் விடப்பட்டன.



**காட்டு ஓர்கிட்டுகள்**

2015 ஆம் ஆண்டுக்காலத்தில் சீன பயணிகளினால் கடத்திச் செல்லப்படவிருந்த காட்டு வாழ் ஓகிட் தாவரங்களையும் அவற்றின் காய்ந்த பாகங்களையும் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுகை நுழைவாயிலில் வைத்து சுங்க உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.





ஓகிட்டுகள் மிகவும் கவரக்கூடியஅழகான பூக்களைக் கொண்டு பூக்கும் இயற்கைத் தாவரமாகும். இருப்பினும் அவை அலங்காரத்திற்காக வளர்க்கப்படினும்,அவற்றில் அனேகமானவை மூலிகை மருந்துகளாகவும் உணவுக்காகவும் வளர்க்கப்படுவதோடு,மற்றும் சில உலகின் பல்வேறு பகுதியிலுமுள்ள பல்வேறு கலாசார, பழங்குடி மக்கள் மத்தியில் கலாசார பெறுமதியையும் கொண்டுள்ளன.ஓகிட்டுகள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பாரம்பரிய சிகிச்சைக்காகவும் அனேக நோய்களுக்கான சிகிச்சைப் பொருளாகவும் புராதன காலம் முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையிலுள்ள அனேக ஓகிட்டுகள் அவற்றுக்கான வாழ்விடங்களை இழந்து தீவிர அபாயமிக்க அழிவினை எதிர்கொண்டுள்ளன.

ஓகிட்டுகள் 1937 இன் 02 ஆம் இலக்க தாவர, விலங்குப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தினால் பாதுகாக்கப்படுகிறது. காட்டு வாழ் ஓகிட்டுக்களை ஏற்றுமதி செய்வதானது தாவர, விலங்குப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் மற்றும் வனக் கட்டளைச்சட்டம் ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்க கட்டளைச்சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) பிரகாரம் குற்றமிக்கதொரு செயலாகும்.

**பழம்பெரும் புத்த சிலைகளைக் கண்டுபிடித்தமை**

2015 ஏப்ரல் 28 ஆம் திகதி கண்டிய காலத்திற்குரியதென சந்தேகிக்கப்படுகின்ற தொல்பொருளியல் மதிப்புமிக்க இரண்டு சிலைகள் எந்தவொரு உரிமப் பத்திரங்களுமின்றி கடத்திச்செல்லப்படவிருந்த வேளையில் பண்டாரநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது.இச் சிலைகள் இரண்டும் சீன நாட்டுப் பயணியின் பொதியினுள் அவரது ஏனைய பொருட்களுக்கிடையே மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இச்சிலைகள் பண்டைய காலத்திற்குரிய அரும்பொருள் என்பதை தொல்பொருளியல் திணைக்களம் உறுதிசெய்துள்ளது. இதனைத் தொடர்ந்து அவை பறிமுதல் செய்யப்பட்டன. தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் உரிமப்பத்திரம்/அனுமதி இன்றி இத்தகைய புராதன கால தொல்பொருட்களை ஏற்றுமதி செய்வது தொல்பொருளியல் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு குற்றச் செயலாகும்.



## 2015ஆம் ஆண்டில் இப்பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்

| திகதி | விபரம் | விடய இலக்கம் | பெறுமதி | அபராதம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 08.01.2015 | வல்லப்பட்டை *(கிறிகோப்ஸ் வல்ல)*– 34.5 கி.கி | ENSP/BPU/01/2015 | 882,000 | 100,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 07.02.2015 | சந்தனப்பட்டை எண்ணெய் - 20 கி.கி | ENSP/BPU/02/2015 | 4,859,655 | | விசாரணை முடியவில்லை |
| 25.02.2015 | உயிர்வாழ் என்டிமிக் மீன் - தீபுலியா (பன்ரியஸ் கியுமின்கி) – எண்ணிக்கை 180 | ENSP/BPU/03/2015 | 7,225 | 10,000 | தேசிய மிருகக் காட்சி சாலைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன |
| 28.02.2015 | குளிரவைக்கப்பட்ட நண்டுகள் - 737.3 கி.கி | ENSP/BPU/04/2015 | 1,695,790 | 1,795,790 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 03.03.2015 | உலரவைக்கப்பட்ட கடற் குதிரைகள் - 8 கி.கி | ENSP/BPU/05/2015 | | 200,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் விற்பனை வரும்படியாக ரூபா. 2,200,000/- அறவிடப்பட்டன. |
| 10.03.2015 | வல்லப்பட்டை *(கிறிகோப்ஸ் வல்ல)*– 7.3 கி.கி | ENSP/BPU/08/2015 | 2,990,000 | 60,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 11.03.2015 | சந்தன மரத்துண்டுகள் - 54.0 கி.கி | ENSP/BPU/06/2015 | | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 04.04.2015 | வல்லப்பட்டை *(கிறிகோப்ஸ் வல்ல)*– 19.7 கி.கி | ENSP/BPU/07/2015,(BIA/D/Case/46/2015) | 9,615,000 | 150,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் விற்பனை வரும்படியாக ரூபா. 3,500,000/- அறவிடப்பட்டன. |
| 26.04.2015 | உலரவைக்கப்பட்ட கடற் குதிரைகள் | ENSP/BPU/09/2015 | 1,170,000 | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 26.04.2015 | உலரவைக்கப்பட்ட கடற் குதிரைகள் | ENSP/BPU/10/2015 | 1,170,000 | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 28.04.2015 | புராதன கால புத்தர் சலை (எண்ணிக்கை 02) | ENSP/BPU/11/2015 | | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 30.04.2015 | தீட்டப்படாத படிகக் கற்கள் (92மெ.தொ) | ENSP/BPU/12/2015 | 2,601,405 | 200,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 14.05.2015 | கொத்தல ஹிம்புடு (Salacia reticulata) குவளைகள். | ENSP/BPU/13/2015 | 12,000 | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 20.05.2015 | வல்லப்பட்டை *(கிறிகோப்ஸ் வல்ல)*– 10 கி.கி | ENSP/BPU/14/2015 | 7,000,000 | 200,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 30.05.2015 | சந்தன மரத்துண்டுகள் - 192.4 கி.கி | ENSP/BPU/15/2015,(BIA/D/Case/46/2015) | 384,000 | 400,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 19.06.2015 | வல்லப்பட்டை *(கிறிகோப்ஸ் வல்ல)*– 23.6 கி.கி | ENSP/BPU/19/2015,(BIA/D/Case/99/2015) | 472,000 | 100,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் விற்பனை வரும்படியாக ரூபா. 100,000/- அறவிடப்பட்டன. |
| 02.07.2015 | உயிர் வாழ் ஆமை (எண்ணிக்கை 124) | ENSP/BPU/16/2015,(BIA/D/Case/113/2015) | 930,000 | 300,000 | வனஜீவன பரிபாலன திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| 08.07.2015 | உயிர் வாழ் நண்டுகள் (எண்ணிக்கை 683) | ENSP/BPU/17/2015 | 1,409,000 | 400,000 | வனஜீவன பரிபாலன திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| 10.07.2015 | உயிர்வாழ் தாவரங்கள் (15 கி.கி) | ENSP/BPU/21/2015 | | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவை தேசிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தாவரவியல் பூங்காவுக்கு ஒப்படைக்கப்பட்டுமுள் ளன. |
| 28.07.2015 | உயிர் வாழ் ஆமை (எண்ணிக்கை 488) | ENSP/BPU/20/2015 | 498,000 | 548,500 | வனஜீவன பரிபாலன திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ன. |
| 28.07.2015 | உயிர்வாழ் தாவரங்கள் (எண்ணிக்கை 533) | ENSP/BPU/22/2015 | | 45,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவை தேசிய தாவரவியல் பூங்காவுக்கு ஒப்படைக்கப்பட்டுமுள் ளன. |
| 01.09.2015 | பாம்பு வைன் போத்தல் | ENSP/BPU/23/2015 | | | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 17.09.2015 | உண்ணத்தகு பறவையின் முட்டை (300 கி.கி) | ENSP/BPU/26/2015 (BIA/D/Case/185/2015 ) | 300,000 | 50,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 21.09.2015 | சுந்தன மரத்தின் தூள் (300 மி.கி), சந்தன மரக்கட்டைகள்(43 கி.கி) | ENSP/BPU/27/2015 (BIA/D/Case/189/2015 ) | 5,000 | 5,000 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன |
| 04.10.2015 | உயிர்வாழ் பீச்-முகத்தினைக் கொண்ட காதல் பறவை (எண்ணிக்கை 20) | ENSP/BPU/24/2015 | | | விசாரணை முடியவில்லை |
| 19.10.2015 | வெட்டப்பட ரோஜா (30 பொதிகள்/பெட்டிகள்) | ENSP/BPU/25/2015 | | | விசாரணை முடியவில்லை |
| **மொத்தம்** | | | **14,211,655** | **4,564,290** | |

## 2015ஆம் ஆண்டிலான விடயங்களது சாராம்சம்

| | | |
|---|---|---|
| 1 | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 27 |
| 2 | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 23 |
| 3 | குற்றம் என நிருபிக்கப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 22 |
| 4 | சேகரிக்கப்பட்ட அபராதம், பறிமுதல்களது தொகை (ரூபா) | 4,564,290.00 |
| 5 | பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி (ரூபா) | 14,211,655.50 |
| 7 | அறவிடப்பட்ட விற்பனை வரும்படிகள் (ரூபா) | 6,400,009.00 |
| 8 | பூரணப்படுத்தப்படாத கோவைகளது மொத்த எண்ணிக்கை | 4 |

## 1993ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையில் இப்பிரிவிலான விடயங்கள்




| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பண்டைய காலப் பொருட்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 3 | 4 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 2 | 1 | 4 | 6 | 0 | 1 |
| உயிர் பல்வகைமை | 1 | 7 | 19 | 12 | 14 | 10 | 8 | 26 | 36 | 23 | 20 | 9 | 14 | 18 | 4 | 5 | 13 | 9 | 12 | 9 | 26 | 32 | 19 | 29 |

## 2015ஆம் ஏற்பாடுசெய்யப்பட்ட மற்றும் பங்கேற்கப்பட்ட செயற்பாடுகள்

| பங்கேற்கப்பட்ட வகை | விபரம் |
|---|---|
| **கலந்துரையாடல்கள்** | • 8ஆவது கைத்தொழில்பூச்சிக்கொல்லி பற்றிய உப குழுக் கூட்டம் கொழும்பு 01, உலக வர்த்தக மையத்தில் அமையப்பெற்றுள்ள இலங்கை முதலீட்டுச் சபையில் 2015.01.29ஆந் திகதி நடைபெற்றது. |
| | • மீன் பிடி ஒழுங்குவிதிகள் தொடர்பிலான கூட்டமானது மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் திணைக்களத்தில் 2015.02.18ஆந் திகதி நடைபெற்றது. |
| | • இலங்கையில் நுளம்பு அபாய கட்டுப்பாடு தொடர்பிலான கூட்டமானது மஹாவலி அபிவிருத்தி மற்றம் சுற்றாடல் அமைச்சில் 2015.02.19ஆந் திகதி நடைபெற்றது. |
| | • எச்.சீ.எப்.சீ தொடர்பிலான கூட்டம் தேசிய விஞ்ஞான மன்றத்தில் 2015.02.24ஆந் திகதி நடைபெற்றன. |
| | • ஊடுருவிப் பரவும் இனங்களின் உருவாக்கம் மற்றும் பெருகுதல் போன்றவற்றினை இலங்கையில்கட்டுப்படுத்துவதற்கான பலமிக்க கொள்திறன் தொடர்பிலான கூட்டமானது சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சில் 2015.20.20 மற்றும் 2015.02.06 திகதிகளில் நடைபெற்றன. |
| | • உயிரியல் பாதுகாப்பு காடாகென ஆய்வின் நெறிமுறைக்கிணங்க தேசிய உயிரியல் பாதுகாப்பு வேலைச்சட்டகத்தினை அமுல்படுத்தல் தொடர்பிலான பீ.பீ.ஜீ ஆனது உள்நாட்டு சுற்றாடல் அமைச்சில் 2015.05.15ஆந் திகதி நடைபெற்றன. |
| | • உயிரியல் பாதுகாப்பு காடாகென ஆய்வின் நெறிமுறைக்கிணங்க தேசிய உயிரியல் பாதுகாப்பு வேலைச்சட்டகத்தை அமுல்படுத்தல் தொடர்பிலான பீ.பீ.ஜீ ஆனது உள்நாட்டு சுற்றாடல் அமைச்சில் 2015.07.27ஆந் திகதி நடைபெற்றன. |
| | • உயிரியல் பாதுகாப்பு காடாகென ஆய்வின் நெறிமுறைக்கிணங்க தேசிய உயிரியல் பாதுகாப்பு வேலைச்சட்டகத்தினை அமுல்படுத்தல் தொடர்பில் கருத்திட்ட ஆவண விருத்திக்கான சர்வதேச நிபுணர் வைத்தியர். விபா அகுஜா உடனான கூட்டம் 2015.07.28ஆந் திகதி சுங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. |
| | • நிலையான சேதன மாசுபடுத்தி குறித்தான ஸ்ரொக்ஹொம் சமவாயத்திற்கான தேசிய அமுல்படுத்தல் திட்டத்தினது மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தலுக்கான செயற்பாடுகளுக்கான கூட்டம் 2015.08.25ஆந் திகதி சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றன. |
| | • சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன் பிடிகளுக்கான தேசிய செயல் திட்டத்தினை அமுல்படுத்தல் தொடர்பிலான கூட்டம் 2015.08.31ஆந் திகதி மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தில் நடைபெற்றன. |
| | • பூகோளரீதியான இயைபுபடுத்தப்பட்ட முறை (பூ.இ.மு குறியீடு) தொடர்பிலான கூட்டம் 2015.09.10ஆந் திகதி சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றன. |
| | • நிலையான சேதன மாசுபடுத்தி குறித்தானஸ்ரொக்ஹொம் சமவாயத்திற்கான தேசிய |

| | |
|---|---|
| | அமுல்படுத்தல் திட்டத்தினது மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தலுக்கான செயற்பாடுகளுக்கான கருத்திட்டத்தினது 6ஆவது தேசிய இயக்கக் குழுக் கூட்டம் 2015.10.13ஆந் திகதி மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றன. |
| | • பாசல், ரொட்டேடம் மற்றும் ஸ்ரொக்லம் பேரவைகள் தொடர்பிலான தேசிய கூட்டிணைப்புக் குழுக் கூட்டமானது 2015.11.17ஆந்திகதி மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றன. |
| | • ஊடுருவிப் பரவும் இனங்களின் உருவாக்கம் மற்றும் பெருகுதல் போன்றவற்றினை இலங்கையில்கட்டுப்படுத்துவதற்கான பலமிக்க கொள்திறன் தொடர்பிலான கூட்டமானது வன திணைக்களத்தில் 2015.11.26 ஆந் திகதி நடைபெற்றன. |
| | • பச்சைக் கணக்கீடு தொடர்பில் மீன்பிடித் துறை தொழிற்பாட்டுக் குழுவினது கூட்டம் 2015.12.18ஆந் திகதி சப்தா பரிசறய மந்திரயவில் நடைபெற்றன. |
| | • காடாகென ஆய்வின் நெறிமுறையினை அமுல்படுத்தல் தொடர்பிலான 3ஆவது தேசிய அறிக்கையினைச் சமர்ப்பித்தலானது இராஜகிரியவிலுள்ள வங்கியியற் கற்கை நிலையத்தில் 2015.12.22 இல் இடம்பெற்றது. |
| | • சுற்றாடல் ஒலி முகாமைத்துவம் மற்றும் பாவிக்கப்பட்ட / காலாவதியான இரசாயனங்களை அகற்றுதல் மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடத்திலிருந்து த்திலிருந்து வெளியேற்றப்படும் இரசாயன கழிவுகள் மற்றும் பொருத்தமான செயல் திட்டத்தினை / திட்ட பிரேரணையினை தயாரித்தல் தொடர்பிலான கூட்டமானது 2015.12.30ஆந் திகதி மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றன.<br>• சுற்றாடல் வலுமிக்க முகாமைத்துவம் மற்றும் பாவித்த/ காலாவதியான இரசாயனப் பொருட்கள் மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் கழிவாக அகற்றப்படுகின்ற இரசாயனக் கழிவுகளின் அகற்றுதல் மற்றும் இவை குறித்தான பொருத்தமான செயற்திட்டம்/கருத்திட்டப் பிரேரணை போன்றன தொடர்பிலான சந்திப்பு 2015.12.30 ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் இடம்பெற்றது. |
| | • சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன் பிடிகளுக்கான தேசிய செயல் திட்டத்தினை அமுல்படுத்தல் தொடர்பிலான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் 2015.12.30 ஆந் திகதி மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தில் நடைபெற்றது. |
| | • சுறா மீன் இனங்களைப் பாதுகாதது அவற்றை முகாமைசெய்வதற்கான செயற்பாடு தொடர்பிலான இலங்கைத் தேசிய திட்டம் 2015.12.30ஆந் திகதி கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தில் நடைபெற்றன. |
| | |
| **வேலைக்களரிகள் / பயிற்சிகள்** | • தாவர மற்றும் விலங்கினங்கள் மற்றும் தொல்பொருட்கள்,தாவரம் மற்றும் விலங்குகளின் தொற்றொதுக்கம் மற்றும் அவற்றின் சுற்றாடல் சம்பிரதாயம் தொடர்பில்புதிதாக நியமிக்கப்பட்ட உதவி தடுப்பு அலுவலர்கள்/உதவி பொறுப்பு அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம் 2015.01.12 மற்றும் 2015.01.16 ஆகிய தினங்களில் இடம்பெற்றன. |
| | • சுங்க அலுவலர்களுக்கான நுண்ணுயிர்திரள் உயிர்பல்வகைமை தொடர்பிலான களப்பயிற்சி செயலமர்வு நுவரேலியாவின் ஹோட்டன் சமவெளிகளில் 2015 பெப்ரவரி 15 தொடக்கம் 17 வரை நடைபெற்றன. |
| | • ‘‘இலங்கையில்நுழம்புகளின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய மாற்று முறையினைக் கண்டறிதல்’’குறித்தான செயலமர்வானது பத்தரமுல்ல, கிறான்ட் மோனாச் ஹோட்டலில் 2015.03.03ஆந் திகதி நடைபெற்றது. |
| | • மீன் பிடி முகாமைத்துவம் தொடர்பிலான வேலைக்களரியானது கட்டுநாயக தமரின் ஹோட்டலில் 2015.04.09 – 2015.04.11 வரை நடைபெற்றன |
| | • மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய பச்சை கொள்வனவு கொள்கை மற்றும் வழிகாட்டிகள் தொடர்பிலான வேலைக்களரி கோட்டையிலுள்ள வங்கியியல் கற்கைக் கூடத்தில் 2015.05.08ஆந் திகதி நடைபெற்றன. |
| | • ‘‘காடாகென உயிர்ப்பாதுகாப்பு நெறிமுறை குறித்தான தேசிய உயிர்ப்பாதுகாப்பு வேலைச்சட்டகத்தினை அமுல்படுத்தல்’’குறித்தான கருத்திட்டத்தை வடிவமைப்பதற்கான புகுமுக செயலமர்வு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் 2015.05.19 இல் இடம்பெற்றது. |
| | • தேசிய அமுலாக்கல் திட்டம் மீதான செயலமர்வானது கட்டுநாயக்கா, டமரீன் ட்ரீ ஹோட்டலில் 2015.05.11 முதல் 2015.05.12 ஆம் திகதி வரை இடம்பெற்றது. |
| | • இலங்கையில் PCBகளிவுகள் மற்றும் அவை சார்ந்த அசுத்தமான கழிவுகளை அகற்றுதல் மற்றும் சுற்றாடல் வலுமிக்க முகாமைத்துவம் தொடர்பில் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வானது தாஜ் சமுத்திரா ஹோட்டலில் 2015.05.16 இல் இடம்பெற்றது. |
| | • உலக சுங்க அமைப்பக 2012 இன் எச்.எஸ் குறியீடுகள் மற்றும் ஓசோன் படலத்தை சேதமுறச் செய்யும் வகையிலான சட்டரீதியற்ற செயற்பாடுகள் ஆகியன குறித்தான திறன் கட்டியெழுப்புகைச் செயலமர்வு 2015.07.12 முதல் 2015.07.13 வரை இடம்பெற்றது. |
| | • ஊடுருவிப் பரவும் அன்னிய இனங்களின் அறிமுகம் மற்றும் அவற்றின் உருவாக்கத்தைக் இலங்கையில் கட்டுப்படுத்தும் நோக்கில், சுற்றாடல் அமைச்சின் உயிர்ப்பல்வகைமைச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திறன் கட்டியெழுப்புகை குறித்தான செயலமர்வானது 2015.08.24 இல் பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் இல் இடம்பெற்றது. |
| | • இரசாயன ஆயுதங்களின் பயன்பாடு பற்றிய சமவாயத்தின் பரிமாற்றம் தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் ஆசிய நாடுகளின் சுங்க அதிகாரிகளுக்கான |

| | |
|---|---|
| | பிராந்திய ரீதியிலான பயிற்சியானது 2015.08.25 – 2015.08.28 வரை தாய்லாந்தில் இடம்பெற்றது. |
| | • BCNP பணியாளர்கள் மற்றும் உயிர்ப்பல்வகைமை இலக்குப் படைப் பணியாளர்கள் ஆகியோருக்கான முனைப்பான செயற்பாடுகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது 2015.08.07, 2015.08.13, 2015.08.20 மற்றும் 2015.08.28 ஆகிய தினங்களில மனிதவள அபிவிருத்தி பணிப்பக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. |
| | • காட்டாகெனா நெறிமுறைக்கு இணங்க தேசிய உயிர்ப்பாதுகாப்பு வேலைச்சட்டகத்தின் அமுலாக்கம் பற்றிய கருத்திட்டத்திற்கான செயலமர்வை மதிப்பிடுதலானது சுற்றால் இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2015.09.29 இல் வோட்டர்ஸ் எட்ஜில் இடம்பெற்றது. |
| | • இலங்கையில் ஊடுருவிப் பரவும் அன்னிய இனங்களின் அறிமுகம் மற்றும் பரவுகையினைக் கட்டுப்படுத்துவதற்கான திறனை வலுப்படுத்தும் கருத்திட்டமாகிய தேசிய ஐ.ஏ.எஸ் செயல்நுணுக்கம்/செயற்திட்ட மீளாய்வு பற்றிய செயலமர்வானது ராஜகிரிய ஒபுலண்ட் றிவர் பேஸ் ஹோட்டலில் 2015.09.30 இல் இடம்பெற்றது. |
| | • உயிர் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிவிரின் பணியாளர்கள் மற்றும் உயிர்ப்பல்வகைமை இலக்குப்படைப் பணியாளர்கள் ஆகியோருக்கான சுங்க உயிர்ப்பல்வகைமைச் சமவாயம் மற்றும் மரபணுக் கடத்தலின் வகிபாகம் குறித்தான முனைப்பான செயற்பாடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது 2015.09.07 இல் CDU கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. |
| | • உயிர் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிவிரின் பணியாட்டொகுதிக்கும் இலங்கைக்கும் உயிர்ப்பல்வகைமை இலக்குப் படைக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட பல்தரப்ப சுற்றாடல் சார் உடன்படிக்கைகள் மற்றும் தாவர, விலங்கினக் கடத்தலைக் கையாளுவதற்கான சட்டங்கள் குறித்தான முனைப்பான பயிற்சி நிகழ்ச்சித்திடட்மானது CDU கேட்போர் கூடத்தில் 2015.09.11 இல் இடம்பெற்றது. |
| | • BCNP பணியாட்டொகுதிக்கும் இலங்கைக்கும் உயிர்ப்பல்வகைமை இலக்குப் படைக்குமான பாரம்பரிய தொல்பொருட்களை இனங்காணல் குறித்தான முனைப்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது CDU கேட்போர் கூடத்தில் 2015.09.11 இல் இடம்பெற்றது. |
| | • BCNP பணியாட்டொகுதிக்கும் இலங்கைக்கும் உயிர்ப்பல்வகைமை இலக்குப் படைக்குமான மதுகங்கையில் வெட்லாண்ட் எகோ சிஸ்டத்தில் களப் பயிற்சி செயலமர்வானது 2015.09.17 இல் இடம்பெற்றது. |
| | • BCNP பணியாட்டொகுதிக்கும் இலங்கைக்கும் உயிர்ப்பல்வகைமை இலக்குப் படைக்கும்,பொருள் முத்திரையிடல் நடைமுறை மற்றும் ஈ-கழிவு மீதான விழிப்பூட்டல் குறித்தான முனைப்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது CDU கேட்போர் கூடத்தில் 2015.09.29 இல் இடம்பெற்றது. |
| | • உலக வர்த்தக அமைப்பக SPS மீதான செயலமர்வு : SPS விடயங்கள் மீதான தொடர்பாடலை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச SPS தரநியமத்தை அமுல்படுத்தலை இலக்காக் கொண்டதொரு வர்த்தக முன்னெடுப்பானது ஹோட்டல் றமதாவில் 2015.10.096 இல் இடம்பெற்றது. |
| | • போலியான மற்றும் கொள்ளையிடல் நடவடிக்கைகளுக்கெதிரான இணைந்த அமுலாக்க செயற்திட்டம் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது 2015.10.19 இல் மனிதவள அபிவிருத்தி பணிப்பக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. |
| | • இலத்திரனியற்பொருட்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் தொடர்பான முகாமைத்துவத்திற்கான முறைமையொன்றினைத் தாபிப்பதற்கான செயலமர்வானது இலங்கை மத்திய வங்கியின் வங்கியியல் கற்கைகளுக்கான நிலையத்தில் 2015.10.29 இல் இடம்பெற்றது. |
| | • ஆசிய பசுபிக் சுங்கத்தின் பசுமை முன்னெடுப்புகள் மீதான செயலமர்வானது கொரியாவில் 2015.11.10 – 2015.11.13 வரை இடம்பெற்றது. |
| | • சர்வதேச வர்த்த விநியோகத் தொடரிலுள்ள போலியான உற்பத்திப் பொருட்களை இனங்காணுதல் குறித்தானதொரு செயன்முறை சார் செயலமர்வானது கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் 2015.11.19 இல் இடம்பெற்றது. |
| | • இன்டர்போலினால்ஏற்பாடு செய்யப்பட்ட வன ஜீவராசிகள் மீதான குற்றச் செயல்களை எதிர்த்துப் போராடல் குறித்தான செயலமர்வானது சிங்கப்பூரில் 2015.11.16 – 2015.11.18 வரை இடம்பெற்றது. |
| | • "போலிகளிலிருந்து விலகியிருத்தல்" எனும் தொனிப்பொருள் மீதான சுங்க அதிகாரிகளுக்கான திறன் கட்டியெழுப்புகைச் செயலமர்வானது கொழும்பு, றமடா ஹோட்டலில் 2015.12.02 இல் இடம்பெற்றது. |
| | |

## விசேட செயற்பாடுகள்

### சுங்க தலைமைக் காரியாலயத்தில் ஈ- கழிவு முகாமைத்துவ வாரம்

வழக்கமாக முன்னெடுக்கப்படுவது போன்ற சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேணுகை நிகழ்ச்சித்திட்டங்களின் ஒரு அங்கமாகBCNP கிளையானது ஈ-கழிவு சேகரிப்புத் திட்டமொன்றை அதன் தலைமைக் காரியாலய வளாகத்தில் 2015.12.09 முதல் 2015.12.21 வரையான காலத்தில் முன்னெடுத்தது.இக்காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் தரைத் தளம் மற்றும் அடித்தரைத் தளம் ஆகியவற்றிலுள்ள மின்னுயர்த்திகளுக்கு அருகில்இடப்பட்டதோடு,துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பொது அறிவிப்புகள் என்பன மூலம் அலுவலர்கள் விழிப்பூட்டப்பட்டனர். சேகரிக்கப்பட்ட ஈ-கழிவுகள் மீள்சுழற்சிக்காக அனுப்பப்பட்டன.







### தேசிய சுவடிகள் காப்பகதிணைக்களத்திற்கான ஓலா இலை கையெழுத்துப்பிரதிகளின் அன்பளிப்பு

இலங்கைச் சுங்கமானது "வெதகம, பௌத்த சுத்ரா, மந்தர ஷாஸ்தரய, மஹா பிரஹ்மா ஜாலா சுத்ரய, அங்குத்தர ரீக்கா, வெதகம (விமன வஸ்த்து பிரகாரணய), பௌத்த சாஹித்ய, வெதகம" போன்ற பெறுமதி மிக்க ஓலா இலைகள் உள்ளிட்ட 23 இற்கும் அதிகமான ஓலா இலை கையெழுத்துப்பிரதிகளை கையளித்தது. மேலும் சேதமடைந்த ஓலா இலை கையெழுத்துப்பிரதிகளைக் கொண்டதொரு பொதியையும் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்திற்கு 2015 மார்ச் 04 ஆம் திகதி கையளித்தது.





## பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு

பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது, நாட்டின் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுடனான இணக்கப்பாட்டிற்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தைக் கட்டுப்படுத்தி அவற்றை கண்காணிக்கும் நோக்கில் 2011 இல் தாபிக்கப்பட்டதாகும். பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான பிரச்சினைகள் தொடர்பிலான புலமைச் சொத்துரிமைகளை அமுல்படுத்துவதற்கான இலங்கைச் சுங்கத்தின் மைய அவதானத்தையுடையது. மேலும் இது ஏனைய சம்பந்தப்பட்ட முகவரகங்களுடனான ஒருங்கிணைந்த செயற்பாட்டினூடாக சர்வதேச மாநாடுகளிலிருந்து எழக்கூடிய அமுலாக்கத்துடன் கூடிய கடப்பாடுகள் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பினை வழங்குகிறது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. புலமைச் சொத்துரிமைச் சட்டம், இலங்கை தரநியமங்கள் நிறுவகச் சட்டம்,தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகைச் சட்டம், தானியக்க சக்தி அதிகாரசபைச் சட்டம், நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம், சுற்றாடல் அமைச்சு, சுகாதாரத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் சுங்கத்துடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் போன்ற தேவைப்பாட்டுக் கட்டுப்பாடுகளை,மீறல்கள் மற்றும் மோசடிகளுக்கு எதிராக அமுல்படுத்தல்.மேற்படி அதிகாரசபைகளுக்குரிய அனைத்து இறக்குமதிப் பொருட்களும், அவை சுங்கத்திலிருந்து வெளியாக்கப்படும் முன்னர்CPUஇற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.
2. மேற்படி நோக்கத்திற்காக சரக்கினைப் பெறுபவரால் மேற்படி அதிகாரங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற உத்தரவாதப் பதிவினை பேணுதல்.
3. சம்பந்தப்பட்ட அதிகாரங்களின் ஒழுங்குவிதிகளைப் பேணும் வகையில் வாடிக்கையாளர் நடைமுறைகளை இற்றைப்படுத்தல்.
4. அவசியமானவிடத்து இப்பிரிவிலிருந்தான பணியாளரை பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் அமர்த்துதல்.
5. இதுவரை அடையாளங்காணப்பட்டுள்ள சுங்கச் சட்டங்களோடு தொடர்புடைய கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளை மீளாய்வுசெய்தல்.
6. மேற்படி செயற்பாடுகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களோடு சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப சட்டங்களை பிரயோகித்தல்.
7. புலமைச் சொத்துரிமைவர்த்தகச் சின்னப் பொருட்களைப் பதிவுசெய்தல்.
8. புலமைச் சொத்துரிமைமீறல்களுக்குரிய பிரயோகத்திற்கான நடவடிக்கைக்கு பதிலளித்தல்.
9. புலமைச் சொத்துரிமைகுறித்தான செயலமர்வுகளையும் விழிப்பூட்டல்களையும் நடாத்தல்.

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு (தொடர்பு பட்டிருப்பின்) | 2015.12.31ஆம் திகதி அடையப்பெற்றவை % | விசேட குறிப்புகள் |
|---|---|---|---|
| (1) மொன்ரரோல் புறடகோலினால் ஆதரவளிக்கப்பட்ட ஓசோன் படையின் ஆற்றலை குறைக்கின்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க தன்மையினை அதிகரித்தல் | தேசிய ஓசோன் பிரிவின் கூட்டிணைப்புடன் ஓசோன் படையின் ஆற்றலை குறைக்கின்ற மூலப்பொருட்களது இறக்குமதியினை முழுமையாக கட்டுப்படுத்தல் | 100% | |
| (2) பாசல் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆபத்தனை விளைவிக்கத்தக்க கழிவுகள், எல்லைக்கு அப்பால் இடம்பெறும் அசைவுகள் தொடர்பான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல்மிக்க தன்மையினை அதிகரித்தல் | | 20% | சுற்றாடல் அமைச்சின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தொடர்ச்சியாக கலந்துரையாடப்பபட்டன |
| (3) ஸ்ரொக்ஹோம் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள மோசமான முறையில் உடல் அங்கங்களை அசுத்தமடையச் செய்கின்றவற்றின் இறக்குமதி தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமல்படுத்தவதில் ஆற்றல் மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | 60% | சுற்றாடல் அமைச்சின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தொடர்ச்சியாக கலந்துரையாடப்பபட்டன |

| | | | |
|---|---|---|---|
| (4) றொட்டேடம் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னதாக அறிவிக்கப்பட்ட இணங்குகைகள் நடைமுறையினை அமுல்படுத்துவதிலான ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | 20% | அலுவலர்கள் பற்றாக்கறை |
| (5) இரசாயன ஆயுதங்கள் பேரவையின் விருத்தி, தயாரிப்பு, கிடங்கில் களஞ்சியப்படுத்தல் மற்றும் இரசாயன ஆயுதங்களது பாவனை என்பவற்றினை தடைசெய்தல் மற்றும் அழித்தல் தொடர்பிலான பேரவையிலான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதிலான ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | 10% | அலுவலர்கள் பற்றாக்கறை |
| (6) புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பான ஒழுங்கவிதிகளை அமுல்படுத்துவதிலான ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | 80% | புலமைச் சொத்துரிமை தொடர்பில் நீதிமன்றத்திற்கு சமூகமளித்தலும் அறிக்கையிடலும் |
| (7) இலங்கை தரநிர்ணயங்களின் கீழான பொருட்களுடன் தொடர்பான ஒழுங்கவிதிகளை அமுல்படுத்துவதிலான ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | 100% | |

## துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவு

**அறிமுகம்**

இலங்கைச் சுங்கத்தின் துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவானது, எல்லை தாண்டிய குற்றச்செயல்களைக்கண்காணிக்கும் நோக்கில்,உலக சுங்க அமைப்பகம்/போதைப்பொருட்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினது கொள்கலன் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.தற்போது இப்பிரிவானது மத்திய புலனாய்வுப் பணிப்பகத்தின் நோக்கெல்லையின் கீழ் காணப்படுகிறது. மேலும், இப்பிரிவானது கப்பல் இயக்குநர்கள்/ சரக்கு அறிக்கையாளர்களிடமிருந்து முன்கூட்டியே சரக்குகள் பற்றிய தகவல்களைப் பெறுவதோடு,விமான இயக்குநர்களிடமிருந்தான பயணிகள் தகவல்களையும் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, மேற்கொள்ளப்படுகின்ற இடர் பகுப்பாய்வின் அடிப்படையில் புலன்விசாரணைகளை மேற்கொண்டு அதற்பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகளுக்கு வழியமைத்தல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. விமானம் மற்றும் கப்பல் மூலமாக வரக்கூடிய சரக்கு விபரங்களை இலத்திரனியல் முறை மூலம் முன்கூட்டியே பெற்று அவற்றை ஒழுங்குபடுத்துவதோடு,துறைமுகம் சார்ந்த செயற்பாடுகளை கண்காணித்து கட்டுப்படுத்தல்.
2. சம்பந்தப்பட்ட விமான இயக்குநர்களிடமிருந்து பயணிகளின் தகவல்களை முன்கூட்டிப் பெறுதல்.
3. இலத்திரனியல் முறை மூலமான பொருட்பட்டியலைப் பயன்படுத்தி கொள்கலன்களையும் ஏனைய அனுப்புபொருட்களையும் இனங்கண்டு அவற்றை பகுப்பாய்வு செய்வதோடு, இவற்றில் உயர் இடர் கொண்டவை என ஊகிக்கப்படக் கூடிய பொருட்களை அவை குறித்தான மேலதிக விசாரணைகளையும் சோதனைகளையும் PCUஇல் கிடைக்கத்தகு கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளல்.
4. API தரவுகளைப் பயன்படுத்திய சுங்க இடரைக் கொண்டு பயணிகளை இனங்காணுதல், அத்தகைய பயணிகளையும் அவர்களது பொதிகளையும் சோதனை செய்தல், மற்றும் அவசியமானவிடத்து மேலதிக புலன்விசாரணைகளுக்கு வழியமைத்தல்.
5. உலக சுங்க அமைப்பகத்தினால் வழங்கப்பட்ட "சரக்கு இலக்குப்படுத்திய முறைமை" யினை கண்காணித்து பேணிவரல்
6. ஏனைய முகவரகங்களுடனான கூட்டுறவினைக் கட்டியெழுப்புதல்.

**முன்னேற்ற அறிக்கை**

**1. முன்கூட்டிய இலத்திரனியல் பொருட்பட்டியல் முறையை ஊக்குவித்தல் (CTS/ASYCUDA)**

சரக்கு இலக்குப்படுத்திய முறைமை தொடர்பில்கப்பல் முகவரகங்கள்/NVOCC இயக்குநர்கள்/சரக்கு அனுப்பியவர்கள் போன்றவற்றை அறிமுகம் செய்து இற்றைப்படுத்தியமை. இது தொடர்பில் 325 சரக்கு அறிக்கையாளர்கள் முறைமையில் பதிந்துகொண்டனர். சம்பந்தப்பட்ட உதவிகளை WCO/UNODC வழங்கியது.

**2. கடல் மார்க்க சரக்கு அறிக்கையிடல் தொடர்பிலான சட்ட அமுலாக்கம்**

அஸிகுடாவிற்கான இலத்திரனியல் பொருட்பட்டியல் சமர்ப்பித்தலை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவித்தலானது 2014.10.31 ஆம் திகதிய 1886/55 ஆம் இலக்க வாத்தமானி (அதிவிசேடம்) மூலம் வெளியிடப்பட்டது. கடல் மார்க்க அறிக்கையாளர்கள் இலங்கைச் சுங்கத்திற்கு தமது பொருட்களை இலத்திரனியல் பொருட்பட்டியல் மூலம் அறிக்கை செய்யும் விதம் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டு அது பற்றி விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இதற்கிணங்க, இணக்கமுறாத 10 சரக்கு அறிக்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**3. முன்கூட்டிய பயணிகள் பற்றிய தகவல் தொடர்பில் சட்ட அமுலாக்கம்**

முன்கூட்டிய பயணிகள் தகவல் தொடர்பிலான ஒழுங்குறுத்துகை பற்றிய அறிவித்தலானது 2015.12.30 ஆம் திகதிய 1947/23 ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்டது. 2016.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையிலான மேற்படி அறிவித்தல் தொடர்பிலான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்று விமானம் மூலமான இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டது.

## 4. சந்தேகத்திற்கிடமான சரக்குகள் குறித்தான விசாரணைகள்

துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவானது 2015.04.10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய புலாய்வு பணிப்பகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது (995ஆம் திணைக்களக் கட்டளை). அதற்கிணங்க, இப்பிரிவானது சில விடயங்களை வெற்றிகரமாக கண்டுபிடித்தது. அவை பற்றிய விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| பதிவுசெய்த வழக்குகளின் எண்ணிக்கை | - 39 |
| நிறைவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை | - 16 |
| பூர்த்தியடையாத வழக்குகளின் எண்ணிக்கை | - 23 |

விதிக்கப்பட்ட அபராதம்/பறிமுதல்களின் மொத்தத் தொகை—ரூபா. 250,128,986/-

## 5. அலுவலர்களின் தொழில்வாண்மை தரநிலைகளை மேம்படுத்தியமை.

அ. இலங்கைச் சுங்கத்துடன் இணைந்து ஐக்கிய அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லையோரப் பாதுகாப்பினால் நடத்தப்பட்ட சர்வதேச கப்பல் துறைமுக பறிமுதல் செய்து அழித்தல் பற்றிய பயிற்சியின் 05 நாள் செயலமர்வில் மூன்று அதிகாரிகள் பங்குபற்றினர்.

ஆ. இலங்கை அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை நடாத்திய NPS மீதான இரண்டு நாள் பயிற்சியில் இரண்டு அதிகாரிகள் பங்குபற்றினர்.

இ. நெதர்லாந்தின் ரொட்டர்டம் துறைமுகத்திற்கான ஆய்வுச் சமூகமளிப்பில் எட்டு அதிகாரிகள் ஒரு வாரத்திற்கு பங்களித்தனர்.

ஈ. புது டில்லியில் UNODC-ROSA இனால் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய உளத்தூண்டல் போதைமருந்துகள் குறித்தான இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வில் ஒரு அதிகாரி பங்களித்தார்.

உ. சீன மக்கள் குடியரசில் இடம்பெற்ற போதைப்பொருள் கட்டுப்பாடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு அதிகாரி பங்களித்தார்.

ஊ. கொழும்பில் ஐந்து நாட்களாக இடம்பெற்ற உலக சுங்க - கோப்ஸ் (WCO- COPES) குறித்தான செயலமர்வொன்றை நடாத்தியமை.

## 6. விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அ. சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு/ முகவர்களுக்கு பயிற்சி/ விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆ. தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்கும் வகையில் CASA மற்றும் SLFFA உறுப்பினர்களுக்கு சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

# மத்திய விசாரணைகள் பணிப்பகம்

**அறிமுகம்**

இப்பணிப்பகமானது திணைக்களத்தின் உபாயமுறைத் திட்டம் 2010 – 2015இன் இலக்குகளுக்கமைய, ஏனைய செயற்பாட்டுப் பணிப்பகங்களினால் கண்டறியப்படுகின்ற சுங்கச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களது மீறுகை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.
மேலும் இது மத்திய விடயப் பதிவினை பேணுவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

திணைக்களத்தின் நோக்கெல்லையினை திறம்பட எய்தும் நோக்கிலான இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களாக :

- சகல சுங்க விசாரணைகளையும் ஒருமுகப்படுத்தி அவற்றை தொழில்வாண்மை தன்மையில் மேற்கொள்ளல்.
- மத்திய விடயப் பதிவினை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் பேணுதல்.
- வெகுமதி பகிர்ந்தளிப்பினை ஒருமுகப்படுத்தி அவற்றினை வெளிப்படத்தன்மையோடு மேற்கொள்ளல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. புதிய திணைக்களக்கட்டளைகளை விநியோகித்தல்.
2. தேவையான அலுவலர்களை பெறுதல்
3. விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் பிற பணிப்பகங்களிலிருந்து விடயக் கோவைகளைப் பெறுதல்.
4. வெகுமதிப் பகிர்ந்தளிப்பினை மேற்கொள்ளல்.
5. மத்திய விசாரணைப் பணிப்பக விடயத்திலான விசாரணைகளை

| பிரதான செயற்பாடு 1 | இலக்கு | அடையப்பெற்றவை | இதனை அடையப் பெறாவிடின் அதற்கான காரணம் |
|---|---|---|---|
| மத்திய புலனாய்வுப் பணிப்பகத்திற்கு புதிய திணைக்களக் கட்டளையினை விநியோகித்தல் | முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளுக்கிடையில் செய்கையினை முடிவுறுத்தல் | அடையப்பெறவில்லை | திணைக்களக் கட்டளை தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்கப்பெறவில்லை |
| தேவைப்படுகின்ற பதவியணியினர்களைப் பெறுதல் | 2ஆம் காலாண்டுக்கிடையில் இச்செய்கையினை முடிவுறுத்தல் | ஆடையப்பெறவில்லை | திணைக்கள் கட்டளை அங்கீகரிக்கப்படவில்லை மற்றும் தேவைப்படும் பதவியணியினர் தொடர்பான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை |
| ஏனைய பிரிவுகளிலிருந்து விடயக் கோவைகளைப் பொறுப்பெடுத்தல் | இவ்வருடத்தின் 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் காலண்டுக்கிடையில் செய்கையினை முடிவுறுத்தல் | அடையப்பெறவில்லை | புதிய திணைக்களக் கட்டளை வெளியிடப்படாமை மற்றும் தேவையான பதவியணியினர் கிடைக்கப் பெறாமையினால் இலக்கினை அடைய முடியவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| வெகுமதிப் பகிர்வுகளைப் பொறுப்பெடுத்தல் | இவ்வருடத்தின் 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் காலண்டுக்கிடையில் செய்கையினை முடிவுறுத்தல் | அடையப்பெறவில்லை | புதிய திணைக்களக் கட்டளை வெளியிடப்படாமை மற்றும் தேவையான பதவியணியினர் கிடைக்கப் பெறாமையினால் இலக்கினை அடைய முடியவில்லை. |
| மத்திய புலனாய்வுப் பணிப்பக வழக்கு விடயங்கள் தொடர்பில் புலனாய்வினை மேற்கொள்ளல் | அடையப்பெறல் | அடையப்பெற்றுள்ளமை | அடையப்பெற்றுள்ளமை |
| **பிரதான செயற்பாடு 2.2 மத்திய வழக்கு விடயப் பதிவினை தன்னியக்கப்படுத்தல்** | | | |
| 2.2.1 மென்பாக விருத்தி | 1ஆம் காலாண்டு | இடம்பெற்றது | |
| 2.2.2 வன் பாகம் கொள்வனவு | 2ஆம் காலாண்டு | உரிய நேரத்தில் அடையப்பெறவில்லை | தகவல் தொழில்நுட்பப் பணிப்பகத்தினால் 4ஆம் காலாண்டில் கொள்வனவு |
| 2.2.3 சோதனையிடலும் அமுல்படுத்தலும் | 2ஆம் காலாண்டு | அடையப்பெறவில்லை | 4ஆம் காலாண்டில் சோதனை ஆரம்பிக்கப்பட்டன. மென்பாகங்கள் இல்லாமையினால் உரிய நேரத்தில் அமுல்படுத்த முடியவில்லை |
| முழுமையான அமுல்படுத்துகை | 3ஆம் காலாண்டு | அடையப்பெறவில்லை | மென்பாகமின்றி அமுல்படுத்த முடியாமை |

## செயலாற்றுகை –2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை

| | | | |
|---|---|---|---|
| அ) | **2015.01.01 இருந்து 2015.12.31 வரையான இப் பிரிவுகளில் இருந்தான விசாரணைகள்** | | |
| 1) | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 922 |
| 2) | பூரணப்படுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 42 |
| | அ) அபராதம்/குறைக்கப்பட்ட பறிமுதல்கள்/மேலதிக பறிமுதல்கள் (ரூபா) | - | 149,790,675/= |
| | ஆ) அறவிடப்பட்ட மேலதிக பதிவு (ரூபா) | - | 205,237,434/= |
| | இ) விற்பனை வரும்படிகள் (ரூபா) | - | 115,628,024/= |
| 3) | மத்திய விடயப் பதிவு தொர்பிலான செயலாற்றுகை | - | 10,436 |
| | அ) மத்திய விடயப் பதிவில் பதிவு செய்யப்பட்ட விடயங்கள் | - | 3,984 |
| | ஆ) மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | | |
| ஆ) | **பிற பிரிவுகளில் இருந்தான விசாரணைகள்** | | |
| | 1.விசாரணை தொடர்பில் பிற பிரிவுகளில் இருந்து இப்பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 20 |
| | 2. விசாரணை தொடர்பில் இப்பணிப்பகத்திலிருந்து பிற பிரிவுகளுக்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 6 |
| இ) | **மத்திய விடயப் பதிவு தொடர்பிலான பேணுகை** | | |
| | 1. மத்திய விடயப் பதிவில் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 10,436 |
| | 2. மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 3,984 |
| | 3. சிபாரிசு செய்யப்பட்ட வெகுமதிப் பட்டியல்களது எண்ணிக்கை | - | 265 |

## செயலாற்றுகை –2014 ஜனவரி தொடக்கம் டிசம்பர்

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | | **2014.01.01 இருந்து 2014.12.31 வரையான இப் பிரிவுகளில் இருந்தான விசாரணைகள்** | | |
| | 1) | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 297 |
| | 2) | பூரணப்படுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 130 |
| | | அ) அபராதம்/குறைக்கப்பட்ட பறிமுதல்கள்/மேலதிக பறிமுதல்கள் (ரூபா) | - | 210,694,031/= |
| | | ஆ) அறவிடப்பட்ட மேலதிக பதிவு (ரூபா) | - | 6,431,046/= |
| | | இ) விற்பனை வருமப்படிகள் (ரூபா) | - | 57,564,690/= |
| | 3) | மத்திய விடயப் பதிவு தொர்பிலான செயலாற்றுகை | | |
| | | அ) மத்திய விடயப் பதிவில் பதிவு செய்யப்பட்ட விடயங்கள் | - | 9,532 |
| | | ஆ) மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | | 5,605 |
| ஆ) | | **பிற பிரிவுகளில் இருந்தான விசாரணைகள்** | | |
| | | 1. விசாரணை தொடர்பில் பிற பிரிவுகளில் இருந்து இப்பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 4 |
| | | 2. விசாரணை தொடர்பில் இப்பணிப்பகத்திலிருந்து பிற பிரிவுகளுக்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 19 |
| இ) | | **மத்திய விடயப் பதிவு தொடர்பிலான பேணுகை** | | |
| | | 1. மத்திய விடயப் பதிவில் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 9,579 |
| | | 2. மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 5,605 |
| | | 3. சிபாரிசு செய்யப்பட்ட வெகுமதிப் பட்டியல்களது எண்ணிக்கை | - | 221 |




### குறிப்பிடத்தக்க விடயங்கள்

**CIB/INV/036/2013** - இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை மீறி இறக்குமதி செய்யப்பட்ட கட்டுமான பொருட்களைக் கொண்ட 13 முழுக் கொள்கலன்கள் இப்பணிப்க அலுவலர்களினால் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் விற்பனை வருமபடியாக ரூபா 12,548,549/= அறவிடப்படடன.

**CIB/INV/297/2014** – இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமின்றி இறக்குமதி செய்யப்பட்ட மிட்சுபிசி பெஜிரோ ஜீப் வண்டி இப்பணிப்க அலுவலர்களினால் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் குறைந்தளவு பறிமுதலகா ரூபா 7,000,000/=விதிக்கப்பட்டன.

**CIB/INV/029/2015** – இறக்குமதி ஒழுங்க விதிகள் கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம் என்பவற்றினை மீறி இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் இப்பணிப்க அலுவலர்களினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இது தொடர்பில் குறைக்கப்பட்ட மேலதிக பறிமுதல் ரூபா 400,000/=, குறைக்கப்பட்ட அபராதமாக ரூபா 100,000/=, குறைக்கப்பட்ட பறிமுதலாக ரூபா 9,500,000/= விதிக்கப்பட்டன.

**புலனாய்வு தொடர்பில் சுங்கப் புலனாய்வு பணியகத்திற்கு அனுப்பப்பட்ட விடயங்கள்**
**CIB/INV/119/2015 (BIA/A/CASE/33/2015)**–பிரகடணப்படுத்தப்படாத 16 தங்க தட்டுகள் தொடர்பில் புலனாய்வு திறம்பட நிறைவேற்றப்பட்டதுடன் இது தொடர்பில், மேலதிக பறிமுதலாக ரூபா 200,000/=வும் விற்பனை வரும்படியாக ரூபா 9,680,488/= வும் விதிதக்கப்பட்டன.

**மனிதவள விருத்தி**

**பயிற்சி மற்றும் வேலைக்களரி**

**அ. வெளிநாடு**

| **துறை** | **இடம்** | **நாட்களது எண்ணிக்கை** | **அலுவலர்களது எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1.மருந்தாக்கல் குற்றம் மற்றும் போலியான மருத்துவ உபகரணம் தொடர்பிலான வேலைக்களரியும் மாநாடும் | பரிஸ் - பிரான்ஸ் | 02 | 01 |
| 2. கோப்ஸ் (COPES) கலந்துரையாடல் - உலக சுங்க அமைப்பகத்திகால் மேற்கொள்ளப்பட்டன | ஹொங் கொங் | 02 | 01 |
| 3.வரி பொறிப்பு மன்றம் | மியாமி – அமேரிக்கா | 02 | 02 |
| 4.வலைப்பின்னல் புலனாய்வு தொடர்பிலான வேலைக்களரி | ஐ.அ | 04 | 01 |

**ஒப்பீட்டாய்வு – 2014ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆண்டு**






## ஆ. உள்நாடு

| துறை | இடம் | நாட்களது/ மாதங்களது எண்ணிக்கை | அலுவலர்களது எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. புதிதாக நியமிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டாளர்களுக்கான விழிப்புணர்வுத்திட்டம் | சுங்க தலைமைக் காரியாலயம் | 7 நாட்கள் | 3 |
| 2. நடவடிக்கை வினையூக்கி | ப.ச.வி, விமானச் சரக்கு மற்றும் அஞ்சல் விர தூதர், இலத்திரனியல் அஞ்சல் செவை மற்றம் தபால் | 21 நாட்கள் | 2 |
| 3. உலக சுங்க அமைப்பக 2012 இயைபு முறை குறியீடுகள் மற்றும் ஓசோனை அழிக்கின்ற பொருட்களது சட்டரீதியற்ற வாணிபத்தினை தடைசெய்தல் என்பவை தொடர்பிலான கொள்திறன் வேலைலக்களரி | சுங்க தலைமைக் காரியாலயம் | 1 நாட்கள் | 5 |
| 4. போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பயிற்சி | சுங்க தலைமைக் காரியாலயம் | 2 நாட்கள் | 3 |
| 5. GASL-இலங்கை இரத்தினக்கல் பகுப்பாய்வாரள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட டிப்ளோமா பாடநெறி | சுங்க தலைமைக் காரியாலயம் | 7 மாதங்கள் | 1 |

### மனித வளங்கள்

தற்போதுள்ள, தேவைப்படுகின்ற மற்றும் பற்றாக்குறையான பதவியணியினர் விபரம்

| பதவி | தற்போதைய பதவியணியினர் | தேவைப்படுகின்ற பதவியணியினர் | பற்றாக்குறையான பதவியணியினர் |
|---|---|---|---|
| சு.ப | 1 | 1 | 0 |
| பி.சு.ப | 2 | 2 | 0 |
| சு.அ | 8 | 11 | 3 |
| பி.சு.அ | 3 | 23 | 20 |
| உ.சு.அ | 20 | 54 | 34 |
| பி.சு.ப | 0 | 5 | 5 |
| சு.ப | 2 | 7 | 5 |
| காவலர் | 2 | 20 | 18 |
| அ.மு.உ | 2 | 5 | 3 |
| சாரதிகள் | 4 | 7 | 3 |
| அ.உ | 4 | 10 | 6 |

# சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

**அறிமுகம்**

இப்பணிப்பகமானது நீதிமன்றில் தொடுக்கப்படுகின்ற வழக்ககளை பேனுதல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாகவுள்ளதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பினை பேனுவதற்கும் பொறுப்பாயுள்ளன. இப்பணிப்பகமானது ஒரு பிரதிப் பணிப்பாளர், ஒரு அத்தியட்சகர், இரண்டு பிரதி அத்தியட்சகர்கள் மற்றும் இரண்டு உதவி அத்தியட்சகர்கள் ஆகியோரின் உதவியுடன் பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் இயங்குகின்றது.

**பிரதான தொழிற்பாடுள்**

1. ஏனைய பிரிவுகளுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்.
2. திணைக்களத்தின் சகல சட்டம் தொடர்பிலான விடயங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் சமுகமளித்லை உறுதிப்படுத்தல்.

| பிரதான செயற்பாடு | இலக்கு | அடையப் பெற்றமை | அடையப் பெறாவிடின் அதற்கான காரணம் |
|---|---|---|---|
| சட்டமா அதிபருடன் கூட்டிணைப்பினை மேற்கொள்ளல் மற்றும் சட்டம் தொடர்பிலான விடயங்களில் ஆலோசனைகளை வழங்கும் வகையில் உரிய பணிப்பகங்களுடன் கூட்டிணைப்பினை மேற்கொள்ளல். | உரிய நேரத்தில் | அடையப் பெற்றுள்ளன | --- |
| உயர் நீதி மன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றில் தொடுக்கப்பட்டுள்ள சுங்க விடயங்கள் தொடர்பிலான சகல வழக்குகளுக்கும் சமுகமளிக்கம் வகையில் அலுவலர்களை ஒழுங்குபடுத்தல் | நீதிமன்ற திகதி தொடர்பில் | அடையப் பெற்றுள்ளன | --- |
| முதலாம் முறை நீதிமன்றத்தில் (மெஜிஸ்ரேட் நீதிமன்றம்/ மாவட்ட நீதிமன்றம்/ உயர் நீதிமன்றம்) சமுகளிப்பதற்கு தொடர்புபட்ட பிரிவுகளில் கடமையாற்றும் அலுவலர்ளை தயார் செய்தல் | உரிய நேரத்தில் | அடையப் பெற்றுள்ளன | --- |
| இலங்கைக்கும் பிற நாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்படுகின்ற உடன்படிக்கை மற்றும் சட்ட ரீதியான கருத்துக்கள் தொடர்பில் கொள்கைத் திட்டமிடல் பணிப்பகம் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு வழங்குதல் | ஒரு கிழமைக் கிடையில் | அடையப் பெற்றுள்ளன | --- |
| சுங்கம் தொடர்பான தீர்மாணிக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் சாராம்சம் ஒன்றைத் தயாரித்து அதனைப் பேணுதல் | 1 வருடம் | அடையப் பெற்றுள்ளன | --- |
| சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்யும் குழுவினை நிறுவுதலும் உதவுதலும் | 2 வருடம் | அடையப் பெறவில்லை | வரையறுக்கப்பட்ட பதவியணியினர் |

**செயலாற்றுகை அறிக்கை - 2015**

| | |
|---|---|
| 2014ஆம் ஆண்டிலிருந்து இருந்து கொண்டிருக்கும் விடயங்கள் | 61 |
| 2015ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | **40** |
| | **101** |
| நீதிமன்ற மனுக்கள் - 2015 | |
| **உச்ச நீதிமன்ற மனுக்கள்** | 13 |
| **மேன்முறையீட்டு நீதிமன்ற மனுக்கள்** | 26 |
| **வாணிப உயர் நீதிமன்றங்கள்** | 1 |
| **முடிவுறுத்தப்பட்ட மனுக்கள்** | 7 |
| | |
| ஆஜர்செய்யப்பட்ட ஆலோசனைகளது எண்ணிக்கை | **34** |
| பதிவு செய்யப்பட்ட நானாவித விடயங்களது எண்ணிக்கை | **111** |

# மத்திய புலனாய்வுப் பணிப்பகம்

**அறிமுகம்**

மத்திய புலனாய்வுப் பணிப்பகமானது, அரசிறை இழப்புக்களைத் தவிர்த்தும் "சமூக ரீதியான பாதுகாப்பு" தொடர்பான கடப்பாடுகளைப் பேணி, நேர்மையான வர்த்தகர்களுக்கு வசதியளித்தல் தொடர்பிலான திணைக்களத்தின் இலக்கினை அடையும் நோக்கில், சம்பந்தப்பட்ட புலனாய்வுகளை வினைத்திறன்மிக்கதாகவும் உரிய நேரத்திலும் மற்றும் துல்லியமாகவும் தொழிற்பாட்டு பிரிவிற்கு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இப்பணிப்பகத்தின் பொதுவான இலக்குகள் பின்வருமாறு :

- அத்தியவசிய புலனாய்வுகளை சமர்ப்பிப்பதன் மூலம் உயர் தரத்திலான தீர்மானம் மேற்கொள்கைக்கு உதவுதல்.
- சரக்கு மற்றும் பயணிகள் வெளியாக்கத்திலுள்ள புலனாய்வு மூலமான கட்டுப்பாட்டு முறைமையின் தொழிற்பாட்டை வலியுறுத்தல்.
- எல்லைக் குறுக்காக இடம்பெறுகின்ற சரக்கு போக்குவரத்துகள் தொடர்பான தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- புலனாய்வுத் தகவல்களை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் பகிர்ந்துகொள்வதற்கான தேசிய தொடர்புகொள்கை மையமாகவும் மற்றும் மத்திய நிலையமாகவும் செயற்பட்டு, அமுலாக்கல் தொடர்பிலான உதவிகளை வழங்கல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. தகவல்களை சேகரித்தல்
2. 24மணி நேர பொது மக்கள் தகவல் பெறல் கருமபீடத்தினை பேணலும் முகாமை செய்தலும்.
3. தரவுத் தளங்களைப் பராமரித்தல்
4. தகவல் பகுப்பாய்வு மற்றும் விருத்தி
5. தகவலினைப் பரப்புதல், உள்நாட்டில் பணிப்பகங்கள் ஊடாகவும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களூடாகவும்.
6. சர்வதேச சுங்க தகவல் முறைமையுடனான கூட்டிணைப்பு.
7. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய ஒற்றர் இணைப்பு அலுவலகத்தற்கான தேசிய தொடர்பு நிலையமாகவும் மற்றும் சர்வதேச அமுல்படுத்தல் ஒருங்கிணைப்புக்கான குவியல் நிலையமாகவும் செயற்படல்.
8. தேசிய பாதுகாப்புச் சர்ச்சைகள் தொடர்பில் ஒருங்கிணைப்பு மையமாக தொழிற்படல்.
9. கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு பூர்வாங்க கருத்திட்டத்தை செயற்படுத்தல்.
10. திணைக்கள இடர் முகாமைத்துவக் குழுவின் ஒரு அங்கத்தவராக பங்கேற்றல்.
11. சரக்குப் பட்டியல் மீளாய்வு செய்தல், தகவல் மற்றும் புலனாய்வு அடிப்படையில் உயர் இடர் சரக்குகளை இடை நிறுத்தல்.
12. சுங்க விசாரணைகளை மேற்கொள்ளுதலும் மற்றும் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலினை தொடுத்தலும்.
13. முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல்களைப் பேணல்
14. சென் தரவு நிரல்களைப் பேணல்
15. பதிவு செய்வதற்கு முன்னர் பொருள் உரிமையாளர்களது மனுக்களை ஆழமாக ஆராய்தல்
16. சுங்க இல்ல முகவர் தரவு நிரல் பேணலுக்கான வெளியாக்கல் முகவர்களது தகவலினை சேகரித்தல் மற்றும் சுங்க இல்ல முகவர்களது விண்ணப்பங்களை ஆழமாக ஆராய்தல்.

**அட்டவணை 1 - பெறப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட தகவல்கள்**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| பொது தகவல் பெறப்படும் கருமபீடம் ஊடாக பெறப்பட்ட தகவல்களது எண்ணிக்கை | 45 | 30 | 26 |
| பிற மூலகங்களில் இருந்து (பெக்ஸ், கடிதங்கள், செய்திகள்) | 05 | - | 02 |
| **மொத்தம்** | 50 | 30 | 28 |
| நடவக்கை எடுப்பதற்காக பிற கிளைகளுக்கு பங்கிடப்பட்ட தகவல்களது எண்ணிக்கை | 23 | 14 | 13 |

**அட்டவணை 2 - பகிர்ந்தளிக்கப்பட்ட தகவல் எச்சரிக்கைகளது எண்ணிக்கை**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| மத்திய புலனாய்வுக் கூறு எச்சரிக்கைகள் | 17 | 19 | 13 |
| பிராந்திய தகவல் ஒருங்கிணைப்பு அலுவலகம், உலக சுங்க அலுவலகம், சென் எச்சரிக்கைகள் | இல்லை | 30 | 39 |

**ஆட்டவணை 3 –முன்னர் குற்றமிழைத்தவர்களது விபரங்கள் தொடர்பாக பல்வேறு கிளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டவைகளது எண்ணிக்கை**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல் அறிக்கைகளது எண்ணிக்கை | 397 | 143 | 55 |

**அட்டவணை 4 - சுங்க இல்ல முகவர் மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பிலான பதிவுகளின் எண்ணிக்கை**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| சுங்க இல்ல முகவர்கள் உரிமம் புதுப்பித்தல்கள் | 3500 | 3750 | 3700 |
| இலங்கை துறைமுக அதிகார சபை சரக்கு மேடை உதவியாளர் உரிமங்கள் (ஏ அங்கீகாரம்) (கிட்டத்தட்ட) | 2000 | 2200 | 2570 |
| இறக்குமதியாளர்களின் பெறுமதி சேர் வரி பதிவு பற்றிய ஆவணங்களின் சோதனை | 1442 | 1481 | 1460 |

**அட்டவணை 5 – கொள்கலன் பாதுகாப்பு தொடர்பிலான பூர்வாங்க வேலைத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்ட (ஸ்கேன்) கொள்கலன்களின் எண்ணிக்கை**

| | 2015 |
|---|---|
| மாற்றி ஏற்றப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை | 204 |
| உள்நாட்டு ஏற்றுமதி கொள்கலன்களது எண்ணிக்கை | 05 |
| கொள்கலன்களது மொத்த எண்ணிக்கை | 209 |

**அட்டவணை 6 - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசாரணை மற்றும் புலனாய்வு முகவர்களுடனான தொடர்பு**

| முகவர் | வேண்டுகோள்களது எண்ணிக்கை | | | பெறப்பட்ட பதில்களது எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 |
| டி.ஆர்.ஐ. - இந்தியா | 04 | 08 | 08 | | | 02 |
| ஜப்பானிலுள்ள இலங்கை தூதராலயம் | 08 | 62 | 35 | 06 | 58 | 32 |
| ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை தூதராலயம் | 04 | | 05 | | | 05 |
| எச்.எம். சுங்கம்-ஐக்கிய இராச்சியம் | | 02 | | | 01 | 1 |
| அவுஸ்திரேலியா | 09 | | | | | |
| சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதராலயம் | 01 | 01 | | | | |
| ஜப்பான் சுங்கம் | | | | | | |
| மாலைதீவு சுங்கம் | | | | | | |
| தாய்லாந்து சுங்கம் | | | 03 | | 03 | 3 |
| மலேசியா சுங்கம் | 01 | 01 | | | | |
| வியட்நாம் சுங்கம் | 01 | 01 | | | | |
| தாய்லாந்து தூதராலயம் | 04 | 04 | | | | |
| றிலோ கொரியா | | | | | 01 | 01 |

**அட்டவணை 7 – சட்ட அமுல்படுத்தலிலான செயலாற்றுகை**

| | 2015 |
|---|---|
| இக்காலப்பகுதியில் அலுவலர்களால் தொடங்கிவைக்கப்பட்ட கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 39 |
| இக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 20 |
| அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா) | 73,709,749 |

**2015ஆம் ஆண்டில் பணிப்பகத்தினால் தலைமைதாங்கப்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்**

**ஐக்கிய அமேரிக்க சுங்கம் மற்றும் எல்லை காப்பினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச கடல் துறைமுகம் தடைசெய்தல் தொடர்பிலான பயிற்சித்திட்டம்**



சுங்க செயற்பாட்டினை நடைமுறைப்படத்தும் அலுவலர்களது கொள்திறனை விருத்தி செய்யும் நோக்கில், மத்திய புலனாய்வுப் பணிப்பகமானது இலங்கையிலுள்ள ஐக்கிய அமேரிக்க தூதுவராலயம் மற்றும் சீ.எஸ்.ஐ அலுவலகம் அகியவற்றின் கூட்டிணைப்புடன் ''சர்வதேச கடல் துறைமுகம் தடைசெய்தல்'' தொடர்பிலான பயிற்சித்திட்டமானது 2015 டிசம்பர் 7 தொடக்கம் 10ஆந் திகதி வரை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த ஐந்து நாள் பயிற்சித் திட்டமானது பல நாடுகளில் உள்ள சுங்க நிர்வாகங்களுக்கு சர்வதேச பயிற்சித்திட்டங்களை மேற்கொள்ளுவதில் அனுபவத்தினைக் கொண்ட ஐக்கிய அமேரிக்க சுங்கம் மற்றும் எல்லைக் காப்பினது இரு சுங்க அலுவலர்களினால் மேற்கொள்ளபட்டன. சுங்க அத்தியட்சகர்கள், பிரதி சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் உதவி அத்தியட்சகர்கள் அடங்கிய இருபத்தி ஐந்து அலுவலர்கள் இப்பயிற்சித்திட்டத்தில் பங்கேற்று இலக்குவைத்தல், கப்பல்களை பரிசோதனை செய்தல், பண்டங்களை அடையாளங்காணல் மற்றும் கொள்கலன்களை பொறியிடல் போன்ற விடயங்களில் ஆழமான அறிவினை பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றதுடன் ஊடுருவற்ற சாதனத்தினை கையாளுதல் தொடர்பில் ''கையாளுகை அனுபவம்'' என்பவற்றினையும் பெற்றுக்கொண்டனர். இப் பயிற்சி அமர்வானது துறைமுகத்திலான வாணிப கப்பலொன்றினை பரிசோதனை செய்யும் செயல்முறை நடவடிக்கையினையும் கொண்டிருந்தன. இவ் ஐந்து நாள் பயிற்சி முடிவில் இதில் பங்கேற்றவர்கள் இலங்கையிலிலுள்ள ஐக்கிய அமேரிக்க தூதுவர் அதி மேதகு திரு. அதுல் கேஷப் அவர்களிடமிருந்து சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

இறுதி பத்தாண்டு காலப்பகுதிகளில் கொழும்புத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கலன் பாதுகாப்பு மாதிரி செயற்பாட்டில் செய்துகாட்டப்பட்டவை இலங்கைச் சுங்கம் மற்றும் ஐக்கிய அமேரிக்க சுங்கத்திற்கிடையே ஒரு கூட்டிணைப்பினை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டிய தூதுவர் இவ் நிகழ்வானது சர்வதேச சுங்க நிர்வாகங்களுடன் இப்பணிப்பகத்தினால் பேணப்படும் சர்வதேச கூட்டிணைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் எனவும் பாராட்டினார்.

கொழும்புத் துறைமுகத்திலான சுங்க நடமாடும் நுனுகி ஆராய்பகைவள், பாரிய துறைமுக நடவடிக்கை மற்றும் சீ.எஸ்.ஐ அலுவலகம் ஆகியவற்றினால் கொ்கலன்களை நுனுகி ஆராய்கின்றவற்றினை கண்காணிப்பதற்காக ஐக்கிய அமேரிக்க தூதவரினால் மேற்கொள்ளப்படட்ட நல்லெண்ண வருகை மத்திய புலனாய்வுப் பணிப்பகத்தினால் மேற்கொண்டு நடாத்தப்பட்டன. இதன் போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்துடனானதொரு கலந்துரையாடலும் இடம்பெற்றன.

2015ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் தகவல்களைப் பறிமாறுதல் மற்றும் உள்ளக முகவர் உதவி என்பவற்றினை பலப்படுத்தும் வகையில் பெல்ஜியத்தில் இடம்பெற்ற உலக சுங்க அமைப்பகத்தின் அமுல்படுத்தல் குழுக்கூட்டம், இந்தியாவில் இடம்பெற்ற பிராந்திய சுங்க அமல்படுத்தல் மற்றும் டீ.ஆர்.ஐ கூட்டம் மற்றும் இந்தோனேசியாவில் இடம்பெற்ற றிலோ தேசிய தொடர்பு மையக் கூட்டம் என்பவற்றில் மத்திய புலானாய்வுப் பணிக்கத்தின் பணிப்பாளர் பங்கேற்றிருந்தார்.

**ஏனைய கருத்துக்கள்**

மோசமான போக்குகளை தோற்றுவிக்கின்ற மற்றும் அதனை எதிர்த்து போராடுவதற்கான புலனாய்வு பகுப்பாய்வு தொடர்பில் கூடுதலாக பயிற்சிகள் தேவைப்படுகின்றதுடன். பணிப்பகத்தின் பதவிநிலை மட்டமானது அதிகரிக்கப்படவும் வேண்டியள்ளன. பயணளிக்கும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுவதற்கு மேலும் தரமிக்க கட்டுமானம் தேவையாகவுள்ளன. திணைக்களத்திற்கு நம்பகத்தன்மையாகவிருத்தல் இப்பணிப்பகத்தின் பிரதானதொரு கடமையாகவிருப்பதுடன் இப்பணிக்கத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களது மனவுறுதியினை விருத்தி செய்யும் வகையிலான பயிற்சி தேவையாகவுள்ளன.

# அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி

# பிரகடனங்கள் பணிப்பகம்

**அறிமுகம்**

சகல கடல் மார்க்கம் தொடர்பிலான பிரகடனப்படுத்துனலான குறித்த இறக்குமதியாளர்களால் கஸ்டக் என அழைக்கப்படுகின்ற சுங்கப்பிரகடனங்களை சமர்ப்பிக்கப்படும் இடமாக பிரகடனப்படுத்தல் பணிப்பகம் விளங்குகின்றன. மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான சுங்கப்பிரகடனங்களானது இப்பணிப்பகத்தின் கீழ்வருகின்ற மோட்டார் வாகனப் பிரிவுகளுக்கு தற்போது முழுமையாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இப் பிரகடனப்படுத்தல் பணிப்பகமானது பின்வரும் பிரிவுகளை கொண்டுள்ளன.

- 'டீ' கிளை
- நீள அறை
- மோட்டார் வாகனப் பிரிவு
- கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் தொடர்பான ஆவண செய்முறைப்படுத்தல் பிரிவு
- ஆவணம் கையாளும் நிலையம்

புதிய மீள் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசிறை மற்றும் சேவைகள் (கொழும்பு) கொத்தணியின் கீழ்மேற்படி சகல பிரிவுகளும் தொழிற்படுகின்றன.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. சுங்க ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டளைச்சட்டத்தின் கீழ் சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல்.
2. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சரக்குத் தொடர்பில் பெறுமதி மதிப்பிடலும் உரிய அரசிறையைச் சேகரித்தலும்.
3. வியாபார, வர்த்தக மற்றும் பொதுமக்களது நலன் கருதி அரச கொள்கையின் கீழ் தீர்வைத் தள்ளுபடி/ விலக்களிப்புகளை வழங்கல் மற்றும் தீர்வையினையும் வரியினையும் தற்காலிகமாக இடைநிறுத்தல்.
4. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளோடு தொடர்புபட்ட சகல சட்ட ரீதியான தேவைப்பாடுகளுடனும் தன்னிச்சையான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்.
5. விரைவான வெளியாக்கல் நடைமுறையின் கீழ் சட்ட ரீதியான இறக்குமதியாளர்கள்/ இறக்குமதியாளர்களின் வெளியாக்கத்தை எளிதாக்கல்.

**இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்கள்**

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோளானது இறக்குமதி செய்கின்ற பொருட்கள் மற்றும் பிணைப்படுத்தப்படவிருக்கும் பொருட்கள் தொடர்பில் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல் வசதிகளை வழங்குதலாகும். இக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை இப்பணிப்பகம் விசேடமாக மேற்கொண்டுள்ளது,

i. நேரடி வர்த்தக உள்ளீடு ஊடாக சுங்கப் பிரகடனங்களைப் பெறுதல்.
ii. இற்றைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனம் தொடர்பிலான பொருட்பட்டியல் மற்றும் தீர்வைகள் செலுத்துகை மற்றும் ஏனைய அறவீடுகளை உறுதிப்படுத்தல்.
iii. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு விரைவான போக்கு வசதிகளை வழங்குதல்
iv. சுங்க அத்தியட்சகர் பெறுமதி மதிப்பீட்டாளர்கள் ஆகியோரினால் சுங்கப் பிரகடனத்தினைச் செய்முறைப்படுத்தல்.
v. கொள்கலன் சாலையிலுள்ள முழுக் கொள்கலன் பொருட்களையும் மற்றும் குத இல்லங்களிலுள்ள சில்லறைப் பொருட்களைக் கொண்ட கொள்கலன்களை வெளியாக்கல்.
vi. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு விரைவாக வெளியாகக்கூடிய வசதிகளை வழங்குதல்.
vii. தன்னியக்கச் செயலாக்கமானது, தாமதமின்றி சுங்கப்பிரகடனங்களை செயலாக்கம் செய்யும் வகையில் இறக்குமதியாளர்களுக்கு வசதியளிக்கும் நோக்கில் **"அஸிகுடா வேல்ட்"** ஊடாக தற்போது முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. சுங்கப் பிரகடனம் தொடர்பான அனைத்து விபரங்களும் தற்போது **"அஸிகுடா"**முறைமை மூலம் நீள அறையில் (2ஆம் மாடி) பெறப்படுகின்றன. இது நேரடி வர்த்த இடைப்பரிமாற்ற வசதிகளைப் பயன்படுத்தி தமது சுங்கப்பிரகடனத்தை தமது அலுவல்களிலிருந்து நேரடியாக இடுவதற்கு உதவுகிறது.
viii.பொருள் வகைப்படுத்தல் விடயங்கள் மாத்திரம் சுங்க அத்தியட்சகர்/ பெறுமதி மதிப்பீட்டாளர்களைக் கொண்ட சிறந்த பணியாட்தொகுதியினர் மூலம் கைமுறையினால் மேற்கொள்கொள்ளப்படுகின்றன.

**இப்பணிப்பகத்தின் ஏனைய குறிக்கோள்கள்**

i. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் வெளியாக்குதலுக்கு வசதியளித்தல்.
ii. பிணைப்படுத்தப்படவிருக்கும் பொருட்களுக்கு வசதியளித்தல்.
iii. பொருட்களை உரியவாறு வகைப்படுத்துவதனூடாக அரசிறை ஒழுக்குகளை/ வெளிநாட்டு நாணய மாற்று இழப்புக்களைக் குறைத்தல்.
iv. சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புபட்ட பிற சட்டங்களுக்கிணங்க அமுல்படுத்தல் செயற்பாடுகளை "டீ" கிளையூடாக மேற்கொள்ளல்.
v. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அரசுக்குரிய அரசிறையை மதிப்பிட்டு அவற்றைச் சேகரித்தல்.
vi. நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கிணங்க, தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான கருத்திட்டப் பொருள் வெளியாக்கலுக்கு வசதியளித்தல்.
vii. சலுகை அங்கீகாரமுடையோர்/ சட்ட ரீதியான இறக்குமதியாளர்களது பொருள்/ வாகனங்களை விரைவாக வெளியாக்குவதற்கு வசதியளித்தல்.
viii. தற்காலிக சுங்கப் பிரகடனங்களுக்கு எதிரான பொருட்களை வெளியாக்கல் தொடர்பில் பல்வேறு அரச திணைக்களங்கள்/ பிற அமைப்புகள்/ பொதுமக்கள் ஆகியோருக்கு வசதியளித்தல். அரச கொள்கைக்கிணங்க தீர்வை மற்றும் வரி தொடர்பான விலக்களிப்பு மற்றும் நிறுத்தி வைத்தல்/ தீர்வை தள்ளுபடி ஆகியன வழங்கப்படுகின்றன.
ix. மட்டுப்படுத்தப்பட்டவை மற்றும் தடைசெய்யப்பட்டவை தொடர்பிலான செயலாக்கத்தில் தாக்கம் செலுத்துதல்.

**இப்பணிப்பகத்தின் அலுவலர்களது பொறுப்புகள்**

நீள அறை அலுவலர்கள், அரசுக்கான உரிய அரசிறையினைச் சேகரிக்கும் அதேவேளை, தாமதமின்றி விரைவாக சுங்கப் பிரகடனங்களைச் செயன்முறைப்படுத்தவும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளியாக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றனர். இவ் அலுவலர்கள், பொருட்களை வெளியாக்குவதற்குத் தேவையான இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், உணவு மற்றும் ஔடதங்கள் அதிகாரசபை, சீனி ஆராய்ச்சி நிறுவனம், அழகு சாதனங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இலங்கை தர நிர்ணயம், அணுசக்தி அதிகாரசபை, தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றும் துறைமுக கப்பலேற்று அவதானிப்பு அறிக்கை போன்ற உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும்/ அல்லது விசேட அங்கீகாரம் தேவையான பொருட்கள் தொடர்பில் கண்காணிப்பாகவும் உள்ள அதேவேளை, இறக்குமதியாளர்களால் நிறைவேற்றப்படவேண்டிய பின்வருகின்ற விடயங்கள் தொடர்பில் விசேட கவனமும் செலுத்துகின்றனர்,

- அனுப்பப்பட்ட பொருட்களின் வெளியாக்கல் கோரிக்கைக்கான அதனைக் கொண்டுவரும் கப்பலில் இருந்தான அங்கீகாரம்
- முறைமையில் பாவிக்கப்பட்ட சரியான குறியீட்டு இலக்கங்களைப் பயன்படுத்தி அனுப்பு பொருட்கள் பற்றிய முழு விபரம்
- இயைபு முறைப் பெயரேட்டின் அடிப்படையில் அமையப்பெற்ற சுங்க இறக்குமதிகள் இறுப்புப் பட்டியலில் உள்ளவாறு சரியாக பொருட்களை வகைப்படுத்தல்
- அனுப்பு பொருட்களின் உண்மையான பரிமாற்றுப் பெறுமதியை பிரகடனப்படுத்தல்.
- விதிக்கத்தகு நாணய வகையினை (நாணய மாற்று விகிதம்) பயன்படுத்தி பெறுமதிகளை பிரகடனப்படுத்தல்.
- அனுப்பு பொருட்களுக்கான பெறுமதியை (வெளிநாட்டு நாணயமாற்று) ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட வங்கியூடாக மேற்கொள்ளல்.
- ஏற்புடையவாறான, தேவையான அதிகாரமளிக்கப்பட்ட ஆவணங்கள், அனுமதிப் பத்திரங்கள், உத்தரவாதப்பத்திரங்கள், மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றினது இணைத்தல்

மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவும் ஒழுங்குமுறையில் இருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பொருள் வெளியாக்கலுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தக்கூடும்.

மேற்கூறப்பட்டவாறாக இப்பணிப்பகமானது அதன் தொழிற்பாடுகளுக்கிணங்க 05 பிரதான பிரிவுகளை கொண்டுள்ளன.

**"டீ" கிளை**

டீ - கிளையானது இப்பணிப்பகத்தின் செயலகமாகக் கருதப்பட முடியும். ஆரம்பத்தில் சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட வேளையில் இவரின் கீழ் விடயம் ஏ, விடயம் பீ மற்றும் இன்னும் அறியப்பட்ட நான்கு விடயங்களைக் கையாளுவதற்காக நான்கு இலிகிதர்கள் பணியாற்றியிருந்தனர். காலப்போக்கில் விடயம் ஏ பிரிவானது முன்னர் நிருவாகக் கிளையெனப்பட்ட தற்போதைய மனித வள முகாமைத்துவப் பணிப்பகமாக விருத்தியடைந்துள்ளது. விடயம் சீ இலிகிதர்கள் துறைமுக அறவீடுகளைக் கையாண்டு வந்ததோடு, இதுவே பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையாக மாறியது. தற்போது இது

தனியொரு அமைப்பாகத் திகழ்கிறது. பழைய டீ கிளையானது திறைசேரிக்கும் சுங்கத்திற்கும் வரலாற்று ரீதியான ஒருங்கிணைப்பினைப் பேணியிருந்ததோடு, தீர்வைத் தள்ளுபடி மற்றும் விலக்களிப்புகளை வழங்குதல், பொருள் பட்டியல்களைப் பெறுதல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை இன்னும் அதன் அசல் நாமத்தில் மேற்கொண்டு வருகிறது.

'டீ' கிளையானது இறக்குமதியாளர்களுக்கு/பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் பல்வேறு கூறுகளாக்கப்பட்டுள்ளன.

- டி ஆர் எ பிரிவு
- வங்கி உத்தரவாதக் பிரிவு
- தீர்வை விலக்களிப்புக் பிரிவு
- தொகையான சரக்கினை கண்காணிக்கும் பிரிவு
- காணே பிரிவு
- கப்பற் சரக்குப்பட்டியல் பிரிவு
- விசாரணைக் பிரிவு
- மோட்டார் வாகன சலுகை அனுமதியை ஆய்வு செய்து நீக்கம் செய்யும் பிரிவு/சுங்க பிரதிப் பணிப்பாளரின்(டி) தலைமையில்

**டீ கிளையினால் கையாளப்படுகின்ற ஒருசில முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான தொழிற்பாடுகள்**

1. நிதி அமைச்சினால் வழங்கப்படும் தீர்வை விலக்களிப்புகள் தொடர்பான விடயங்களை பதிவு செய்தலும் தீர்வையற்றவை எனும் அடிப்படையில் அத்தகைய பொருட்களை வெளியாக்க வசதியளித்தலும்.
2. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைக் காப்புக் கட்டளைக்கிணங்க தீர்வை விலக்களிப்புகளையும் சலுகைகளையும் வழங்குதல்.
3. வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் வினியோகிக்கப்படும் வெளியாக்கல் சான்றிதழின் அடிப்படையில் ராஜதந்திரி உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பொதி மற்றும் அலுவலக பொருட்கள் என்பவற்றினை வெளியாக்க அனுமதித்தல்.
4. பல்வேறு வர்தத்க உடன்படிக்கையின் கீழ் இறக்கமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் தீர்வை இலவசம் அல்லது முன்னுரிமை விகிதங்கள் எனும் அடிப்படையில் வழங்குதல்.
5. நிதி, திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தாமதக் கொடுப்பனவின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை வெளியாக்க வசதியளித்தல்.
6. பல்வேறு காரணங்களின் விளைவாக உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் சுங்கப் பிரகடனங்களை தற்காலிக அடிப்படையில் அல்லது நிகழ்வொன்றுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அந்த நிகழ்வு முடிவுற்றதும் அத்தகைய பொருட்களை மீள ஏற்றுமதி செய்ய வசதியளித்தல்.
7. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தீர்மானிக்கப்பட்டவாறாக தேவைப்படுகின்ற கருத்திட்ட பொருட்களை மீள் எற்றுமதி தொடர்பில் பதிவினை மேற்கொள்ளுதலும் கண்காணித்தலும்.
8. கப்பற் சரக்குப் பட்டியல்களை பெறுதல் மற்றும் கப்பல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறாக அவை தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
9. தற்காலிக சுங்கப்பிரகடனங்கள் விடயத்தில் வங்கி உத்தரவாதங்கள்/கூட்டுறவு உத்தரவாதங்களை பாதுகாத்தலும் சுங்கப்பணிப்பாளரினால் (பிரகடனங்கள்) தீர்மானிக்கப்பட்டவாறான பிற விடயங்களை பாதுகாத்தலும்.
10. கண்காணிப்பு நோக்கங்களுக்காக சி.பி.டி கானே அல்லது எ.ரி.எ கானே திட்டத்தின் கீழ் தற்காலிகமாக இறக்கமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை பதிவு செய்தல்.
11. குவியலாக கொண்டுவரப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும் மேலதிக அறவீடுகளை அறவிடவேண்டின் அதனை அறவிடல்.
12. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்க்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்தல்.
13. இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் /சுங்க ஒழுங்கு விதிகள் தொடர்பிலான மீறுகைகளை கண்டுபிடித்தல் மற்றும் எதனோல் மற்றும் மோட்டார் வாகனத்தினது வெட்டப்பட்ட பாகங்களது கண்டுபிடிப்பு போன்றவற்றிற்கு சுங்கக் கட்டளைச்சட்டத்தின் எற்பாட்டிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.
14. அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற முகவர்களுடன் கூட்டிணைப்பினை ஏற்படுத்தல்.

**நீள அறை**

வரலாற்று ரீதியில், உண்மையாகவே சுங்க நிருவாகத்தின் ஒரு நீள அறையாக இது காணப்பட்டதோடு, இந்நவீன காலத்திலும் கூட இது ஒரு நீள அறையாகவே காணப்படுகிறது. இது ஆசியாவிலுள்ள அனேக பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலும் மற்றும் டென்மார்க், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த சுங்க அமைப்புகளிலும் இது பொதுவான சிறப்பம்சமொன்றாகவுள்ளது. சுங்கமானது பிரதானமாக அரசிறை தொடர்பிலான அரச நிறுவனமாகவிருப்பதனால் நீள அறையின் முக்கித்துவம் பிரதானமானதாகும். இதன் ஒட்டுமொத்த இலக்குகள் சமூகப் பாதுகாப்புக் கடப்பாடுகளைப் பேணுவதற்காக இருந்த போதிலும், உரிய அரசிறையினைச் சேகரிப்பதற்கான முன்னுரிமையானது குறைவடைந்ததில்லை.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது சுங்கத் தீர்வையினை விதிப்பதற்கு சுங்கம் அதிகாரம் கொண்டுள்ளது எனவும் 47 ஆம் பிரிவானது பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட பொருட்களது உண்மையானது சரியானதுமானதொரு பிரகடனம் செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களது உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். மற்றும் அத்தகைய பொருட்கள் தொடர்பில் செலுத்தத்தகு (தீர்வை போன்றன) சகல தீர்வைகளும் செலுத்தவும் வேண்டப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த பிற சகல கப்பல் சரக்குகள் தொடர்பிலான இறக்குமதியாளர்களால் சுங்கப் பிரகடனங்கள் (கஸ்டெக் எனவழைக்கப்படுகிறது) சமர்ப்பிக்கப்படும் இடம் சுங்க நீள அறையாகும். மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான சுங்கப் பிரகடனங்களது செய்முறையானது முழுமையாக மோட்டார் வாகனத்தினப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சுங்கமானது சுங்கத் தீர்வைகளை மட்டுமல்லாது இதர பல்வேறு வரிகளையும் சேகரிக்கின்றன. அதாவது ;

- பெறுமதி சேர் வரி
- துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
- தேசக் கட்டுமான வரி
- விசேட பண்ட அறவீடு
- உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி
- பிற அரச நிறுவனங்கள் சார்பிலலன செஸ் வரி

சுங்கப் பிரகடன செய்முறை அலுவலர்கள் இயைபுமுறைக்குறியீடு தொடர்பில் இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை தொர்பில் சுங்கப் பிரகடன செய்முறைக்காக 05பிரிவுகளாக வகுத்துள்ளனர். அவை,

- ஏ பிரிவு - 01 – 44 ஆம் இயைபுமுறை குறியீடு
- பீ பிரிவு - 45 – 73 ஆம் இயைபுமுறை குறியீடு
- சீ பிரிவு - 74 – 84 ஆம் இயைபுமுறை குறியீடு
- டீ பிரிவு - 85 – 97 ஆம் இயைபுமுறை குறியீடு (மோட்டார் வாகனங்களுக்கானவை தவிர)
- ஈபிரிவு - மிக விரைவில் பழுதடையக்கூடிய பொருட்கள்,உணவுப் பொருட்கள், மருந்து, குவியலிலான பொருட்கள் போன்றவை.

**சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல்**

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 47 இன் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக சுங்கப்பிரகடனங்களது 5 பிரதிகளை (உத்தரவாதப் பிரதி, விநியோகப் பிரதி, புள்ளிவிபரவியல் பிரதி, நணயமாற்றுப் பிரதி, குழுக்கள் பிரதி) இறக்குமதியாளர்கள் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சுங்கப் பிரகடனம் பின்வரும் துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- ✓ ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு
- ✓ விநியோகக் கட்டளை
- ✓ பொருள் விலைப்பட்டியல் (என்.எப்.ஈ. அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வங்கி மூலம் கையெழுத்திட்டு முத்திரிரை குறிக்கப்பட்டிருத்தல்)
- ✓ பொதியிடப்பட்ட பட்டியல்
- ✓ இயைபு முறைக் குறியீட்டு வகைப்படுத்தலுக்குத் தேவைப்படும் ஏதேனும் தொழில்நுட்பத் தகவல்
- ✓ பொருளுக்கான உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்
- ✓ மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பின், அது தொடர்பில் தேவையான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம், இலங்கை தர நிர்ணயச் சான்றிதழ் மற்றும் CDDA போன்ற அனுமதிப் பத்திரம்/ உத்தரவுப் பத்திரம்.
- ✓ இரண்டு பிரதிகளில் பூரணமாக நிரப்பப்பட்ட பெறுமதிப் பிரகடனம்
- ✓ வரவுக் கடிதம், தந்தி மூலமான பரிமாற்றம் போன்ற கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது நிரூபனம்

- ✓ பொதிகள் பற்றிய பட்டியல்
- ✓ ஏதேனும் விசேட சான்றிதல் (வெளிநாட்டு ராஜதந்திரிகள்,தீர்வைத் தள்ளுபடி, சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றம் துறைமுக கப்பலேற்ற அவதானிப்பு அறிக்கை, சீனி ஆராய்ச்சி நிறுவனம்)

தனியானதொரு சுங்கப்பிரகடனம் மூலம் அதிகமான பொருட்கள் பதியப்பட்டு போதும் மற்றும் பல்வேறு இயைபு முறைக் குறியீடுகள் மூலம் வகைப்படுத்தப்பட்டுகின்ற சந்தா்ப்பத்திலும், சம்பந்தப்பட்ட பிரிவானது பொருள்களினடிப்படையில் அல்லது விதிக்கத்தகு அதிகூடிய தீா்வை மற்றும் பிற அறவீடுகள் குறித்து தீா்மானித்தல் வேண்டும்.

சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழான பிரிவு 12, 43 மற்றும் அட்டவணை – ஆ ஆகியன, பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள சகல மட்டுப்படுத்தப்பட்டவைகள் மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சுங்கத்தை வேண்டுகின்றன. இவ்விசாலமான ஏற்பாடுகள் காரணமாக, தற்போது அமுலிலுள்ள 33 இற்கும் மேலான சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை சுங்கம் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில், முதன்மையும் பிரதானமுமாகவிருப்பது 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமாகும்.

**மோட்டார் வாகனப் பிரிவு**

அசிக்குடா எனும் மென்பொருளானது தற்போது எக்சஸ் வலையமைப்பில் தொழிற்படுவதோடு, இதனைத் தனியார் வங்கிகளுடன் இணைத்து வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடா்பில் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை சுங்கத்தினால் பரீட்சிக்க முடிவதோடு, அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்வதற்கான வசதியினை வழங்கும் வகையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைப்பினையும் வழங்குகிறது. இதன் மூலம் சுங்கத்துடன் தொடர்பற்ற முறையிலான மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்வதைத் தடுப்பதற்கு ஏதுவாகவிருக்கும்.சுங்கப் பிரகடனங்கள் செயன்முறைப்படுத்தப்படும் போது இப்பிரிவானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தும்:

- ✓ அன்பளிப்பு வாகனங்கள் மற்றும் அதிகூடிய காலத்தைக் கொண்ட வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்.
- ✓ அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலீட்டுச்சபை அதிகாரிகள் ஆகியோருக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திர சலுகைகளும் நிபந்தனைகளும்.
- ✓ டீ.பீ.எல். மற்றும் அரச சார்பற்ற அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படும் தீர்வை இலவசச் சான்றிதழ்கள்.
- ✓ கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்பிலான தற்காலிக சுங்கப்பிரகடனம்

வாகனங்களுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தும் போது இப்பிரிவிலுள்ள அலுவலர்கள் பின்வரும் பின்வரும் விடயங்கள் சரியாக இருப்பதை உறுதிப்படுத்தல்,

- 
    - பதிவுச் சான்றிதழ்
    - பரிசோதனைச் சான்றிதழ்
    - விலைப்பட்டியல்
    - வாகன சாலைகளில் அவற்றைப் பரிசோதனை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளரின் பரிசோதனை அறிக்கை

  என்பவற்றுக்கிணங்க பொருட்கள் சரியாக விபரிக்கப்பட்டுள்ளமை

- வாகனங்களின் காலம் சரியாக மதிப்பிடப்பட்டுள்ளமை
- குறித்த வாகனம் தொடர்பில் முகவர்களது பெறுமதி சரியாக கொடுக்கப்பட்டுள்ளது.
- விலைப்பட்டியலுக்கு இணங்க நாணயங்கள் சரியாகப் பதிப்பட்டுள்ளமை.
- பிரகடனப்படுத்தப்பட்ட வாகனம் சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை.
- கப்பல் கட்டணங்கள் சரியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை,
- பிரகடனப்படுத்தப்பட்ட மேலதிக விடயங்களுடன் பரிசோதனைச் சான்றிதழ் இணங்குதல்.
- சலுகை தொடர்பிலான இறக்குமதிகளுக்கு உரிய உத்தரவாதப் பத்திரம் வழங்கப்படுதல், இதன் போது, வாகன வெளியாக்கலுக்கான அனுமதி சுங்கப்பிரதிப் பணிப்பாளரால் (மோட்டார் வாகனம்) வழங்கப்படல் வேண்டும்.

**கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் ஆவணம் செய்முறைப்படுத்தல் கூறு**

திணைக்களத்தின் மறுசீர் திருத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒரு பகுதியாகவிருந்த பிணைகள் பிரிவானது, பிணைப்படுத்தல் மற்றும் பிணையிலிருந்து எடுத்தல் தொடர்பிலான சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தலானது இப்பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். எனினும், இங்கே கைத்தொழில் மற்றும் சேவைகளுக்கான வேறானதொரு பணிப்பகம் உள்ளன. தொடர்புபட்ட சுங்கப் பிரகடனங்களது செய்முறையானது பிரகடனப்படுத்தல் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆவணப்படுத்தல் நிலையம்**

இந்நிலையமானது தற்போது சாமஸ் குயேவில் அமையப்பெற்றுள்ளதுடன், எதிர்காலத்தில் இதனைப் புதிய தலைமை அலுவலகக் கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் அமையப்பெற்றுள்ள நீள அறையுடன் இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு,

- ✓ சகல முழுக் கொள்கலன் பொருட்களுக்குமான சுங்க வாயில் அனுமதிப்பத்திரம் (உள்ளக) வழங்குதல். (இறக்குமதியாளர்கள், முதலீட்டுச் சபை, இன்பெக், பிணைகள், பயணிகள் உடன் வராத பொதிகள், அரசிறைச் சேகரிப்புச் செயலணி அடங்கலான பல்வேறு விசாரணைப் பிரிவுகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள கொள்கலன்கள்)

- ✓ அவர்களது இடத்திலிருந்து கொள்கலன்களை அகற்றுவதற்கான இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. வாயில் அனுமதிப் பத்திரத்தினை விநியோகிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- ✓ ஆவணப்படுத்தல் நிலையத்திற்கு பெறப்படுகின்ற ஆவணங்கள்

    - ○ நீள அறை மற்றும் பிணைப் பிரிவிலுள்ள நுணுக்கமாக ஆய்வுசெய்யும் பிரிவுகளில் இருந்தான சுங்கப் பிரகடனங்கள் நுட்பமாக ஆராயப்படுவதுடன், சுங்க உள்ளக வாயில் அனுமதிப்பத்திர விநியோகத்திற்கான அதிகாரத்தைப் பெறும் வகையில் ஆவணப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்படல்.

    - ○ குறித்த கொள்கலன் சாலையிலிருந்து அவற்றினை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கான இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. இன் அதிகாரத்தினை பெறுவதற்காக பட்டியல் மற்றும் கப்பலேற்றுச் சான்றிதழ் போன்றவற்றின் பிரதியுடன் விநியோகக் கட்டளையின் இளஞ்சிவப்புப் பிரதியுடன் ஆவணப்படுத்தல் நிலையத்திலுள்ள சுங்க அத்தியட்சகர்களுக்குச் சமர்ப்பிக்கப்படல். மேற்குறிப்பிட்ட விநியோகப் பிரதியின் இளஞ்சிவப்புப் பிரதியானது ஆவணப்படுத்தல் நிலையத்தில் முதல் தடவைக்காக சுங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் (பிரகடப் பணிப்பகத்தில், நீள அறையில் செய்முறைப்படுத்தப்படும் அதே ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இணங்கப்படவில்லை என்பதுடன் சுங்கத்தினால் ஏதேனும் குறிப்புகள் உள்ளடக்கப்படவில்லை).

- ✓ ஆவணப்படுத்தல் நிலையத்தில் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள்

    - ○ இந்நிலையத்தில் நுட்பமாக ஆராயப்படும் சுங்கப் பிரகடனத்தின் விநியோகப் பிரதி மற்றும் விநியோகக் கட்டளையின் இளஞ்சிவப்புப் பிரதி என்பன ஆவணப்படுத்தல் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் (சுங்கப் பரிசோதகர் தரம் 1 இனால் கொண்டுவரப்படல்).

    - ○ சுங்க அத்தியட்சகர் (ஆவணப்படுத்தல் நிலையம்) அவர்களுக்கு பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல்.

    - ○ சுங்க அத்தியட்சகரால் (ஆவணப்படுத்தல் நிலையம்) ஆவணங்கள் ஊர்ஜிதம் செய்து ஒப்பமிடப்படுதல்.

        - ○ முறைமைக்குள் பதிவுசெய்யும் வகையிலும் மற்றும் கொள்கலன் சாலையிலிருந்து கொள்கலன்களை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதற்காகவும் விநியோகப் பிரதியின் இளஞ்சிவப்புப் பிரதி இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. என்பவற்றுக்கு சமர்ப்பிக்கப்படல்.

        - ○ முறைமைக்கு மற்றும் சுங்க உள்ளக வாயிலில் நுழைவதற்கான இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. வாயில் அனுமதிப் பத்திரத்துடன் சுங்கப் பிரகடனத்தின் விநியோகப் பிரதியினை சுங்க உதவி அத்தியட்சகர் (ஆவணப்படுத்தல் நிலையம்) அவர்களுக்கு அனுப்பப்படல்.

    - ○ சுங்க வாயில் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட பின்னர், சுங்க உள்ளக வாயில் அனுமதிப் பத்திரத்தின் பச்சை நிறப் பிரதியுடன் தொடர்புடைய சுங்கப் பிரகடன விநியோகப் பிரதியின் போட்டோப் பிரதிகள் மற்றும் சரக்கு மேடை உதவியாளரின் சுங்க இல்ல முகவர் அனுமதிப்பத்திரம் என்பன பிரதம சுங்கப் பரிசோதகர் (ஆவணப்படுத்தல் நிலையம்) அவரால் பதிவுசெய்யப்பட்டு கோவை இடப்படுகின்றன.

- இவ்விரு வாயில் அனுமதிப் பத்திரங்கள் (இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. மற்றும் சுங்க உள்ளக வாயில் அனுமதி) பெறப்பட்ட பின்னர், கொள்லன்கள் கொள்கலன் சாலையிலிருந்து அகற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் சுங்க வெளிச்செல்லல் அனுமதி விநியோகிக்கப்பட்டதும், புதிய கொள்கலன் வாயிலுக்கு அகற்றப்பட்டு துறைமுகப் பிரதேசங்களிலிருந்து கொள்கலன்களை அகற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.
- புதிய கொள்கலன் வாயிலில் கொள்கலனில் சுங்க கொள்கலன் அச்சு பொறிக்கப்பட்டுள்ளதுடன், சுங்க வாயில் அனுமதிப்பத்திரத்தில் பொறிக்கப்பட்ட அச்சின் இலக்கம் குறிக்கப்பட்டுள்ளன.

**கானே (Canet)**

1. ஏ.ரீ.ஏ. மற்றும் சீ.பீ.டீ. என இருவகைக் கானே திட்டங்கள் காணப்படுகின்றன.

2. ஏ.ரீ.ஏ. கானே – ஏ.ரீ.ஏ. ஆனது பிரென்ச் மொழி எழுத்தின் முதலெழுத்தாகவுள்ளதுடன் ஆங்கிலத்தில் இது தற்காலிக அனுமதி என்ற கருத்தினை வழங்குகின்றது.

3. ஏ.ரீ.ஏ. கானே ஆனது நாட்டிற்குள் கொண்டுவரப்படும் வியாபார மாதிரிகள், கண்காட்சிப் பொருட்கள் மற்றும் தொழில்வாண்மை உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் தற்காலிக இறக்குமதிகள் இதில் அடங்கும்.

4. சீ.பீ.டீ. கானே - இது மோட்டார் வாகனங்கள் மற்றும் பாரிய வாகனங்களுக்கானவை "Carnet De Passages En Douane"

5. Triptique - மோட்டார் சைக்கிள்களுக்கானவை

6. 1992 இல் திருத்தப்பட்டவாறான தனியார் வீதி வாகனங்கள் (1954) மற்றும் வியாபார வீதி வாகனங்கள் (1956) ஆகிய இரண்டினதும் தற்காலிக இறக்குமதி தொடர்பில் சுங்க பேரவைகளது ஏற்பாடுகளுக்கிணங்க வரையப்பட்ட இந்த கானே ஆனது பட்டியற்படுத்தப்பட்ட நாடுகளில்/ சுங்க இராச்சியங்களில் உபயோகிக்கப்படலாம்.

7. எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதோ அதே நாட்டிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களை உள்ளடக்கிய ஏதேனும் தற்காலிக செயற்பாட்டிற்கு இந்த ஏ.ரீ.ஏ. நடைமுறையினை பிரயோகிக்க முடியும்.

8. குறிப்பிட்ட காலப்பகுதிக்கிடையில் வாகனத்தினை மீள ஏற்றுமதி செய்தல் மற்றும் மோட்டார் வாகனங்களது தற்காலிக நிர்வாகத்துடன் தொடர்புபட்ட சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் போன்ற நிபந்தனைகளின் பேரில் இது விநியோகிக்கப்படுகின்றன.

9. ஏ.ரீ.ஏ. கானே ஏற்றுக்கொள்ளப்பட்டதும் தேவைப்படவிருக்கும் பிற ஏற்றுமதி ஆவணங்கள் (நாணயக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் அல்லது ஏற்றுமதி அனுமதிப் பத்திரம்) ஏதேனும் பதிலீடு செய்யலாகாது. அத்தகைய தேவைப்பாடுகள் தனித்தனியாக அதனுடன் இருத்தல் கட்டாயமானதாகும்.

10. கானேயானது உரிய முறையில் விடுவிக்கப்படல் வேண்டுமென்பதுடன், வாகனம் நாட்டை விட்டுப் போகும் போது சுங்கத்தினால் முத்திரையிடப்பட்ட ஏற்றுமதிப் பத்திரத்திற்கு ஒத்த இறக்குமதிப் பத்திரத்தில், சுங்கத்தினால் முத்திரையிடப்படல் கட்டாயமானதாகும்.

11. கானே தொடர்பில் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் போது, கானே உரிமையாளர் ஒரு பிரகடனத்தில் ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் கானேயினைப் பாவிப்பதற்காக வழங்கப்படும் வழிகாட்டிகளுக்கு இணங்க உரிய விநியோகிப்பு அதிகாரியுடன் ஒப்பந்தமொன்றினையும் செய்ய வேண்டும்.

12. பேரவையின் ஏற்பாடுகளில் ஏதேனும் மீறுகை, மாற்றீடுகள், பிழையான பிரகடனம் அல்லது நடித்தல் என்பன குற்றமாகக் கருதப்பட்டு குறித்த நாட்டினது சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறான அபராதத்திற்குள்ளாக வேண்டியேற்படும்.

13. ஏ.ரீ.ஏ. ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக இந்த ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்ட குழுக்களாகவிருக்கின்ற சுங்க அதிகாரங்களால் வழங்கப்பட்ட பின்வரும் கையாளுகைகளுக்காக ஏ.ரீ.ஏ. கானேயினைப் பாவிக்க முடியும்.

    13.1 தொழில்வாண்மை உதிரிப்பாகங்கள் பேரவை

    13.2 கண்காட்சிகள் மற்றும் சந்தைகள் பேரவை

    13.3 வியாபார மாதிரிகள் பேரவை

    13.4 பொதியிடல் பேரவை

    13.5 கடல்சார் கட்டணங்கள் பேரவை

13.6 விஞ்ஞான உதிரிப்பாகங்கள் பேரவை

13.7 Pedagogic உபகரண பேரவை

13.8 தனியார் வீதி மற்றும் வியாபார வீதி வாகனங்கள் பேரவை

13.9 வானூர்தி மற்றும் இன்பகரப் படகு பேரவை

**சீ.டி,பீ. நடைமுறை(Caenet De Passage)**

1. கானேயினால் உள்ளாக்கப்பட்ட பொருட்களது ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு உள்ளடக்கம் மற்றும் பிரிவுகள் என்பவற்றைக் கொண்டுள்ளன. உள்ளடக்கமானது பின்வரும் விடயங்களைள் கொண்டுள்ளது:

    1.1 விநியோக அமைப்பு

    1.2 உள்ளகப் பிணைப்புச் சங்கிலி

    1.3 வைத்திருப்பவரின் பெயர்

    1.4 அனுமதிக்கும் காலம்

    1.5 அந்த நாடுகளில் செல்லுபடியாகவிருத்தல் மற்றும் ஒத்துள்ள உத்தரவாதமளிப்பு அமைப்புகள் இருத்தல்

    1.6 பொருள் வைத்திருப்பவரது பிரதிநிதி ஒருவரால் கானே பயன்படுத்தப்படின், பிரதிநிதியன் பெயர்

2. முன் பக்கத்தில் பொருள் எவ்வகை விடயங்களில் பாவிக்கப்படும் என்பதைக் குறிப்பிடுதல் (உதாரணமாக, கண்காட்சிகளுக்கான மாதிரிகள் போன்றன). கானேயினால் உள்ளாக்கப்படவிருக்கும் சகல பொருட்களது முழு விபரங்களும் அட்டையின் பிற்பக்கத்திலான பொதுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொடர் கடதாசிகள் அட்டையில் இடம் ஏதேனும் இருப்பின் சேர்க்க முடியும் என்பதுடன், கானேயினால் உள்ளாக்கப்பட்டுள்ள சகல பொருட்களது விபரங்களுக்கும் தாள்கள் போதுமானதாகவிராது. இங்கு தேவைப்படும் விபரங்களாக – பொருளின் விபரம், குறியீடுகள் மற்றும் இலக்கங்கள் (ஏதேனுமிருப்பின்), அளவு, கானே பாவிக்கப்படும் நாட்டின் குறித்த பொருளின் பெறுமதி மற்றும் உற்பத்தி செய்த நாடு என்பனவாகும். குறித்த பொருள் ஏதேனும் குறியீட்டு இலக்கத்தினைக் கொண்டிராத வேளை, சுங்கமானது அடையாளப்படுத்தல் குறியீடுகளை பிரதிசெய்யும்.

3. சுங்கப் பணிப்பாளர் கானே செயன்முறையினை அங்கீகரித்தல் மற்றும் பாவனைக் காலத்தினைத் தீர்மானித்தல்

4. கானேயினைப் பதிவுசெய்யுமாறு சுங்க அத்தியட்சகர் (டீ கிளை) அவர்களுக்கு சுங்கப் பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

5. கானேயினைப் பதிவுசெய்யுமாறும் மற்றும் பிரதி ஆவணங்களைப் பத்திரப்படுத்துமாறும் சுங்க உதவி அத்தியட்சகருக்கு சுங்க அத்தியட்சகர் அறிவுறுத்தல்.

6. சுங்க உதவி அத்தியட்சகர் கானேவினைப் பதிவுசெய்வதுடன், மோட்டார் வாகனப் பிரிவில் சுங்கப் பிரகடனத்தினைச் செய்முறைப்படுத்துவதற்கு உரிமையாளரை அனுமதித்தல்.

7. சுங்க அத்தியட்சகருக்கு முன்னால் இறக்குமதிச் சீட்டு நிரப்பப்பட்டு அதன் மீது ஒப்பமும் முத்திரையும் இடப்பட்டு, இந்த வாகனமானது கானே திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அதனை 3 மாதங்களுக்குள் மீள ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும் என்ற நிபந்தனையில் இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு சுங்கப் பணிப்பாளர் (பிரகடனம்) அவர்களின் முன்னிலையில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்.

8. பிரதான பதிவினைப் பேணுதலும் செல்லுபடித் திகதி தொடர்பில் ஒரு பட்டியினை இடல்.

9. குறித்த வாகன விநியோக அனுமதியினை வழங்கும் வகையிலான பிரதிச் சுங்கப் பணிப்பாளரின் அதிகாரத்திற்காக சுங்கப் பிரகடனத்துடன் மோட்டார் வாகனப் பிரிவுக்கு அப்பொழுதே அனுப்பப்படல்.

10. வெளிநாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் நோக்கத்துடன் கடைகளில் அல்லது வியாபார வாசஸ்தலங்களில் தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிகள் இந்த கானே திட்டத்தில் உள்ளடங்காது.

10.1 தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்த திகதியிலிருந்து 3 மாதங்களுக்கிடையில் இல்லாவிடின் செல்லுபடியாகும் காலத்திற்குக் குறைந்த காலத்திற்குள் மீள ஏற்றுமதி செய்யப்படல்.

10.2 பதிவுசெய்யப்படும் நிலையத்தில் சுங்கத்திற்கு கானே சமா்ப்பிக்கப்படும் போது சுங்க அலுவலா் கானேயில் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான பொருள் பட்டியலில் குறித்த பொருளைச் சோதனை செய்தல் வேண்டும்., பொருளின் மீது ஏதேனும் அடையாளக் குறிகள் இருப்பின் கானேயின் பற்றுச்சீட்டின் மீது அடையாளக் குறியீட்டினைக் குறித்து இறக்குமதி வவுச்சா் பாகத்தினைச் சுங்கத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் மீது தேவையான விடயங்களை சுங்கம் குறிப்பினையிடும். இறக்குமதி செய்யப்பட்ட குறித்த பொருள் மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றதா என்பதை மீளப் பரிசோதிக்கும் வகையில் வவுச்சரானது ட கிளைக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், அவை கோவையிலிட்டு பாதுகாப்பாகப் பேணப்படல் வேண்டும்.

11. கானே தொடா்பில் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது அவை மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றன, சுங்கமானது பொருட்களை இறக்குமதி செய்த விபரங்களுடனும் மற்றும் மீள ஏற்றுமதியினது சுங்க பாகப் பிரிப்பினையும் பரிசோதனை செய்யப்படும் என்பதுடன், பற்றுச்சீட்டின் மேல் தேவையான குறிப்புக்களை இடுதல். மீள ஏற்றுமதி வவுச்சரில் பிரிக்கப்பட்ட பகுதி ட கிளைக்கு அனுப்பப்படுதல்.

13. பொருட்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி தொடா்பிலான கானேயின் பாவனையானது நாட்டின் தேசிய சட்டத்திற்கேற்ப இருத்தல்.

14. கானே தொடா்பில் ஏதேனும் மோசடி, மீறுகைகள் அல்லது கானேயின் ஏற்பாடுகளை அல்லது நாட்டின் தேசிய சட்டங்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்றவற்றுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை சுங்கம் மேற்கொள்ளும் என்பதுடன், அத்தகைய மீறுகை தொடா்பில் அபராதங்கள் விதிப்பதற்கும் சுங்கத்திற்கு உரிமையுள்ளது.

**2015 ஆம் ஆண்டுக்காலத்தின் போது பணிப்பகத்தின் செயலாற்றுகை**

இவ்வாண்டுக் காலப்பகுதியிலான செயலாற்றுகை தொடர்பில் பின்வரும் விடயங்களத சாராம்சம் பின்ணிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நீள அறை மற்றும் மோட்டார் வாகனப் பிரிவு | இணைப்பு - அ, ஆ |
| மோட்டார் வாகனப் பிரிவு | இணைப்பு - இ,ஈ |
| 2015ஆம் ஆண்டில் துறைமுகத்திலிருந்தான கொள்கலன் அசைவு | இணைப்பு - உ |
| பொருள்பட்டியல் திருத்தங்களும் பிந்திய பொருள் பட்டியல் அபரதங்களும் | இணைப்பு - ஊ |
| நீள் அறை மற்றும் மோட்டார் வாகனப் பிரிவுஆகியவற்றிலான அரசிறை ஒப்பீட்டாய்வு | இணைப்பு - எ |

# கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகம்

**அறிமுகம்**

சுங்கத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரி விதித்தலாகும். குறித்த சில சூழ்நிலைகளின் கீழ் இவ்வரி விதிப்புச் செயன்முறையானது பிணையிடல் தொடர்பான செயற்பாடு மூலம் குறித்த காலப்பகுதிக்கு தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. சுங்க நடைமுறையில் பிணையிடல் என்பது விசேடமாக குறித்த நோக்கத்திற்காக குத இல்லம் ஒன்றில் தீர்வை விதிக்கத்தகு இறக்குமதிப் பொருட்களைப் பாதுகாத்தல் எனப் பொருட்படுமென்பதோடு, அத்தகைய குத இல்லம் பிணையிடப்பட்ட குத இல்லம் எனப்படுகிறது.

ஆரம்ப காலத்தில், இப்பிணையிடல் திட்டமானது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை தீர்வையின்றி தமக்குத் தேவையேற்படும் வரை வர்த்தகர்கள் குயின்ஸ் குத இல்லத்தில் வைத்துப் பாதுகாக்க விரும்பும் வர்த்தகர்களுக்கான வசதியை வழங்குவதையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தது. சில வேளைகளில் வர்த்தகர்கள் நிதி ரீதியான காரணங்களுக்காக பொருட்களைப் பிணையிடுவதற்கு இணங்கினர். பின்னர் இத்திட்டமானது வரிகள் செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் அத்தகைய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி நோக்கிலான முடிவுப் பொருட்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்குமாக தயாரிப்பாளர்களை அனுமதிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது. இதன் மூலம் வரிகளுக்கான கடப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படும் அதேவேளை, நாட்டுக்கான பெறுமதி மிக்க அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்கும் வழியேற்படுகிறது. இந்த அடிப்படை எண்ணக்கருவினால், பல்வேறு கைத்தொழில் துறைகளுக்கான அபிவிருத்திக்கு வித்திடும் வகையில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டன. தற்போது இது நாட்டின் கைத்தொழில் துறை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கானதொரு உந்து சக்தியாகக் காணப்படுகிறது. இவ் அனைத்தையும் விட சர்வதேச வர்கத்தத மாநாட்டின் முன் நாட்டினைக் கொண்டுசென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்பணிப்பகமானது, குறிப்பிட்ட நடைமுறைகளின் கீழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளின் தேவைப்பாடுகளுக்கான வெளியாக்கத்தினை இலகுபடுத்தும் நோக்கில் பாதுகாப்பு/ பிணையிடலின் பேரில் தற்காலிகக் களஞ்சியப்படுத்தலுக்கான பொருள் இறக்குமதி தொடர்புடைய சுங்க தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. மேலும் விசேடமாக, இலங்கை முதலீட்டுச் சபை போன்ற தொடர்புபட்ட வரிசை அதிகாரங்களுக்கிடையில் பொருத்தமான ஒருங்கிணைப்போடு இலங்கையில் இறக்குமதி தொடர்பான சம்பிரதாயப் போக்கின் வகைப்படுத்தலுக்கான பாதையினைக் கண்டுகொள்ளும் நோக்கில் உற்பத்தி செய்கை/ ஏற்றுமதிக் கைத்தொழில் துறையினை ஊக்குவிக்கிறது.

**பிரதான தொழிற்பாடுகள்**

இப்பணிப்பகமானது அரசாங்கத்தின் வியாபார இலகுபடுத்தல் கொள்கைகளது அமுல்படுத்தல்/நிருவாகித்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாயுள்ளன. இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு :

1. சுங்கப் பிணைப்படுத்தப்பட்ட குத இல்லங்களை முகாமை செய்தல்.
2. ஏற்றுமதிச் செய்முறைக்கான தற்காலிக இறக்குமதி மற்றும் தீர்வைத் தள்ளுபடித் திட்டம் போன்ற ஏற்றுமதி இலகுபடுத்தல் திட்டங்களை முகாமை செய்தல்.
3. தீர்வையற்ற கடைகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை முகாமைசெய்தல்.
4. முதலீட்டுச் சபை வியாபார நிறுவனங்களால் இறக்குமதி/ ஏற்றுமுதி செய்யப்படும் பொருட்களை வெளியாக்குவதில் முதலீட்டுச் சபையுடன் கூட்டிணைப்பினை பேணுதல்.
5. குத இல்லங்கள், களஞ்சியக் கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு மற்றும் முதலீட்டுச் சபையின் இறக்குமதிகள்/ ஏற்றுமதிகள் ஆகியவற்றுக்கான தகவல் தொழில்நுட்ப முறைகளைப் பேணுவதில் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பப் பணிப்பகத்துடன் தொடர்பினைப் பேணல்.
6. ‘‘தீர்மானமற்றபரிபாலனம்’’ தொடர்பிலான சுங்கப் பிரகடனச் செய்முறையில் பிரகடனங்கள் பணிப்பகத்துடன் தொடர்பினைப் பேணல்.

**கைத்தொழில் மற்றும் சேவைகள் பணிப்பகத்திலுள்ள பிரதான கிளைகள்**

I. ஆவணமாக்கல் கிளை
II. கருத்திட்ட அலகு
III. கண்காணிப்பு மற்றும் மீளளிப்புக் கிளை
IV. முதலீட்டுச்சபைக் கைத்தொழில் ஒருங்கிணைப்புப் பிரிவு
V. தபால் மதிப்பீட்டுக் கிளை (கொழும்பு)

**ஆவணப்படுத்தல் பிரிவு**

**செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப்பிரகடனங்களது எண்ணிக்கை**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| (அ) தலைமை அலுவலகத்திலான சுங்கப்பிரகடனங்களது மொத்த எண்ணிக்கை | 110,865 | 97,222 | 90,082 |
| (ஆ) இன்பக் கிளையிலிருந்தான சுங்கப்பிரகடனங்களது மொத்த எண்ணிக்கை | 5,154 | 5,391 | 4,813 |




**அறவீடுகள்**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| அரசிறை சேகரிப்பு (ரூபா மில்லியன்) | 21,211.9 | 22,917 | 19,911.02 |
| சோதனைக்கட்டணம் (ரூபா மில்லியன்) | 8.08 | 10.16 | 26.46 |







**கருத்திட்டப் பிரிவு**

**பிணைப்படுத்தப்பட்ட சுங்க குத இல்லங்களது தற்போதைய நிலை**

| | | அரச குத இல்லம் | தனியார் குத இல்லம் | தயாரிப்பிலான – குத இல்லம் | சீனி குத இல்லம் | ப.உ..வராத குத இல்லம் |
|---|---|---|---|---|---|---|
| i | வருட ஆரம்பத்திலான குத இல்லங்களது எண்ணிக்கை | 6 | 46 | 6 | 3 | 11 |
| ii | இவ்வருட காலப்பகுதியிலான புதிய அங்கீகாரங்களது எண்ணிக்கை | | | | | |
| iii | மாற்றுதல்களது எண்ணிக்கை (மீள் பிணை) | | | | | |
| iv | வருட இறுதியிலான குத இல்லங்களது எண்ணிக்கை | 6 | 46 | 6 | 3 | 11 |

| | | சேவை பிணைமுறிகள் | தனியார் பிணைமுறிகள் | தீர்வையற்ற கடைகள் | ஏம்.சீ.சீ குதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| i | வருட ஆரம்பத்திலான குத இல்லங்களது எண்ணிக்கை | 10 | 51 | 51 | 3 | 187 |
| ii | இவ்வருட காலப்பகுதியிலான புதிய அங்கீகாரங்களது எண்ணிக்கை | 0 | 1 | 1 | 1 | 3 |
| iii | மாற்றுதல்களது எண்ணிக்கை (மீள் பிணை) | 1 | 0 | 0 | 0 | 1 |
| iv | வருட இறுதியிலான குத இல்லங்களது எண்ணிக்கை | 9 | 52 | 52 | 4 | 189 |

**ப.ச.வி. நிலையத்திலுள்ள தீர்வையற்ற கடைகளிலான விற்பனைகள் தொடர்பிலான விபரங்கள்**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| சீ ட்றான்ஸ் டியுடிபிறி ஷொப் (ஐ.அ.டொ) | 1,246,289.00 | - | 1,452,506.00 |
| ஏஸ்.ரீ.சீ ஜெனரல் ட்றேடிங் கோ. லிமிடட் (ஐ.அ.டொ) | 1,588,401.00 | 1,643,397.00 | 2,698,885.00 |
| வின்சன் இன்ரநெஷனல் (பிறைவட்) லிமிடட் | இல்லை | 64,333.00 | 170,540.50 |
| **மொத்தம் (ஐ.அ.டொ)** | **2,834,690.00** | **1,643,397.00** | **4,321,931.50** |

**ஏ.மு.த.இ 1, ஏ.மு.த.இ 4 மற்றும் ஐ.பீ.ஜீ திட்டங்கள் தொடர்பிலான தற்போதைய நிலை**

I. **செயற்படுத்துனர்கள்**

| | ஏ.மு.த.இ 1 | ஏ.மு.த.இ 4 | ஐ.பீ.ஜீ |
|---|---|---|---|
| i. ஆண்டின் தொடக்கத்திலிருந்த செயற்படுத்துபவர்களின் எண்ணிக்கை | 1055 | 534 | 240 |
| ii. இவ் ஆண்டுக்காலப்பகுதியில் இணைக்கப்பட்ட செயற்படுத்துபவர்களின் எண்ணிக்கை | 57 | 25 | 12 |
| iii. ஆண்டின் இறுதியிருந்த செயற்படுத்துபவர்களின் எண்ணிக்கை | 1112 | 559 | 252 |

**கண்காணிப்பு மற்றும் நிதி மீளளிப்புக் கிளை**

**பாதுகாக்கப்பட்ட வருமானம்**

| | **உத்தரவாதங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதம் | 2301 |
| உரிமை கோரப்பட்ட வங்கி உத்தரவாதம் | 08 |
| பூர்த்திசெய்யப்பட்ட வங்கி உத்தரவாதம் | 1760 |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட உத்தரவாதம் மற்றும் கூட்டிறவு உத்தரவாதம் | 145 |

**பிணைகள் தொடர்பிலான புலனாய்வுக் கூறு**

கண்டுபிடிக்கப்பட்ட மீறுகைகள், மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் மற்றும் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொர்பிலான விடயங்கள்

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்திலிருந்த வழக்குகளது எண்ணிக்கை | 574 | 611 | 31 |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 59 | 44 | 43 |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 10 | 13 | 14 |
| பூர்த்தியாகாத புலனாய்வு வழக்குகளது எண்ணிக்கை | 611 | 31 | 26 |
| ஆண்டின் இறுதியில் பூர்த்தியாகாத புலனாய்வு வழக்குகளது எண்ணிக்கை | 4 | - | 4 |
| நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை (ஆண்டின் இறுதியில்) | இல்லை | இல்லை | 2 |
| அபராதம் / பறிமுதல்கள் | 266,043,829 | 7,367,295 | 157,864,500 |

**அஞ்சல் மதிப்பீட்டுக் கிளை**

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட வருமானம் (ரூபா)**

| கொழும்பு | கன்டி | காலி | திருகோணமலை | யாழ்ப்பாணம் | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| 59,586,105 | 6,129,608 | 5,117,614 | 1,807,609 | 4,019,118 | **76,660,054** |



# சரக்குப் பரிசோதனைப் பணிப்பகம்

**அறிமுகம்**

சுங்கமானது வரிகளைச் சேகரித்தல், சமூகம்,உயிர்ப் பல்வகைமை, கலாசார மரபுரிமைகள், புலமைச் சொத்துரிமை போன்றவற்றைப் பாதுகாத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பயணிகளின் இணக்கப்பாடு மற்றும் இறக்குமதி, ஏற்றுமதிகள் தொடர்பிலான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் போன்ற பணிகளுக்கு பொறுப்பாகவுள்ளது. மேற்படி இலக்குகளில் சில ஏனைய அரசாங்க முகவர்களுக்குச் சார்பாக சுங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டும் வருகிறது.

கடந்த காலங்களில்,''வாயிற் காவலாளி''(*gatekeeper*) எனும் சம்பிரதாய அணுகல் முறையாகிய கட்டுப்பாட்டு மைய சட்ட அமுலாக்க உபாய முறைகளைமுன்னெடுத்து வந்தது. இதன் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை அடையும் நோக்கில் அனைத்து அனுப்பு பொருட்களும் பௌதீக முறையில் பரிசோதிக்கப்பட்டு வந்தன. இருப்பினும்,சர்வதேச வர்த்த சூழமைவின் துரித வளர்ச்சியோடு, விசேடமாக கடல் மார்க்க கொள்கலன்கள், பாரிய கடல் மார்க்க கொள்கலன் தாங்கிகள், பாரிய துறைமுகங்கள், நவீன கொள்கலன் முனைய வசதிகள்,ஈ-வர்த்தகம்,அகலமான விமானச்சரக்குகள் மற்றும் சர்வதேச, பலதரப்பு அல்லது இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளின் சிக்கல் தன்மை போன்றவற்றின் எழுச்சியோடு, சுங்கத்தின் பணிகள் வியக்கத்தகு வேலைப்பளுமிக்கதாக சுமையேற்றப்பட்டது.

பூகோள ரீதியான வர்த்தச் சூழலின் விரைவான வளர்ச்சியானது சட்டவாக்க வர்த்தகத்திற்கு வசதியளிக்கும் வகையில் சுங்கத்தைத் தூண்டியது. இது அதன் அனைத்துச் செயற்பாடுகளிலுமுள்ள வசதியாக்கலின் பொருத்தமான மட்டமொன்றைப் பேணுவதற்கான கட்டுப்பாட்டின் பிரயோகத்தைக் குறிப்பாக சுட்டிக்காட்டுகிறது.இது சம்பிரதாய பௌதீக முறைக் கட்டுப்பாடாகிய ''வாயிற் காவலாளி'' முறையிலிருந்துஇடர் முகாமைத்துவத் தொழில்நுட்பங்களின் அடிப்படையிலமைந்த செயற்பாட்டு மாதிரியொன்றுக்கான நகர்வாக விளங்கியசெயற்பாட்டு மாதிரி மற்றும் வகிபாகங்களின் மீள்-மதிப்பாய்வு ஒன்றினை வேண்டியது.

சுங்கமானது சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இடர் தேர்திறன் மற்றும் இலக்குப்படுத்தல் உபாயம் ஆகியவற்றை அமுல்படுத்தியது. இதன் மூலம்'அனைவருக்கும் பொருத்தமான ஒரு அளவு''எனும் அணுகுமுறையினை அதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பிரயோகிக்க வேண்டியிருந்ததோடு, இணக்கமின்மையினைக் குறைக்கும் வகையில் இடர்களையும் கையாண்டது. இருப்பினும்,வாடிக்கையாளரின் குறிப்பான நடத்தையாகிய பிரத்தியேக சூழ்நிலைகளை அறிந்துகொள்வதும் இடரைக் குறைப்பதற்கான பல்வேறு முறைமைகளைப் பிரயோகிப்பதும் தற்போது அவசியமாகியுள்ளது.முழுமையான இடர்-அடிப்படையிலான இணக்கப்பாட்டு முகாமைத்துவ அணுகல் ஒன்றைப் பொருந்திக்கொள்வதானதுசுங்கத்தின் வளங்களை மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் பேணுவதற்கும் அதன் இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்குமான வாய்ப்பினை சுங்கத்திற்கு வழங்கும்.

சுங்கத்தின் வாடிக்கையாளர்களை பிரதானமாக நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:

1. தன்னார்வ முறையில் இணக்கமுறுபவர்
2. இணக்கமுற முயற்சிப்பவர் ஆனால் அது எப்போதும் வெற்றியளிக்காத நிலை.
3. வாய்ப்புள்ளவிடத்து இணக்கமுறுவதைத் தவிர்ப்பவர்
4. வேண்டுமென்றே இணக்கமுறாதவர்.

இடர் மைய இணக்கப்பாட்டு முகாமைத்துவ அணுகலில்,சலுகைகளும் எளிமையான சுங்க நடைமுறைகளும் தன்னார்வ முறையில் இணக்கமுறுபவர்களுக்கு வழங்கப்படுகின்றன,இணக்கமுற முயற்சிப்பவர் ஆனால் அதுஎப்போதும் வெற்றியளிக்காத நிலையிலுள்ளவருக்கு இணக்கமுற உதவப்படுகிறது, வாய்ப்புள்ளவிடத்து இணக்கமுறுவதைத் தவிர்ப்பவருக்கு இணக்கமுறப் பணிக்கப்படுகிறது, வேண்டுமென்றே இணக்கமுறாதவருக்கு இணக்கமுற வலியுறுத்தப்படுகிறது. குறைவான இடர் கொண்ட வாடிக்கையாளர் மையத்தை அதிகரித்து உயர் இடர்களிலுள்ள வளங்களில் அவதானிப்பைச் செலுத்தி இணக்கமுறாதவர்களை கண்டுபிடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இயக்கப்பாட்டு மட்டத்தில்,இடர் மைய இணக்கப்பாட்டு முகாமைத்துவத்திற்கு எப்போதும் உளவுத்துறையின் ஆதரவே வழியேற்படுத்துகிறது.இது வளங்களை பொருத்தமானதொரு முறையில் அணிதிரட்டி அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதில் சுங்கத்தின் தீர்மானம் மேற்கொள்வோருக்கு உதவுகிறது.

சுங்கமானது கட்டுப்பாடுகளை பிரயோகிப்பதோடு, சட்டவாக்க வர்த்தகர்களுக்குப் பொருத்தமானளவு வசதிகளையம் வழங்குகின்றது, இது அவர்களுக்கான இடையூறினையும் செலவினையும் குறைப்பதற்கு

ஏதுவாக அமைகிறது.முழுமையான இடர்-மைய இணக்கப்பாட்டு முகாமைத்துவ அணுகலிலுள்ள பிரதான அம்சமானதுதன்னார்வ இணக்கப்பாடு நோக்கிய வாடிக்கையாளர் அடிப்படையை ஊக்குவிப்பதற்கும், வேண்டுமென்றே இணக்கமுறாதோர் நோக்கிய வளங்கள் மீது மைய அவதானம் செலுத்துவதற்குமானதாகும்.

இயக்கப்பாட்டு மட்டத்தில்,இடர்-மைய கட்டுப்பாடுகள் உளவுத்துறை மற்றும் நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஆதரவோடு பிரயோகிக்கப்படுகின்றன. குறைந்த இடர்களையுடைய நம்பிக்கை மிக்க வாடிக்கையாளர்களையும் அனுப்பு பொருட்களையும் சரியாக இனங்காண்பதோடு,சுங்கச் சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் கையாளப்படுகின்ற உயர் இடர்களைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பு பொருட்களுக்கும் உரியவற்றை விடவும் அனேக வசதிகளையும் அங்கீகாரங்களையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளிலிருந்து வருமானத்தைச் சேகரித்தல், சுங்கச்சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களை அமுல்படுத்தல், மற்றும் சட்ட ரீதியான வர்த்தகத்திற்கும் வர்த்தகர்களுக்கும் வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் வசதியை வழங்குதல் போன்றன சுங்கத்தின் குறிக்கோள்களாக விளங்குகின்றன.

**குறிக்கோள்கள்**

- இறக்குமதிகளிலிருந்தான உரிய வருமானத்தை அறவிடுவதை உறுதிசெய்தல்.
- சுங்கச் சட்டங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களின் பிரகாரத்திலான கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதிப்பதை அமுல்படுத்தல்.
- சட்ட ரீதியான வர்த்தகதிற்கு வசதியளித்தல்.

**பிரதான தொழிற்பாடுகள் :**

1. இறக்குமதியாளர்களால் பிரகடனப்படுத்தப்பட்டவை சரியானதா என்பதை ஒப்பீட்டுப் பார்ப்பதற்காக சகல இறக்குமதிப் பிரகடனங்களையும் நுட்பமாக ஆராய்தல்.
2. இடர் முகாமை அடிப்படையில் வித்தியாசமான பரிசோதனை மட்டங்களின் கீழ் பல்வேறு பரிசோதனைச் சாலைகளில் பரிசோதனைக்கான பொருட்களை தெரிவு செய்தல்.
3. உரிய அரசிறையினை சேகரித்தலினை உறுதிசெய்தல், சரக்குப்பிரகடனம் மற்றும் பிற விதிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் போன்றவற்றில் வேண்டுமென்றே புரின்ற இணக்கப்படாற்றவற்றினை கண்டுபிடித்தல் மற்றும் தடைசெய்தல் நோக்கில் வீட்டுப் பாவனை , ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்குமதி மற்றும் முதலீட்டுச் சபை போன்றவற்றுக்கான பொருட்களை பௌதீக முறையில் பரிசோதனை செய்தல்.
4. மறைத்துவைக்கப்படுகின்ற, பிரகடனப்படுத்தப்படாத பொருட்களை கண்டுபிடிப்பதற்கான எக்ஸ் ரே கதிர் இந்திரத்தையும் மற்றும் வெளியாக்கத்தை விரிவுபடுத்துவதற்காக இலகுபடுத்துகைக் கருவியொன்றையும் பயன்படுத்தல்.
5. இணக்க பகுப்பாய்வு மட்ட அடிப்படையில் இறக்குமதியாளர்களக்கு வெளிநிலை குழுப் பரிசோதனை வழங்குதல்

**2015ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்துடனான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு :**

**(1) அரசிறை குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| பிரதான நடவடிக்கை | இலக்கு % | அடையப்பெற்றவை % | அடையப்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. மாதாந்த அடிப்படையில் கொடுக்கப்பட்ட முறையில் கண்டுபிடிக்கப்பட்ட சகல விடயங்கள் தொடர்பில் பின்னூட்டினை வழங்குவதற்காக பணிப்பகத்திலான சகல பிரிவுகளது தலைவர்களுக்கும் அறிவித்தல் | 100 | 100 | |
| 2. மாதாந்த அடிப்படையில் கொடுக்கப்பட்ட முறையில் உயர் இடர் சரக்குப் பரிசொதனையின் பெறுபேறுகள் தொடர்பில் பின்னூட்டினை வழங்குவதற்காக சுங்க பிரதிப் பணிப்பாளருக்கு (உ.இ.ச) அறிவித்தல் | 100 | 100 | |
| 3. தேவையான தகவல்களை மத்திய விசாரணைப் பிரிவுக்கு வழங்குதல் | 100 | 100 | |
| 4. தேவையான தகவல்களை இடர் முகாமைத்துவக் குழுவுக்கு வழங்குதல் | 100 | 100 | |
| 5. செயலாற்றுகை தொடர்பில் காலாகாலம் மீளாய்வு செய்தல் | 100 | 100 | |

**(2) கட்டுப்பாட்டு குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| பிரதான நடவடிக்கை | இலக்கு % | அடையப்பெற்றவை % | அடையப்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. நுட்பமாக பரிசோதிக்கக்கடவிருக்கின்ற கொள்கலன்கள் தொடர்பில் சகல பரிசோதனை சாலைகளதும் கருத்துக்களை பெறல் | 100 | 100 | |
| 2. இப்பணிப்பகத்தில் இடம்பெறும் பிரதி சுங்க பணிப்பாளர் கூட்டத்தில் தகவலினை பகுப்பாய்வு செய்தலும் மற்றும் வழிகாட்டியினையும் தயாரித்தல் | 100 | 100 | |
| 3. நுட்ப பரிசோதனை பிரிவுக்கும் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவுக்கும் அறிவித்தல் | 100 | 100 | |
| 4. செயலாற்றுகை தொடர்பில் காலாகாலம் மீளாய்வு செய்தல் | 100 | 100 | |

**(3) வியாபார இலகுபடுத்தல் குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| பிரதான நடவடிக்கை | இலக்கு % | அடையப்பெற்றவை % | அடையப்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. கூடதலான எண்ணிக்கைகளை கொண்ட கொள்கலன்களில் குறைந்த இடர் பண்டங்களை இறக்குமதி செய்கின்ற பெயர்பெற்ற இறக்குமதியாளர்களை அடையாளங்காணல் | 100 | 100 | |
| 2. வெளிநிலை பரிசோதனைக்காக அனுமதிக்கப்படும் அனுப்பு சரக்கு ஒப்படைப்பொருட்களது எண்ணிக்கையினை அதிகரித்தல் | 100 | 100 | |
| 3. பச்சை வாயிலின் கீழ் அனுமதிக்கப்படும் கொள்கலன்களது எண்ணிக்கையினை அதிகரித்தல் | 100 | x | இலங்கைச் சங்கத்தில் பச்சை வாயில் கருதுகோள் இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை |
| 5. செயலாற்றுகை தொடர்பில் காலாகாலம் மீளாய்வு செய்தல் | 100 | 100 | |

## (4) ஏனைய குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்

| பிரதான நடவடிக்கை | | இலக்கு % | அடையப்பெற்றவை % | அடையப்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| 1. | பணிப்பகத்திலான சகல அலுவலர்களுக்கும் விழிப்புணர்வு அமர்வுகளை மேற்கொள்ளல் | 100 | 100 | |
| 2. | இப்பணிப்பகத்திற்கு மாற்றம்பெற்றுவந்த அலுவலர்கள் அடங்காலன பதவியணினர்களுக்கு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தராதர சுற்றுவட்டங்கள் தொடர்பில் மாற்றங்களை மேற்கொள்ளல் | 100 | 100 | |
| 3. | ஊழியர் சேவைகள் பணிப்பகத்தினால் தெரிவிக்கப்பட்டவாறாக சகல பிரிவுகளிலும் உற்பத்திதிறன் நியமங்களை அமுல்படுத்தல் | 100 | 100 | |
| 4. | செயலாற்றுகை தொடர்பில் காலாகாலம் மீளாய்வு செய்தல் | 100 | 100 | |

**2015ஆம் ஆண்டில் இப்பணிப்பகத்திலான செயலாற்றுகை**

| குறிப்புகள் | | 2014 | 2015 |
|---|---|---|---|
| | | சுங்கப்பிரகடனங்களது எண்ணிக்கை | |
| பரிசோதனை நிலையங்களில் பதியப்பட்ட வீட்டுப் பாவனைகளை இறக்குமதி செய்தவற்றுடன் தொடர்புபட்ட சுங்கப்பிரகடனங்கள் | | 192,559 | 247,380 |
| | | | |
| **பரிசோதனை நிலையம்** | கிஆறலைன் - 1 | | 11,662 |
| | கிறேலைன் - 11 | | 15,988 |
| | உ.இ.சரக்கு | | 1,165 |
| | ஐ.சீ.டி. புதிய நுகே வீதி | | 35,578 |
| | ஜே.சீ.ரீ | | 16,747 |
| | பீ.கியு | | 43,555 |
| | கைட் பியர் | | 949 |
| | கொச்சிக்கடை | | 17,178 |
| | பீ.வீ.கியு | | 172 |
| | ஆர்.சீ.ரீ | | 108,182 |
| | | | |
| **தெரிவு செய்யப்பட்ட பரிசோதனை வாயில்கள்** | அம்பர் | 162,742 | 189,114 |
| | விபரம் | 19,556 | 13,344 |
| | அதிகூடிய இடர் சரக்கு | 1,600 | 1,041 |
| | சிவப்பு | 1,572 | 554 |
| | ஏனையவை (இன்பக், ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்குமதி, போன்றவை..) | 7,378 | 43,327 |
| | | கொள்கலன்களது எண்ணிக்கை | |
| **வெளியாக்கப்பட்டவை (வீட்டுப் பாவனை)** | | 177,633 | 251,176 |
| **நுட்பமாக பரிசோதனை செய்யப்பட்டவை** | | 17,797 | 10,737 |
| | | | |
| **கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள்** | | 49 | 31 |
| **அறவீடுகள்** | மேலதிக சுங்கப் பிரகடனங்கள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா மில்) | 115.2 | 682.5 |
| | அபராதங்கள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா மில்) | 24.2 | 6.5 |
| | பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா மில்) | 4.2 | 0.1 |



விபரம்


பரிசோதனை வாயில்கள் (வீட்டுப் பாவனை) 2015
அம்பர்
விபரம்
அதி இடர் கூடிய சாரக்கு
சிவப்பு
ஏனையவை (இன்பக், ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்குமதி, போன்றவை..)
0.42%
5.39%
0.22%
17.51%
76.45%


பரிசோதனை வாயில்கள் (வீட்டுப் பாவனை) 2014
அம்பர்
விபரம்
இடர் கூடிய சாரக்கு
சிவப்பு
ஏனையவை (இன்பக், ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்குமதி, போன்றவை..)
0.83%
3.83%
0.82%
10.14%
84.39%


பரிசோதனைச் சாலைகளில் வெளியாக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்கள்(வீட்டுப் பாவனை) 2015
1,000,000
100,000
10,000
1,000
100
10
1


சுங்கப் பிரகடணம் மற்றும் கொள்கலன்கள் பற்றிய ஒப்பீட்டாய்வு 2014 - 2015
300,000
250,000
200,000
150,000
100,000
50,000
0
2014
2015
பரிசோதனைச் சாலைகளில் பதியப்பட்ட இறக்குமதி சுங்கப்பிரகடணங்களது(வீட்டுப் பாவனை - எல் சீ எல், எப் சீ எல்) எண்ணிக்கை
வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை (வீட்டுப் பாவனை)
நுட்பமாக ஆராயப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை

### வெளியாக்கப்பட்ட மற்றும் நுட்பமாக ஆராயப்பட்ட கொள்கலன்களது ஒப்பீட்டாய்வு (2014 மற்றும் 2015)




### அறவிடப்பட்ட அரசிறை ஒப்பீட்டாய்வு - வரைபு ரீதியாக (2014 மற்றும் 2015)



**மேம்படுத்தலுக்கான ஆலோசனைகள்**

- இடர் முகாமைத்துவ நுட்பங்களை அமுல்படுத்தல்
- தன்னியக்க தேர்திறனை அமுல்படுத்தல்
- ஆர்.சீ.ரீ சாலையில் கொள்கலன் இயக்கக் கண்காணிப்பு முறைமையினை அமுல்படுத்தல்.
- பரிசோதனை நிலையத்தில் அஸிகுடா வேல்ட் முறைமையில் "வெளிச்செல்லல் குறிப்பு"னை அமுல்படுத்தல்.
- உளவுத்துறை சார்ந்த சரக்குப் பரிசோதனையுடன் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்.

**நிறைவு**

சரக்கு வெளியாக்கல் நடைமுறையின் மிகவும் பெறுமதிவாய்ந்த வகிபாகமொன்றாகிய ''சரக்கினை பௌதீக முறையில் பரிசோதித்தல்'' ஆனது சரக்கு பரிசோதனைப் பணிப்பகத்திலுள்ள அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகிறது. பரிசோதனையின் நடைமுறைகள் மற்றும் குறித்த அதிகாரிகளின் வினைத்திறனும் பயனுறுதித்தன்மையும் மற்றும் குறித்த சரக்கினை விரைவாக குறைந்தளவு வேளையில் வெளியாக்குவதற்கு வழியமைப்பதோடு, பணிப்பகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கும் ஏதுவாகவமைகிறது.

2014 ஆம் ஆண்டில் சரக்குப் பரிசோதனைக்காக பதிவுசெய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கையினை 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், அது 54,821 ஆல்அதிகரித்துள்ளதோடு,வெளியாக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையானது 73,543 ஆல் அதிகரித்துள்ளது.

சம்பிரதாய பௌதீக பரிசோதனை முறையிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கும் போக்கினை நோக்கியதாக தற்போதைய உலக சுங்க அதிகாரிகளின் போக்கு உள்ளதனால்,இணக்கப்பாடு மிக்க தனது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வசதியை வழங்கும் வகையில் இப்பணிப்பகமானது தனது 2015 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்தை வகுத்தது. இதனை 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான வெளியாக்கல் பற்றிய தரவுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் போது தெளிவாகின்றது. **சரக்கு தேர்வுத்திறனுடன் தொடர்பான தகவல்களைக் கருத்திற்கொள்கையில் ஆம்பர் வழியூடாக 77 சதவீத பரிசோதனைகள் 2014 இல் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அது 2015 இல் 84.39 சதவீதம் வரை அதிகரித்துள்ளதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது**.பயணிகளுக்கு வசதியளித்தல் எனும் எண்ணக்கருவை மேம்படுத்துவதனைக் கருத்திற்கொண்டு,ஆம்பர் வழியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களோடு கணிசமானளவு அனுப்பு பொருட்கள் பயணிகளுடன் செல்கையில் பரிசோதிக்கப்படுகின்றன.இவ் வசதியானது அவர்கள் காட்டுகின்ற இணக்கப்பாட்டு அளவிலேயே தங்கியுள்ளது.

**2015 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகையினையும் கருத்திற்கொள்ளும் போது, ஆண்டின் இறுதியில் செயற்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 99 சதவீதமான இலக்குகள் அடையப்பட்டுள்ளன.**குறித்த செயற்திட்டத்தில் ''பச்சை வழியின் கீழ் அனுமதிக்கப்படுகின்ற கொள்கலன்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்''எனக் குறிப்பிடப்பட்ட இலக்கானது சரக்குப் பரிசோதனைக்கான ''பச்சை வழி'' எண்ணக்கருவினை திணைக்களம் மேற்கொள்ளாத காரணத்தினால் அடையப்படவில்லை.

இருப்பினும், திணைக்களத்தின் விளைவுத்திறனை மேம்படுத்தி சட்ட ரீதியாக ஈடுபடுகின்ற ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிக்கும் வகையில் மேற்படி ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

# பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்

**அறிமுகம்**

கொழும்புத் துறைமுகம் மற்றும் கொழும்பிலுள்ள பயணிகள் உடன்வராத பொதிக் குதயில்லங்கள் ஆகியவற்றில் பயணிகளினதும் ஏனைய சம்பந்தப்பட்ட நபர்களினதும் பொதி வெளியாக்கல் தொடர்பில் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்கதுமான சேவையினை திருப்திகரமாக வழங்குகின்ற அதேவேளை, வெளிநாடுகளில் பணிபுரிகின்ற தொழில்வாண்மைமிக்கவர்கள் மற்றும் தாய் நாட்டிற்குத் திரும்புகின்றவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்திவருகிறது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. உள்வரல் மற்றும் வெளிச்செல்லுகை தொடர்பான பயணிகள் செயன்முறை மற்றும் பொதிகளின் வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
2. மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியைத் தடுத்தல் மற்றும் அரசிறையினை பாதுகாத்தல்,
3. சமூக-பொருளாதார, கலாசார மற்றம் மக்களின் சுற்றுச் சூழல் சார்ந்த நலன்களைப் பாதுகாத்தல்.
4. பயணிகள் உடன் வராத பொதிகளடங்கிய குத இல்லங்களை கண்காணித்தலும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்தலும்.

**இவ்வாண்டுக் காலப்பகுதியிலான செயலாற்றுகை (ரூபா)**

| | பொதிகளது எண்ணிக்கை | அபராதம் | மேலதிக நேரம் | வரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பொதி அலுவலகம் (குழு) | 0 | 263,000 | 0 | 10,338,481 | 10,601,481 |
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | 0 | 0 | 0 | 0 | 0 |
| பொதி அலுவலகம் (விற்பனை) | 0 | 0 | 0 | 1,872,064 | 1,872,064 |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | 58,146 | 3,119,876 | 0 | 29,017,376 | 32,137,252 |
| லக்சிறிசேவா | 72,233 | 1,880,953 | 4,570,083 | 31,600,614 | 38,051,650 |
| ட்றான்ஸ்கோ | 78,409 | 285,500 | 3,637,952 | 21,636,313 | 25,559,765 |
| மிட்கோ | 64,067 | 624,723 | 3,317,034 | 12,247,141 | 16,188,898 |
| ட்றைகோ (கொழும்பு) | 89,427 | 2,829,556 | 3,663,159 | 35,579,049 | 42,071,764 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 84,576 | 2,504,370 | 3,511,314 | 41,125,508 | 47,141,192 |
| **மொத்தம்** | **446,858** | **11507,978** | **18,699,542** | **18,3416,546** | **213,624,066** |

**2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளிலிலான நிதி செயலாற்றுகை தொடர்பிலான ஒப்பீட்டாய்வு (ரூபா)**

| | பொதிகளது எண்ணிக்கை 2014 | பொதிகளது எண்ணிக்கை 2015 | அபராதம் 2014 (ரூபா) | அபராதம் 2015 (ரூபா) | மேலதிக நேரம் 2014 (ரூபா) | மேலதிக நேரம் 2015 (ரூபா) | வரிகள் 2014 (ரூபா) | வரிகள் 2015 (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொதி அலுவலகம் (குழு) | - | - | - | 263,000 | - | - | 3,077,309 | 10,338,481 |
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | - | - | 12,165,014 | - | - | - | 25,388,899 | - |
| பொதி அலுவலகம் (விற்பனை) | - | - | 2,842,008 | - | - | - | 8,088,600 | 1,872,064 |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | 16,685 | 58,146 | 1,256,520 | 3,119,876 | - | - | 29,548,856 | 29,017,376 |
| லக்சிறிசேவா | 60,076 | 72,233 | 463,078 | 1,880,953 | 3,866,085 | 4,570,083 | 25,444,072 | 31,600,614 |
| ட்றான்ஸ்கோ | 71,171 | 78,409 | 998,600 | 285,500 | 2,588,493 | 3,637,952 | 22,457,618 | 21,636,313 |
| மிட்கோ | 49,289 | 64,067 | 945,013 | 624,723 | 2,701,784 | 3,317,034 | 14,914,833 | 12,247,141 |
| ட்றைகோ(கொழும்பு) | 85,119 | 89,427 | 883,771 | 2,829,556 | 3,318,279 | 3,663,159 | 32,107,656 | 35,579,049 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 83,776 | 84,576 | 1,703,337 | 2,504,370 | 2,887,315 | 3,511,314 | 47,186,782 | 41,125,508 |
| **மொத்தம்** | **366,116** | **446,858** | **21,257,341** | **11,507,978** | **15,361,956** | **18,699,542** | **208,214,625** | **183,416,546** |

## 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளிலிலான பொதிகளது அசைவு தொடர்பிலான ஒப்பீட்டாய்வு

| | பொதிகளது எண்ணிக்கை 2014 (ரூபா) | பொதிகளது எண்ணிக்கை 2015 (ரூபா) |
|---|---|---|
| பொதி அலுவலகம் (குழு) | - | - |
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | - | - |
| பொதி அலுவலகம் (விற்பனை) | - | - |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | 16,685 | 58,146 |
| லக்சிறிசேவா | 60,076 | 72,233 |
| ட்றான்ஸ்கோ | 71,171 | 78,409 |
| மிட்கோ | 49,289 | 64,067 |
| ட்றைகோ (கொழும்பு) | 85,119 | 89,427 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 83,776 | 84,576 |
| மொத்தம் | 366,116 | 446,858 |




## 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் அபராதம் தொடர்பிலான அறவீடுகளது ஒப்பீட்டாய்வு

| | 2014 | 2015 |
|---|---|---|
| பொதி அலுவலகம் (குழு) | - | 263,000 |
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | 12,165,014 | - |
| பொதி அலுவலகம் (விற்பனை) | 2,842,008 | - |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | 1,256,520 | 3,119,876 |
| லக்சிறிசேவா | 463,078 | 1,880,953 |
| ட்றான்ஸ்கோ | 998,600 | 285,500 |
| மிட்கோ | 945,013 | 624,723 |
| ட்றைகோ (கொழும்பு) | 883,771 | 2,829,556 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 1,703,337 | 2,504,370 |
| மொத்தம் (ரூபா) | 21,257,341 | 11,507,978 |




**2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரம் தொடர்பிலான அறவீடுகளது ஒப்பீட்டாய்வு**

| | 2014 | 2015 |
|---|---:|---:|
| பொதி அலுவலகம் (குழு) | - | - |
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | - | - |
| பொதி அலுவலகம் (விற்பனை) | - | - |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | - | - |
| லக்சிறிசேவா | 3,866,085.00 | 4,570,083 |
| ட்றான்ஸ்கோ | 2,588,493.00 | 3,637,952 |
| மிட்கோ | 2,701,784.00 | 3,317,034 |
| ட்றைகோ (கொழும்பு) | 3,318,279.00 | 3,663,159 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 2,887,314.50 | 3,511,314 |
| மொத்தம் (ரூபா) | 15,361,955.50 | 18,699,542 |



**2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் மொத்த அறவீடுகள் தொடர்பிலான அறவீடுகளது ஒப்பீட்டாய்வு**

| | 2014 | 2015 |
|---|---:|---:|
| பொதி அலுவலகம் (குழு) | 3,077,309 | 10,338,481 |
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | 25,388,899 | - |
| பொதி அலுவலகம் (விற்பனை) | 8,088,600 | 1,872,064 |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | 29,548,856 | 29,017,376 |
| லக்சிறிசேவா | 25,444,072 | 31,600,614 |
| ட்றான்ஸ்கோ | 22,457,618 | 21,636,313 |
| மிட்கோ | 14,914,833 | 12,247,141 |
| ட்றைகோ (கொழும்பு) | 32,107,656 | 35,579,049 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 47,186,782 | 41,125,508 |
| **மொத்தம் (ரூபா)** | **208,214,625** | **183,416,546** |



# ஏற்றுமதிகள் பணிப்பகம்

**அறிமுகம்**

இப் பணிப்பகமானது, ஏற்றுமதி நோக்கிலான ஏற்றுமதிகள் மற்றும் மீள் ஏற்றுமதிகள் ஆகியவற்றின் வெளியாக்கத்தின் போது அவற்றின் நடைமுறைகளை இலகுபடுத்தி, நேரடி வர்த்தக உள்ளீட்டினை அறிமுகம் செய்தல் மற்றும் மாற்றியேற்றுகை மூலம் சர்வதேச சட்டரீதியான சரக்கு பரிமாற்றச் செயற்பாட்டினை அனுசரித்தல் ஆகியவற்றின் மூலம் வசதியேற்பாடு செய்து உதவுகின்றது. மேலும் நாட்டின் காலாசார, சுற்றாடல் மற்றும் சமூகம் சார்ந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

**பிரதான தொழிற்பாடுகள்**

01. கடல் மார்க்கமாகவும் ஆகாண மார்கமாகவும் நாட்டிலிருந்து எற்றமதி செய்வதற்கு தொடர்புபட்ட சகல விடயங்களுக்கும் ஆஜராகுதல்.
02. நாட்டிலிருந்தான சகல பொருட்களையும் ஏற்றமதி செய்வதற்கு தொடர்புபடும் சகல விடயங்களுடனும் தொடர்பினை வைத்திருத்தல்
03. பாதுகாப்புக் காரணம் கருதியும் மற்றும் சுங்க நோக்கங்களுக்காகவும் ஏற்றுமதிச் சரக்குகளை பரிசோதனை செய்தல்.
04. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் ஏற்றுமதித் தீர்வை, செஸ் வரி மற்றும் உரிமைத் தொகை ஆகியவற்றினை சேகரித்தல்.
05. கொழும்பு மற்றும் அதனைச் சுற்றுப்புற பிரதேசங்களில் அமையப்பெற்றள்ள கொள்கலன் கையாளும் நிலையங்களை முகாமை செய்தல்
06. எம்.சீ.சீ குத இல்லங்களை முகாமை செய்தல்.
07. கானே ஊடாக தற்காலிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை இலகுபடுத்தல்.
08. மீள் கொடுப்பனவு கோரிக்கைகள் தொடர்பில் அங்கீகாரம் வழங்குதல்.
09. கப்பல் சான்றிதழ்களை வினியோகித்தல்.
10. தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான ஆவணங்களை சான்றுபடுத்தல்.
11. இலவச மீள் இறக்குமதிச் சான்றிதழினை பதிவு செய்தல்.
12. மூலப்பொருட்களது ஒழுங்குவிதிகள் தொடர்பில் வர்த்தகத் திணைக்களத்திற்கு கப்பலேற்றுகையினை சான்றுபடுத்ததுதல்.
13. பொருட்களை இறக்கி ஏற்றல் தொடர்பிலான செயற்பாடுகளை இலகுபடுத்தல்.
14. தேசிய வியாபார புள்ளிவிபரங்களை வழங்குதல்.
15. தேசத்தின் நலன் கருதி சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றாடல் ஆகியவற்றினை பாதுகாத்தல்.
16. ஏனைய அரச முகவர்கள் மற்றும் தனியார் துறையினர் அடங்கலாக திணைக்களத்துடன் தொடர்புடைய சகலருடனுமான உறவினை விருத்தி செய்தல்.
17. வியாபார செய்முறைகளை திறமையாகவும் வினைத்திறனுடனும் தொடர்ந்து விருத்தி செய்வதற்கு தேவையான முறைமைகளையும் நடைமுறைகளையும் அமுல்படுத்தல்.
18. ஏற்றுமதி வியாபாரத்தினை இலகுபடுத்துவதற்காக தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல்களை முடியுமனவரை உபயோகித்தல்.

## இப்பணிப்பகத்தின் செலாற்றுகை

## ஏற்றுமதிகள் தொடர்பிலான அரசிறை - 2015

| | ஏற்றமதி அலுவலகம் - கொழும்பு மற்றும் ஏ.இ.றி (ரூபா) | விமானச் சரக்கு அலுவலகம் - கட்டுநாயக (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி | 1,920,653,352/- | - | 1,920,653,352/- |
| ஏற்றுமதித் தீர்வை (சீ.பீ.ஓ) | 18,555,815/- | - | 18,555,815/- |
| செஸ் வரி - இறப்பர் | 245,181/- | - | 245,181/- |
| செஸ் வரி – தேயிலை | 672,363,791/- | - | 672,363,791/- |
| செஸ் வரி – தெங்கு | 92,487,099/- | 2,717/- | 92,489,816/- |
| பரிசோதனைக் கட்டணங்கள் | 53,038,110/- | 19,918,355/- | 72,956,465/- |
| உரிமத் தொகை | 36,545/- | - | 36,545/- |
| * இறக்குமதித் தீர்வை (1/10) | 4,291,326/- | - | 4,291,326/- |
| * து.வி.அ.அ (1/10) | 1,198,521/- | - | 1,198,521/- |
| ஏனையவை | 28,287/- | - | 28,287/- |
| அபராதம் | 31,794,790/- | 3,587,741/- | 35,382,531/- |
| பறிமுதல்கள் | - | - | - |
| மேலதிக நேர கட்டணம் | 21,749,300/- | 34,706,704/- | 56,456,004/- |
| கப்பலேற்றுச் சான்றிதழ் கட்டணம் | 110,750/- | - | 110,750/- |
| கணனி கட்டணம் | 21,930,000/- | 18,537,400/- | 40,467,400/- |
| **மொத்தம்** | **2,838,482,867** | **76,752,917** | **2,915,235,794** |

*மீள் ஏற்றுமதியின் போது அறவிடப்பட்டவை.

**2015ஆம் ஆண்டிலான செயலாற்றுகை**

1. சுமர்ப்பிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட சுங்கப்பிரகடணங்களது எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் | - | 86,397 |
| விமானச் சரக்கு | - | 72,780 |
| சிறிலங்கன் காகோ | - | 1,190 |
| **மொத்தம்** | **-** | **160,367** |

**02. குழு விண்ணப்பங்கள்**

பரிசோதனைகளது எண்ணிக்கை - 14,133

**03. சேகரிக்கப்பட்ட பரிசோதனைக் கட்டணங்கள் (ரூபா)**

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி அலுவலக அறவீடு (மே.ப) | - | 53,038,110/- |
| விமானச் சரக்கு அலுவலகம் (மே.ப) | - | 19,918,355/- |
| **மொத்தம்** | **-** | **72,956,465/-** |

**04. சேகரிக்கப்பட்ட கணனிக் கட்டணம் (ரூபா)**

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் | - | 21,930,000/- |
| விமானச் சரக்கு அலுவலகம் | - | 17,398,900/- |
| சிறிலங்கன் எயாலைன் | - | 1,138,500/- |
| **மொத்தம்** | **-** | **20,730,400/-** |

**05. சேகரிக்கப்பட்ட ஏற்றுமதி தொடர்பிலான வரிகள் (ரூபா)**

| | | | |
|---|---|---|---|
| ஏற்றுமதித் தீர்வை | | - | 18,555,815/- |
| உரிமத் தொகை | | - | 36,545/- |
| சேஸ் வரி | அ) சீசீ 1 | - | 92,489,816/- |
| | ஆ) ரீ.சீ 1 | - | 671,777,321/- |
| | இ) ரீ.சீ 2 | - | 586,470/- |
| | ஈ) ஆர்.சீ 1 | - | 242,556/- |
| | உ) ஆர்.சீ 4 | - | 2,625/- |
| | ஊ) ஈ.ஈ.சீ | - | 1,920,653,352/- |
| | எ) இறக்குமதித் தீர்வை (1/10) | - | 4,291,326/- |
| | ஏ) து.வி.அ.அறவீடு (1/10) | - | 1,198,521/- |
| | (ஏனையவை) | - | 28,287/- |

**06. செஸ் வரி தொர்பிலான சுருக்கக் குறியீடு :**

| | | |
|---|---|---|
| அ) சீ.சீ 1 | - | தெங்கு அபிவிருத்தி அதிகார சபை செஸ் வரி |
| ஆ) ரீ.சீ 1 | - | தேயிலைச் சபை செஸ் வரி |
| இ) ரீ.சீ 2 | - | தேயிலை மருத்துவ உதவி செஸ் வரி |
| ஈ) ஆர்.சீ 1 | - | இறப்பர் செஸ் |
| உ) ஆர்.சீ 4 | - | இறப்பர் மருத்துவ உதவி செஸ் வரி |
| ஊ) ஈ.ஈ.சீ | - | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி |

**07. மேலதிக நேரக் கொடுப்பனவு (ரூபா)**

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் | - | 1 ,248,750/- |
| விமானச் சரக்கு அலுவலகம் | - | 33,827,444/- |
| சிறிலங்கன் எயாலைன் | - | 879,260/- |
| சீ.எப்.எஸ் சாலை | - | 20,223,650/- |
| சிறிலங்கன் காகோ | - | 276,900/- |
| **மொத்தம்** | **-** | **56,456,004/-** |

**08. நடைமுறைக் கணக்குகள்**

| | | |
|---|---|---|
| i. நடைமுறைக்கணக்கு வைத்திருப்பவர்களது எண்ணிக்கை | - | 46 |
| ii செயற்படுத்தப்படும் நடைமுறைக்கணக்குகளது எண்ணிக்கை | - | 35 |
| iii. இவ்வாண்டுக்காலப்பகுதியிலான சேமிப்பு (ரூபா) | - | 292,005,692 |
| iv. இவ்வாண்டுக்காலப்பகுதியில் பற்றுவைக்கப்பட்ட மொத்த தொகை(ரூபா) | - | 1,467,013,298 |

**09. வேண்டுகோளுக்கிணங்க வினியோகிக்க்பட்ட எப்.ஆர்.ஐ.சி களது எண்ணிக்கை - 807**

**10. வினியோகிக்கப்பட்ட கப்பலேற்று சான்றிதழ்களது எண்ணிக்கை - 443**

**11. சேகரிக்கப்பட்ட கப்பலேற்று சான்றிதழ் கட்டணங்கள் (ரூபா)**

சான்றிதழ் கட்டணங்கள் - 110,750/-

**12. அறவிடப்பட்ட கப்பல்/விமானங்களது திருத்தல் கட்டணம் (ரூபா)**

| | | |
|---|---|---|
| ஏற்றுமதிஅலுவலகம் (அபராதம்) | - | 1,386,375/- |
| விமானச் சரக்கு அலுவலகம் (அபராதம்) | - | 3,587,741/- |
| ஏற்றுமதி இலகுபடுத்தல் நிலையம் | - | 6,533,415/- |
| **மொத்தம்** | **-** | **11,507,531/-** |

**13. இறக்கி ஏற்றல்**

| | | |
|---|---|---|
| சேமிப்புகளது மொத்த எண்ணிக்கை (கொள்கலன்கள்) | - | 1,137,960 |
| கப்பலில் ஏற்றப்பட்ட கொள்கலன்களது மொத்த எண்ணிக்கை | - | 1,395,566 |

**14. சுங்க குற்றங்கள் தொடர்பில் அறவிடப்பட்ட அபராதம் (ரூபா)** - 23,875,000/-

**15. ஏற்றுமதி செய்யப்பட்ட கொள்கலன்களது மொத்த எண்ணிக்கை** - 172,725

# கூட்டுறவுக் கொத்தணி

# கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம்

**அறிமுகம்**

கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகமானது, பிரதானமாக கொள்கை, இறுப்புப் பட்டியல் தொடர்பான விடயங்கள் மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்புடையதாகவுள்ளது. இதன் விரிவான இலக்குகளும் குறிக்கோள்களும் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடப்படலாம்.

01. திணைக்களக் கொள்கைகளை வகுப்பதில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவியாகவிருப்பதோடு அத்தகைய கொள்கையினை உரிய பணிப்பகங்களால் அமுல்படுத்தப்படுவதற்கான நடைமுறைக்கு மாற்றுவதற்கு உதவுதல், மேலும் அத்தகைய தீர்மானங்களை அறிந்து கொள்ளவும் அவற்றின் இணக்கப்பாட்டிற்கும் அலுவலர்களுக்கு அறிவித்தல்.

02. துறைசார் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் வேண்டுகின்ற போது,
   (i) பொருளாதார அபிவிருத்தி/ வியாபார கொள்கைகள், அத்துடன்
   (ii) அத்தகைய கொள்கைகளை இறுப்பு தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு மாற்றுதல்

   போன்ற விடயங்களில் அவர்களுக்கு உதவியாகவிருத்தல்;

03. அமுல்படுத்தல் மற்றும் தகவல் தெரிவிப்பு நோக்கில் இறுப்பு நடவடிக்கைகளை அலுவலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவித்தல்.

04. சகல இறுப்புகளுடன் தொடர்புபட்ட விசாரணைகளுக்கு சமூகமளித்து இறுப்புடன் தொடர்புபட்ட சர்ச்சைகளைத் தீர்த்து வைப்பதோடு, தேசிய சுங்க இறுப்புப் பட்டியலினை மிகவும் அண்மைய இற்றைப்படுத்தல் நிலையில் வைத்திருப்பதனை உறுதிப்படுத்தல்.

05. பொதுமக்களுக்களின் இணக்கப்பாட்டினை மேம்படுத்தவதற்காக அவர்களுக்குத் தேவையான தகவலினை திணைக்கள உதவி கருமபீடம் ஊடாக கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்தல்.

06. உலக சுங்க அமைப்பகம், அதனது பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளிலும் (உலக வர்த்தக அமைப்பகம் மற்றும் MEAs க்கான செயலகங்கள்) மற்றும் இருபக்க, பல்பக்க வியாபார பேச்சுவார்த்தைகளிலும் இலங்கைச் சுங்கம் சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தல்.

07. திணைக்கள நோக்கெல்லையினை அடைவதற்காக, உலக சுங்க அமைப்பகத்தின் சிபாரிசுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை தனது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப அமைத்துக் கொள்ளல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

1) சுங்க விடயங்கள் தொடர்பிலான தகவல்களை சரியானமுறையிலும் விரைவாகவும் வழங்குதல்.
2) எல்லை முகவர்களுடன் தொடர்ச்சியான ஆலோசனைகளை மேற்கொள்ளல்
3) வியாபார செய்முறை மீள் பொறியியலினை தொடர்புகொள்ளல்
4) உபாய ஆய்வுத்திட்டத்தினை தயாரிக்கும் வகையில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் /மேலதிக சுங்கப் பணிப்பாளர் (கூட்டுறவு) ஆகியோருக்கு உதவுதல்.
5) வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிக்கும் வகையில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் /மேலதிக சுங்கப் பணிப்பாளர் (கூட்டுறவு) ஆகியோருக்கு உதவுதல்.
6) சுங்க கொள்கைகள், நடைமுறைகள், வரிகள், மற்றும் வியாபார வசதிகள் போன்றவை தொடர்பிலான விடயங்களில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் /மேலதிக சுங்கப் பணிப்பாளர் (கூட்டுறவு) ஆகியோர் சார்பில் சமூகமளித்தல்.
7) சர்வதேச சுங்க தினக் கொண்டாட்டத்தினை ஏற்பாடுசெய்தல்
8) திணைக்களக் கட்டளைகள் உரிய முறையில் பங்கீடு செய்வதனை உறுதிப்படுத்தல்
9) தேசிய சுங்க இறுப்பு வழிகாட்டியினை வெளியிட உறுதிப்படுத்தல்
10) சுங்க விடயங்களுடன் தொடர்புபட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்

| பிரதான செயற்பாடு | இலக்கு | இடம்பெற்றவை | இதனை அடையப்பெறவில் லையாயின் அதற்கான காரணம் |
|---|---|---|---|
| தேசிய இறுப்பு வழிகாட்டி 2014 இனை வெளியிடுதல் | இவ்வருட 1ஆம் காலாண்டில் வெளியிதல் | இவ்வருட 1ஆம் காலாண்டில் வெளியிடப்பட்டன | - |
| சர்வதேச சுங்க தினத்தின கொண்டாட்டத்தினை ஏற்பாடு செய்தல் | இவ்வருட 1ஆம் காலாண்டில் ஏற்பாடு செய்தல் | இவ்வருட 1ஆம் காலாண்டில் ஏற்பாடு செய்யப்படன | - |

**சுங்க இறுப்புப் பட்டியல்**

இலங்கை சுங்கமானது சர்வதேச வர்த்தகம் தொடர்பில் விதிக்கப்பட்ட சகல வரிகளையும் சேகரிப்பதற்கான பொறுப்புகளைக் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டுப் பகுதியில் சுங்கத் திணைக்களமானது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் இறக்குமதித் தீர்வை மற்றும் ஏற்றுமதித் தீர்வை, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி, இறக்குமதி செஸ் வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவிடு, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு, பெறுமதி சேர் வரி, தேசக் கட்டுமான வரி, சமூகப் பொறுப்பு அறவீடு போன்றவற்றினை அறவிட்டுள்ளது. ஏற்றுமதித் தீர்வை மற்றும் ஏற்றுமதி செஸ் வரி என்பவை ஏற்றுமதி செய்யப்படும் ஒரு சில பொருட்கள் தொடர்பில் செலுத்தப்படுகின்றது. இது தவிர, விசேட வியாபாரப் பண்ட அறவீடானது ஒரு சில தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்கள் மீது குறித்த காலத்தில் செலுத்த வேண்டியதாகும். இப் பல்வேறு வகை வரிகளின் விளைவாக, சுங்க இறுப்புப் பட்டியலில் விபரிக்கப்பட்ட ஒவ்வொரு பண்டமும் வித்தியாசமான வரிகளைக் கொண்டுள்ளன. ஆகையால் சுங்க இறுப்பானது ஒரு சிக்கலான ஆவணமாகவுள்ளது. மேலும், இருபக்க அல்லது பல்பக்க வர்த்தக ஒப்பந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒருசில தெரிவு செய்யப்பட்ட பண்டங்கள், பிரயோகிக்கத்தகு முன்னுரிமை தீர்வை வீதங்களைக் கொண்டுள்ளன. இலங்கைச் சுங்கமானது, பொருட்கள் மீதான செலுத்தத்தகு சகல வரிகளையும் மற்றும் வரி விகிதங்களையும் உள்ளடக்கிய வகையில் ஒரு புத்தக வடிவில் வருடாந்த இறுப்பு வழிகாட்டியினை வெளியிட்டிருந்தன.

**தேசிய உப பிரிவுகள் (தே.உ.பி)**

இயைபுபடுத்தப்பட்ட பண்ட விபரம் மற்றும் குறியீட்டு முறைமையிலான தேசிய உப பிரிவுகள் தொடர்பில் இலங்கைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரேரணைகள் வரவு செலவுத்திட்ட பிரேரணைகளில் உள்ளடக்கும் வகையில் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**திணைக்கள சுற்று நிருபங்கள்**

ஒரு கொள்கை தீர்மானம் மற்றும் விரிவுபடுத்தல் நடைமுறைகளில் நேரிடுகின்ற மாற்றங்களை அறிவிப்பதற்கு அல்லது புதிய நடைமுறைகளை அல்லது திணைக்களத் தொழிற்பாடுகளுடன் அடங்கிய கையேட்டு நடைமுறையிலுள்ள மாற்றங்களை அறிவிப்பதற்கான தேவை எழும் போது திணைக்களக் கட்டளைகள் அடிக்கடி விநியோகிக்கப்படுகின்றது. இதன் விளைவாக, திணைக்கள கட்டளைகளானது ஒரு பிரதான அலுவலகச் செய்தி மூலமாகவிருக்கின்றது. கொள்கை கருதுகோள்கள் உரிய பணிப்பகங்களால் வரையப்பட்டு, அவ் உள்ளடக்கத்தின் நடைமுறை மற்றும் சுற்றுநிருபங்களிலான விரிவாக்கலுடனான முரண்பாடுகளை இல்லாமல் செய்தல், மற்றும் இறுதியாக சுற்றுநிருபங்களைத் தயாரித்தல் மற்றும் அதனை அலுவலக மாதிரிக்கு உட்படுத்தல் போன்றவற்றுக்காக இப் பணிப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் பின்னர் சுங்கப் பணிப்பாளரின் அங்கீகாரத்தினைப் பெற்று இப்பணிப்பகத்தினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. வெளியிடுதல் அடங்கலாக சகல செயன்முறைகளும் நீண்ட நேரமெடுக்கின்றதும் சோர்வடையச் செய்கின்றதுமான செயற்பாடாகவுள்ளன. ஆனால் இப் பணிப்பகமானது, முக்கியமான மற்றும் அவசரமான விடயங்களை அலுவலர்களுக்கு முதன் முதலில் தெரியப்படுத்துவதன் காரணமாக இப் பணிப்பகமானது எவ்வித தாமதமுமின்றி சுற்றுநிருபங்களை விநியோகிப்பதற்கு பாடுபடுகின்றது. வரி விதிப்பில் அத்தியாவசியப் பகுதியாக செயற்படும் அரசிறைக் காப்புக் கட்டளையானது பிறிதொரு வகை சுற்றுநிருபமாகும். வரிகள் மற்றும் தீர்வைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை, அவை அமுலாகும் திகதி மற்றும் நேரத்திலிருந்து புதிய விகிதத்தில் வரி மற்றும் தீர்வைகளை அறவிடுவதற்காக அதிகாரிகளுக்கு முன்னதாகவே அறிவிக்கும் நோக்கில் இயலுமானளவு குறுகிய காலத்திற்குள் (பொதுவாக அதே கடமை நாளில்) தயாரிக்கவும் அச்சிடவும் மற்றும் வெளியிடப்படவுமுள்ளன. பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்படுகின்ற இம்மாற்றங்களும், மேலும் இச்சுற்றுநிருபங்களும் வரி விதிப்பில் முக்கிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன.

**நாணய மாற்று விகித சுற்றுநிருபங்கள்**

வங்கிகள் மற்றும் நாணய மாற்றுனர்களால் பாவிக்கப்படும் சம மதிப்பு பெறுமதிகள் எப்பொழுதும் மாறுகின்றதைப் போலல்லாது, சுங்கமானது மத்திய வங்கியின் அறிவுறுத்தலுக்கிணங்க கடமையாற்றும் கிழமையொன்றிற்கு விதிக்கத்தகு ஒரு சம மதிப்பு பெறுமதி சுங்கத்தினால் பிரயோகிக்கப்படுகின்றன. சகல சுங்கத் தீர்வைகள் அதேபோன்று சுங்கக் கட்டளைச்சட்டத்தின்(235ஆம் அத்தியாயாம்) கீழ் உள்ளாக்கப்பட்டுள்ள இதர கட்டணங்கள், அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள் என்பவற்றினை செலுத்துவதற்காக விதிக்கப்படுகின்ற நாணயமாற்று விகிதங்கள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறாக ஒவ்வொரு கிழமையின் வெள்ளிக்கிழமை வெளியிடப்படுகின்றதுடன் கொள்கைத திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகத்தினால் அவை சுங்கப் பிரகடனம் செய்முறைப்படுத்துகின்ற சகல சகல பிரிவுகளுக்கும் மற்றும் சுங்க வெப்தளத்தில் வெளியிடும் வகையில் தகவல், தொழில்நுட்ப பணிப்பகத்திற்கும் விநியோகிக்கப்படுகின்றன. இச்சுற்றுநிருபமானது சகல அலுவலர்களுக்கும் மற்றும் அதேபோன்று வர்த்தகர்களுக்கும் அத்தியவசியமானதொன்றாகும்.

**சர்வதேச விவகாரங்கள்**

கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகமானது சுங்கத்துடன் தொடர்புபட்ட வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பாகவுள்ளது. சுங்கத்தின் சர்வதேச விவகாரங்களை உறுதியாகவும் மற்றும் சிறந்த முகாமை போன்றவற்றின் நோக்கங்களுக்கேற்ப சுங்க சர்வதேச விவகாரங்கள் பிரிவானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரிவின் தொழிற்பாடுகளானது உலக சுங்க அமைப்பகத்தினுடனான சுங்க சர்வதேச விவகாரங்கள் மற்றும் அதனது ஆசிய பசுபிக்கிற்கான பிராந்திய அலுவலகம் என்பவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களில் கூட்டிணைப்பினையும் தொடர்பினையும் பேணுதலாகும். இதற்குமேலாக, கொள்கை திட்மிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகமானது சுங்க கூட்டிணைப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் இருபக்க மற்றும் பல பக்க வியாபார உடன்படிக்கைகள் மற்றும் பரஸ்பர உடன்படிக்கை போன்றவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு பொறுப்பாயுள்ளது. இலங்கை இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் இரண்டு இருபக்க உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் இதற்கு மேலாக, இலங்கையானது கட்டார், ஐக்கிய அரபு ராஜ்யம் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் பரஸ்பர நிருவாக உதவிகள் தொடர்பில் உடன்படிக்கைகளை செய்வதிலான செய்முறையிலும் உள்ளது

**சர்வதேச உடன்படிக்கைகள்**

இலங்கைச் சுங்கமானது பின்வரும் சர்வதேச உடன்படிக்கைகளை மேற்கொள்ளவதிலான செய்முறையில் உள்ளது.

1. இலங்கை மற்றும் மெக்சிகோ ஆகிய இரு நாடுகளுக்கிடையே சுங்கச் சட்டத்தினை உரிய முறையில் பிரயோகப்படுத்தல் மற்றும் சுங்க குற்றங்களை கட்டுப்படுத்தல், விசாரணை செய்தல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றிற்காக பரஸ்பர நிர்வாக உதவி தொடர்பிலான உடன்படிக்கை.
2. இலங்கை மற்றும் துருக்கி ஆகிய இரு நாடுகளுக்கிடையே சுங்க விடயங்களில் கூட்டிணைப்பு மற்றும் பரஸ்பர உதவி தொடர்பிலான உடன்படிக்கை.

**அபிவிருத்தி திட்டங்கள்**

இலங்கைச் சங்கமானது பினவரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருந்தன.

1. கோரிய சுங்கம் - சுங்கம் நவீனமயமாக்கல்
2. கொரியா எகடமி பங்காளி திட்டம்

**திட்டமிடல் செயற்பாடுகள்**

இலங்கைச் சுங்கத்தின் 2014ஆம் ஆண்டுக்கான சகல பணிப்பகங்களது பிரதான செயலாற்றுகை மதிப்புரையானது முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் 2014ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை வெளியிடப்பட்டது. 2015ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற் திட்டம் தயாரிக்கபட்டதுடன் அவை சகல பணிப்பகங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுமுள்ளன.

**ஆராய்ச்சி செயற்பாடுகள்**

அரசிறை செயலாற்றுகையின் குறிப்பிடத்தக்க விடயமாக விழங்குகின்ற அரசிறை பகுப்பாய்வு இப்பணிப்பகத்தினால் நிறைவேற்றுகின்ற பிரதானதொரு பணியாகும். இறக்குமதிகளில் இருந்து சேகரிக்கப்படும் அரசிறை தொடர்பிலானதொரு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றதுடன் அவை ஒவ்வவொரு இரண்டு கிழமைகளுக்கும் சுங்கப்பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அறிக்கையிடப்பட்டன.

**2015 ஆம் ஆண்டில் செயலாற்றுகை**

இப்பணிப்பகமானது 2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் தொடர்பிலான 52 சுற்று நிருபங்களையும் மற்றும் 95 திணைக்களக் கட்டளைகளையும் வினியோகித்துள்ளது.

2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திணைக்களக் கட்டளைகள் பின்வருமாறு :

- பெறுமதி சேர் வரி திருத்தங்கள் - 04
- உற்பத்தி வரித் திருத்தங்கள் - 07
- துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு திருத்தங்கள் - 01
- விசேட பண்ட அறிவீட்டு திருத்தங்கள் - 22
- செஸ் அறவீட்டுத் திருத்தங்கள் - 06
- அரசிறைக் காப்புக் கட்டளை - 08
- தேச கட்டுமான வரி திருத்தங்கள் - 01

**2015 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட திணைக்களக் கட்டளைகள்**

| திணைக்களக் கட்டளை இல | திகதி | தொடர்புபட்ட துறை/ விடயம் | விடயம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 976 | 22.01.2015 | வி.ப.அ | அரிசி மீதான விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 977 | 29.01.2015 | தீர்வை விலக்களிப்பு | கோதுமைத் தானியம் மீதான தீர்வை விலக்களிப்பு |
| 978 | 29.01.2015 | 1/2015 இலக்க அ.கா.க | 2015/1 ஆம் இலக்க அரசிறைக் காப்புக் கட்டளை – 2015ஆம் வரவு செலவுத்திட்டம் |
| 979 | 29.01.2015 | உற்பத்தி வரி | உற்பத்தி வரி (விசெட ஏற்பாடுகள்) |
| 980 | 29.01.2015 | மோட்டார் வாகனம் | மோட்டார் வாகனங்கள் மீதான சுங்கப் பெறுமதி |
| 981 | 29.01.2015 | இ.க.அ | இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் |
| 982 | 29.01.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 983 | 16.02.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 984 | 24.02.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 985 | 27.02.2015 | 2/2015 இலக்க அ.கா.க | அரசிறை காப்புக் கட்டளை |
| 986 | 27.02.2015 | இ.க.அ | இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் |
| 987 | 27.02.2015 | உற்பத்தி வரி | உற்பத்தி வரி திருத்தம் |
| 988 | 27.02.2015 | பெறுமதி மதிப்பீடு | மோட்டார் வாகனங்கள் மீதான சுங்கப் பெறுமதி |
| 989 | 06.03.2015 | பெ.சே.வரி விலக்களிப்பு | தேசிய உப பிரிவுகள் மீதான பெ.சே.வரி விலக்களிப்பு |
| 990 | 17.03.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 991 | 25.03.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 992 | 25.03.2015 | ஏற்றுமதி நடைமுறை | ஏற்றமதி இலகுபடுத்தல் நிலையத்திலான ஏற்றுமதி நடைமுறை |
| 993 | 01.04.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 994 | 08.04.2015 | செஸ் வரி (ஆ.கூ.சி.வி) | ஆ.கூ.சி. விலை மீதான செஸ் வரி |
| 995 | 10.04.2015 | நிருவாகம் | 2011ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்டவாறான 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரிச் சட்டத்தின் (விசேட ஏற்பாடு) 3இ பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை |
| 996 | 20.04.2015 | உற்பத்தி வரி | உற்பத்தி வரி |
| 997 | 23.04.2015 | கொ.தி.ஆ | உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் மீதான விசேட பண்ட அறவீடு |
| 998 | 30.04.2015 | மோட்டார் வாகனம் | மோட்டார் வாகன விடயம் தொடர்பிலான குழு |
| 999 | 30.04.2015 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுச் சட்டம் | ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டம் |
| 1000 | 06.05.2015 | 03/2015 இலக்க அ.கா.க | அரசிறை காப்புக் கட்டளை |
| 1001 | 05.05.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டினை அகற்றல் |
| 1002 | 06.05.2015 | நிறுத்தி வைத்தல் | சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 1003 | 06.05.2015 | நிறுத்தி வைத்தல் | சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 1004 | 06.05.2015 | நிறுத்தி வைத்தல் | சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 1005 | 06.05.2015 | நிறுத்தி வைத்தல் | சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 1006 | 15.05.2015 | இ.த.நி.நி | இலங்கை தர நிர்ணய நிறுவக ஒழுங்கு விதிகள் |
| 1007 | 22.05.2015 | இ.க.அ | இறக்குமதி கட்டுப்பாட்டச் சட்டம் தொடர்பிலான மாற்றம் |
| 1008 | 05.06.2015 | வி.ப.அ | பெரிய வெங்காயம் மீதான விசேட பண்ட அறவீடு |
| 1009 | 16.06.2015 | இ.க.அ | கிளிபோசைட்டுகளை தடைசெய்தல் |
| 1010 | 16.06.2015 | இ.க.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1011 | 19.06.2015 | வி.ப.அ | இறக்குமதி கட்டுப்பாட்டச் சட்டம் தொடர்பிலான மாற்றம் |

| | | | |
|---|---|---|---|
| 1012 | 24.06.2015 | இ.க.அ | கொட்டை பாக்கு மீதான இறக்குமதி கட்டுப்பாட்டச் சட்டம் |
| 1013 | 02.07.2015 | வி.ப.அ | சோளம் மீதான விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1014 | 04.07.2015 | சோளம் மீதான இறக்குமதி | சோளம் இறக்குமதி செய்தல் மீதான வருடாந்த பங்கு (கோட்டா) |
| 1015 | 20.07.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1016 | 23.07.2015 | விலக்களிப்பு | பால் மா மீதான தீர்வைத் விலக்களிப்பு |
| 1017 | 07.08.2015 | விலக்களிப்பு | பால் மா மீதான தீர்வைத் விலக்களிப்பினை அகற்றல் |
| 1018 | 13.08.2015 | ஒ.பொ.ம.அ(என்.எம்.ஆர்.எ) | மருத்துவ, மருத்துவ பொருட்கள், எல்லை நிலை தயாரிப்பு மற்றும் ஒப்பனைப் பொருள் வெளியாக்கல் |
| 1019 | 08.09.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1020 | 08.09.2015 | பெ.சே.வரி விலக்களிப்பு | கோழித் தீவினம் மீதான பெ.சே.வரி விலக்களிப்பு |
| 1021 | 17.09.2015 | மோட்டார் வாகனம் | மோட்டார் வாகன சலுகை வரி |
| 1022 | 17.09.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1023 | 17.09.2015 | | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் உதவியுடன் உள்வருகை மற்றும் வெளிச் செல்லுகை பயணிகளது இடைமறிப்பு ஒழுங்குபடுத்தல் |
| 1024 | 22.09.2015 | மேலதிக கட்டணம் | பெரிய வெங்காயம் மீதான மேலதிக கட்டணம் |
| 1025 | 23.09.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1026 | 28.09.2015 | மோட்டார் வாகனம் | மோட்டார் வாகனத்துக்கான சுங்க பெறுமதி |
| 1027 | 01.10.2015 | வி.ப.அ | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1028 | 05.10.2015 | உற்பத்தி வரி (விசெட ஏற்பாடுகள்) | உற்பத்தி வரி திருத்தம் - சிகரெட்டுகள் |
| 1029 | 07.10.2015 | | பெறுமதி பிரகடனப்படுத்தல் படிவத்தின் தேவை கருதி சட்ட அபிப்பிராயத்தினது வேண்டுகோள் |
| 1030 | 08.10.2015 | வி.ப.அ | பெரிய வெங்காயம் மீதான விசேட பண்ட அறவீடு |
| 1031 | 16.10.2015 | | இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தூண்டில் இரை மீன் பொருட்கள் |
| 1033 | 28.10.2015 | வி.ப.அ | சோளம், தானிய சர்க்கரைச் சோளம், மரக்கறி கொழுப்புகள் மற்றும் எண்ணெய் மற்றும் அவற்றிலிருந்தான பிரித்தெடுப்புகள் மீதான விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1034 | 19.11.2015 | | சுங்க விடயங்கள் தொடர்பில் 2014ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க புதிய அணு சக்தி சட்டத்தினது ஏற்பாடுகள் |
| 1035 | 20.11.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | 2015/04 ஆம் இலக்க அரசிறைக் காப்புக் கட்டளை |
| 1036 | 20.11.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | விசேட பண்ட அறவீட்டுத் திருத்தம் |
| 1037 | 20.11.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | உற்பத்தி வரி திருத்தம் - 1989ஆம் அண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழான கட்டளை |
| 1038 | 20.11.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | |
| 1039 | 24.11.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | 2016ஆம் வருட வரவு செலவுத்திட்ட இறக்குமதி மீதான செஸ் வீத மீளாய்வு |
| 1040 | 27.11.2015 | | மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சலுகை இடைநிறுத்தம் |

| | | | |
|---|---|---|---|
| 1041 | 08.12.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | 2015/4 ஆம் இலக்க அரசிறைக்காப்புக் கட்டளைக்கான திருத்தம் மற்றும் உற்பத்தி வரி - 2015ஆம் வருட வரவு செலவுத்திட்டம் |
| 1042 | 09.12.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | 2015/4 ஆம் இலக்க அரசிறைக்காப்புக் கட்டளைக்கான திருத்தம் |
| 1043 | 09.12.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஏற்றமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்தமான அறிவித்தல் |
| 1044 | 15.12.2015 | இறக்குமதி செஸ் வரி | 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஏற்றமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்தமான அறிவித்தல் |
| 1045 | 15.12.2015 | அ.கா.க | 2015/4 ஆம் இலக்க அரசிறைக்காப்புக் கட்டளைக்கான திருத்தம் |
| 1046 | 17.12.2015 | | கடல் மார்க்க சரக்கப் பரிசொதனை நடைமுறை ஒழுங்கமைப்பு |
| 1047 | 22.12.2015 | பெ.சே.வரி | 8701.90.10ஆம் இலக்க இயைபு முறைத் தலைப்பிலான அரை இழுவை வண்டிகளுக்கான விவசாய ட்றக்டர்கள் அல்லது வீதி ட்றக்கடர்கள் ஆகியவற்றின் இறக்குமதி மற்றும் விநியோகம் மீதான பெ.சே. வரி |
| 1048 | 23.12.2015 | | இலங்கை தர நிர்ணய நிறவனத்தினால் சோதனைக்காக தேவைப்படுகின்ற முழக் கொள்கலன் அனுப்பு பொருள் சரக்குகளையுடைய தகரத்திலடைக்கப்பட்ட மீன் வெளியாக்கல் |
| 1049 | 31.12.2015 | 2016 வரவு செலவுத் திட்டம் | பெ.சே.வரி / து.வி.அ / தே.க.அ மீதான திருத்தங்கள் |
| 103220 | 20.10.2015 | | ஜனதா காமன்ட மனுபெக்சர்ஸ் லிமிடட்டுக்கான சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 1015அ | 21.07.2015 | வி.ப.அ | 1015ஆம் திணைக்களக் கட்டளைக்கான பிழைதிருத்தம் |
| 1018(ஆ) | 05.10.2015 | | என்.எம்.ஆர்.ஏ நோக்கெல்லையில் இருந்து ஒப்பனைப் பொருள் அகற்றல் |
| 1018இ | 26.11.2015 | | உடற்பயிற்சி(ஜிம்) சாதனங்கள் தொடர்பில் என்.எம்.ஆர்.ஏ இருந்தான அறிவுறுத்தல் |
| 1018அ | 27.08.2015 | ஒ.பொ.ம.அ(என்.எம்.ஆர்.எ) | என்.எம்.ஆர்.ஏ. மாதிரி ஒப்பம் |
| 1021(அ) | 11.11.2015 | தி.க 1026க்கான திருத்தம் | மோட்டார் வாகன வெளியாக்கல் திகதியினை அகற்றல் |
| 1026(அ) | 19.10.2015 | | 1026ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம் |
| 1027(அ) | 08.10.2015 | பொதுவானவை | 1027ஆம் திணைக்களக் கட்டளைக்கான பிழைதிருத்தம் |
| 1044B | 18.12.2015 | இறக்குமதி செஸ் வரி | 1044ஆம் திணைக்களக் கட்டளைக்கான பிழைதிருத்தம் |
| 1044அ | 17.12.2015 | இறக்குமதி செஸ் வரி | 1044ஆம் திணைக்களக் கட்டளைக்கான பிழைதிருத்தம் |
| 1045அ | 17.12.2015 | அ.கா.க | 1045 ஆம் திணைக்களக் கட்டளைக்கான மேலதிக திருத்தம் |
| 118 S | 27.11.2015 | | 118 எப் ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பந்தி 06(உ) க்கான திருத்தம் |
| 118(ஆர்) | 23.09.2015 | தி.க 118க்கான திருத்தம் | கொ.தி.அ வெகுமதியில் போதைப் பொருள் பிரிவு மற்றும் மே.சு.ப.ந பதவியணியினரை உள்ளடக்கல் |
| 118-கியு | 09.07.2015 | தி.க 118க்கான திருத்தம் | பி.சு.அ களது வெகுமதி பங்கிலான அதிகரிப்பு |
| 562F | 15.04.2015 | பொருள் பெயரேட்டுக் குழு | பொருள் பெயரேட்டுக் குழு |

| | | | |
|---|---|---|---|
| 749இ | 14.08.2015 | பெறுமதி மதிப்பீடு | பெறுமதி மதிப்பிடல் குழு |
| 861அ | 07.08.2015 | விசாரணைகள் | 861ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம் |
| 933அ | 05.02.2015 | புகையிலை | புகையிலை முகப்புச் சீட்டிடல் ஒழுங்கு விதிகள் |
| 978அ | 12.02.2015 | அ.கா.க | 2015ஆம் ஆண்டைய வரவு செலவுத்திட்டம் - அரசிறைக்காப்பு தொடர்பிலான திருத்தம் |
| 980அ | 11.02.2015 | மோட்டார் வாகனம் | மோட்டார் வாகனங்கள் மீதான சுங்கப் பெறுமதி |
| 982அ | 30.01.2015 | வி.ப.அ | 982அ ஆம் திணைக்களக் கட்டளைக்கான பிழைதிருத்தம் |
| 993அ | 07.04.2015 | வி.ப.அ | 993ஆம் திணைக்களக் கட்டளைக்கான பிழைதிருத்தம் |

**புதிதாக திறக்கப்பட்ட திணைக்களக் கோவைகள்**

| **திகதி** | **பி எல் இல** | **விபரம்** |
|---|---|---|
| 23.01.2015 | 750 | இலகுபடுத்தல் மற்றும் முகாமைத்தவ வேைலைக் குழு கூட்டத்தின் கீழான சசெக் (SASEC) |
| 27.01.2015 | 751 | இலங்கை மற்றும் வியட்நாம் நாடுகளுக்கிடையிலான வியாபாரம் தொடர்பிலான உப குழு |
| 06.03.2015 | 752 | அனுசக்தி அதிகார சபையில் அளவீட்டுக் கருவிக்கான திர்வுகாணல் (இரசாயனம்)அளவு கோள்களது இறக்குமதி |
| 21.04.2015 | 753 | இலங்கை மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையிலான வியாபார பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றம் தொழில்நுட்ப கூட்டுறவு மீதான உள்ளக-அரசாங்க இணைப்பு ஆணைக்குழு |
| 29.04.2015 | 754 | இ.த.நி.நி இறக்கமதி பரிசோதனைத் திட்டம் |
| 30.04.2015 | 755 | கன்டி நீர் வினியோகத் திட்டம் |
| 30.04.2015 | 756 | சிறந்த கையாளுகையின்மையெனச் சான்றுபடுத்தப்பட்ட ஒழுங்கு விதி |
| 08.06.2015 | 757 | கிளைபோசைட்டுக்கான இயைபு முறைக் குறியீடு |
| 23.09.2015 | 758 | தேசிய மருத்துவ ஒழுங்கவிதி அதிகார சபை |
| 29.12.2015 | 759 | இறக்குமதி இறுப்பு வழிகாட்டி - 2016 |

**சர்வதேச விவகாரங்கள் பிரிவு – திறக்கப்பட்ட விடயக் கோவைகள்**

| **கோவை இல** | **விபரம்** |
|---|---|
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/01/2015 | சார்க் கூட்டம் - காத்மன்டு |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/02/2015 | வீசா கடிதத் தொடர்பு |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/03/2015 | கொரியன் சுங்கம் - சுங்க நவீனமயமாக்கல் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/04/2015 | காத்மன்டு கூட்டங்கள் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/05/2015 | இலங்கை, பங்களாதேஷ் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/06/2015 | உலக சுங்க அமைப்பகத்தில் பணிப்பாளர் பதவி |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/07/2015 | உ.சு.அ ஆசிய இடர் முகாமைத்துவ தொடர்பு நிலையம் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/08/2015 | சுங்க சர்வதேச விவகாரங்கள் பிரிவினது தளபாடங்கள் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/09/2015 | சுங்க நினைவுப் பொருளினை தயாரித்தல் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/10/2015 | கோயிகா (KOICA) கல்வி நிலைய பங்குடைமைத் திட்டம் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/11/2015 | துருக்கி - இலங்கை பரஸ்பர உடன்படிக்கை |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/12/2015 | ஆ.அ.வ – வரி நிருவாக பகுப்பாய்வு |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/13/2015 | செயலாற்றுகை மதிப்பீட்டு தகவலுக்கான மத்திய வங்கி வேண்டுகோள் |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/14/2015 | மெக்சிகோ மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான சுங்க உடன்படிக்கை |
| கொ.தி.ஆ./சு.ச.வி.ப/15/2015 | உலக சுங்க அமைப்பகத்துக்கான இலங்கையின் வருடாந்த அங்கத்துவ பங்களிப்பு |

**பணிப்பாளர்/ பிரதிப்பணிப்பாளர்களால் சமூகமளிக்கப்பட்ட கூட்டிணைப்பு கூட்டம்**

இவ்வாண்டுக்காலப்பகுதியில் மேற்படி அலுவலர்கள் பின்வரும் நிறுவனங்களில் இடம்பெற்ற பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டர்.

1. வர்த்தகத் திணைக்களம்
2. இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
3. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
4. சுற்றாடல் அதிகார சபை
5. நிதி அமைச்சு, வியாபார முதலீட்டுக்கொள்கை மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பணிப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள்**

**1. சர்வதேச சுங்க தின கொண்டாட்டம்**

திகதி– 2015 ஜனவரி மாதம் 26ஆம் திகதி
இடம் - சுங்க தலைமையலுவலகம்
விடயம் - "கூட்டிணைக்கப்பட்ட எல்லை முகாமைத்துவம் - சுங்கத்ததுடன் தொடர்புபட்டவர்களை இணைப்பதற்கானதொரு அனுகுமுறை"
பிரதம அதிதி – கலாநிதி. சரத் அமுனுகம, நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

# இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்

**அறிமுகம்**

இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகமானது கூட்டுறவுக் கொத்தணியின் கீழ் தாபிக்கப்படுகிறது. இப்பணிப்பகத்தின் கீழ் மூன்று பிரிவுகள் செயற்படுகின்றன. வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு, மீள் செலுத்துகை மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய மூன்றுமே அவையாகும். 2010 இன் இறுதியில் இடம்பெற்ற சுங்க மறுசீராக்கல்கள் மற்றும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான புதிய நிறுவனக் கட்டமைப்பின் அமுலாக்கத்தோடு, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்ட வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு பிரிவானது அமுலாக்கல் கொத்தணியினுள் சுங்கப் பணிப்பாளர் ஒருவரின் கீழ் ஒரு பணிப்பகமாக தரமுயர்த்தப்பட்டதோடு, அது வெளியாக்கலுக்கு பின்னதான கணக்காய்வுப் பணியகம் (PCA) எனவழைக்கப்பட்டது. இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு வசதியளித்தல் மற்றும் சுங்கத்தின் வெளியாக்கல் செயன்முறையில் ஏற்படக்கூடிய மோசடி மற்றும் தவறுதல்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொள்கையில், சுங்கத்தில் இடர் முகாமைத்துவப் பிரிவொன்றைத் தாபிப்பதன் மூலம் தற்போதுள்ள முறைமைகளை மேம்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளையும் இணக்கப்பாட்டு நடவடிக்கைகளையும் அமுல்படுத்தல் மற்றும் சுங்க வெளியாக்கல் செயன்முறையின் வசதியளித்தல் திட்டங்களுக்கான நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் போன்றன வர்த்தக சமூகத்திற்கிடையிலான இணக்கப்பாட்டு மட்டத்தை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய இன்றியமையாத காரணிகளாகத் திகழ்கின்றன. வெளியாக்கலுக்கு முன்னரான கணக்காய்வுப் பிரிவு மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் தொழிற்பாடுகளை கூட்டுறவுக் கொத்தணியினுள் ஒரு பணிப்பகத்தின் கீழ் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வுப் பிரிவும் இடர் முகாமைத்துவப் பிரிவும் இப் பணிப்பகத்தின் கீழான இரண்டு கிளைகளாக, 883ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பிரகாரம் 2013 செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ''இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்'' எனும் பெயரின் கீழ் தொழிற்பட்டு வருகின்றன.

**வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு**

வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு அல்லது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகள் என்பது மீளாய்வு செய்யப்பட்ட கியாகோ சமவாயத்தினால் குறித்த நடவடிக்கைகளாக வரையறுக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள் சுங்கமானது குறித்த நபரின் பிரகடனங்களின் உண்மைத்தன்மை மற்றும் அதிகாரத்தன்மைகளை அந்நபரின் தொடர்புபட்ட புத்தகங்கள், பதிவேடுகள், வர்த்தக முறைமைகள் மற்றும் வணிகத் தரவுகள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதன் ஊடாக உறுதி செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படக்கூடியனவாகும். வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வானது சுங்கத்திற்கும் ஏனைய எல்லைப்புற அதிகார அமைப்புகளுக்கும் கடினமானதொரு கட்டுப்பாட்டு முறையியலாகும். ஏனெனில், இது கண்டிப்பான பரிமாற்ற மைய கட்டுப்பாட்டுச் சூழலிலிருந்து ஒரு வலிமையான கணக்காய்வு மைய நிருவாகத்திற்கு மாறுவதன் ஊடாக அவர்கள் பல்-அடுக்கு இடர் மைய கட்டுப்பாட்டு அணுகல் முறையினை பிரயோகிப்பதற்கு வழியமைப்பதாகவுள்ளது.பரிமாற்ற மையக் கட்டுப்பாடுகள் என்பது பொருட்களின் பௌதீகப் பரிசோதனை, பெறுமதி சரிபார்ப்பு, அவற்றின் உற்பத்தியிடம் மற்றும் வகைப்பாடு, மாதிரிப்பொருள், சான்றிதழ், உரிமம் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் சரிபார்ப்பு போன்ற செயற்பாடுகளின் போதான ஒவ்வொரு பிரத்தியேக கப்பலேற்றுகைக்கும் பிரயோகிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைகளாகும்.(மூலம்: உலக சுங்க அமைப்பகம்).

வெளியாக்கத்திற்குப் பின்னரான கணக்காய்வுகள் ஒவ்வொரு விடயமாகத் தனித்தனியாகக் கொண்டு, இலக்குப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர் மீது அவதானம் செலுத்துவதன் அடிப்படையில், சமுதாயம் மற்றும் வர்த்தகர் தொடர்பான இடர் பகுப்பாய்வு குறித்து தெரிவுசெய்வதன் அடிப்படையில், அல்லது வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையான வழிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட முடியும். மேலும், இக் கணக்காய்வானது குறித்த சில பொருளாதார நடவடிக்கையாளர்களை விசேடமாக கையாளும் வகையிலும் பயன்படுத்தப்பட முடியும்.

**இப்பணிப்பகத்தின் முதன்மைக் குறிக்கோள்கள் வருமாறு :**

(அ) சுங்கப் பிரகடனங்களின் துல்லியம் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை சரிபார்த்தல்.
(ஆ) தவறான பிரகடனங்கள் தொடர்பிலான திருத்தங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கணக்காய்வுக்குட்படுவோருக்கு பரிந்துரைத்தல்.
(இ) சுங்கத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுமாறு கணக்காய்வுக்குட்படுவோரை ஊக்குவித்தல்.
(ஈ) இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கான உள்ளீட்டினை வழங்கல்.

**வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வில் ஒப்பீட்டாய்வு செய்யப்படுகின்ற பொருட்கள்**

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறக்குமதி வெளிப்படுத்தல் ஒன்றுக்குத் தேவையான ஒவ்வொரு ஆவணமும் வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வின் போது ஒப்பீட்டாய்வு செய்யப்பட முடியும் :

| தொடர்புபட்ட பொருட்கள் அடிப்படையிலான தீர்வை | தீர்வை விகிதம் தொடர்புபட்ட பொருட்கள் | தீர்வைத் தொகை தொடர்புபட்ட பொருட்கள் | ஏனையவை |
|---|---|---|---|
| • பெறுமதி<br>• அளவு<br>• நாணயமாற்றுவிகிதம் | • வகைப்படுத்தல்<br>• பொது விகிதங்களது விண்ணப்பங்கள்<br>• முன்னுரிமை விகிதங்கள் | • விலக்களிப்புகள்<br>• நியாயமானமுறையில் தீர்மானிக்கப்பட்ட தொகை<br>• சரியான தீர்வைக் கணிப்பீடு | • மட்டுப்படுத்தப்பட்டவைகள்<br>• தடைசெய்யப்பட்டவை<br>• இறக்குமதி அனுமதிப்பத்திரம்<br>• புலமைச் சொத்துரிமை<br>• சீ.ஐ.ரீ.ஈ.எஸ்<br>• றோயல்ரி<br>• நாணயமாற்றுக் கட்டுப்பாடு |

மேற்படி பொருட்கள் சுங்க வெளியாக்கலில் மற்றும்/ அல்லது பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுக்கு முன்னரான வெளியாக்கலுக்கு முந்திய ஒப்பீட்டாய்வு செய்யும் கட்டத்தில் பரிசோதிக்கப்பட முடியுமென்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அநாவசிய இரட்டிப்பினை தவிர்ப்பதற்கும், சிறப்புத்தன்மையை அதிகரிப்பதற்கும் மற்றும் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு குறித்தான அபகீர்த்தியை குறைப்பதற்கும் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்விற்கான அணுகலானது சுங்க வெளியாக்கலில் (வெளியாக்கலுக்கு முந்திய ஒப்பீட்டாய்வு) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாகவிருத்தல் வேண்டும். பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு அதிகாரிகள் சுங்கப் பிரகடனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரமன்றி, கணக்குப் புத்தகங்கள் போன்ற கணக்காய்வுக்குட்படுபவர் தமது வளாகத்தினுள் கடந்த காலங்களில் பேணி வந்த சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேறுகளையும் பரிசோதிக்கின்றனர் என்பதை ஒரு சிறப்புத் தன்மையாக இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

**பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவு**

**2015 ஆம் ஆண்டுக்காலத்தின் போதான செயலாற்றுகை**

| | 2015 |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | 133 |
| முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கவாக) | 67 |
| கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்களும் | 61 |
| அறவிடப்பட்ட அபராதங்களது மொத்தத் தொகை (ரூபா) | 759,460,609.00 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி(ரூபா) | 29,824,414.00 |
| மேலதிக வருவாயாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தெகை(ரூபா) | 66,016,718.00 |

**2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுக்காலத்தின் போதான செயலாற்றுகை**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | 93 | 98 | 133 |
| முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கவாக) | 42 | 50 | 63 |
| கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்களும் | 42 | 50 | 63 |
| அறவிடப்பட்ட அபராதங்களது மொத்தத் தொகை (ரூபா) | 251,181,532 | 114,716,417 | 759,460,609 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி(ரூபா) | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை |
| மேலதிக வருவாயாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தெகை(ரூபா) | ஒன்றுமில்லை | 4,660,935 | 66,016,718 |

**ஒப்பீட்டாய்வு – வரைபு ரீதியாக – 2015**



**ஓப்பீட்டாய்வு – வரைபு ரீதியாக – வருடம் 2013, 2014 மற்றும் 2015**




**இப்பணிப்பகத்திலான விசேட செயலாற்றுகை – 2015**

**2015அம் ஆண்டுக்கான பிரேரிக்கப்பட்ட பரீட்சார்த்தமான அட்டவணை**

| | பிரதான செயற்பாடு | திட்டமிடப்பட்ட கால நேரம் |
|---|---|---|
| 1. | சுங்க அலுவலர்களுக்காக திணைக்கள வேலைக்களரிகள் இரண்டு மேற்கொள்ளப்படவிருக்கின்றன. | 2015 மே மாதம் தொடக்கம் நொவம்பர் மாதத்திற்கிடையில் |
| 2. | திணைக்களத்துடன் தொடர்புபட்டவர்களுடன் ஆலோசனை அமர்வுகளை மேற்கொள்ளல் | 2015 மே மாதம் தொடக்கம் ஜுன் மாத காலப்பகுதியில் |
| 3. | சுங்க வெப்தளம் ஊடாக பெறுமதி மதிப்பிடல் தகவல்களை பரிமாறல் | 2015 ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் |
| 4. | இப்பணிப்பகத்தினது வெப் பக்கத்தினை வரைதல் | 2015 ஒக்டோபர் மாதமளவில் |
| 5. | பெறுமதி மாதிரிகள் தொடர்பில் கையேடொன்றினை வினியோகித்தல் | 2015 நொவம்பர் மாதமளவில் |

**மேற்படி அட்டவணை தொடர்பிலான செயலாற்றுகை அறிக்கை**

| பிரதான செயற்பாடுகள் | கிடைக்கப்பெற்ற பெறுபேறு |
|---|---|
| (1) சுங்க அத்தியட்சகர்/சுங்க பிரதி அத்தியட்சகர்/சுங்க உதவி அத்தியட்சகர் ஆகியோருக்காக மேற்கொள்ளப்பட்ட உலக வர்த்தக அமைப்பக பெறுமதி மதிப்பிடல் நடைமுறையினது அறிமுகம் தொடர்பிலான வேலைக்களரி | 2015, ஜனவரி – 03 மணித்தியால காலம்<br>2015, பெப்ரவரி - 03 மணித்தியால காலம்<br>2015, மே - 03 மணித்தியால காலம்<br>2015, ஒக்டோபர் - 03 மணித்தியால காலம் |
| (2) இலங்கை வர்த்தக சம்மேளனத்திலுள்ள சுங்க திணைக்களத்துடன் தொடர்புபபட்டவர்களுக்கான உலக வர்த்தக அமைப்பக பெறுமதி மதிப்பிடல் நடைமுறையினது அறிமுகம் தொடர்பிலான | 2014, செப்டம்பர் - 03 மணித்தியால காலம |

| | |
|---|---|
| வேலைக்களரி | |
| (3) பெறுமதி மதிப்பிடல் தகவலினை பரிமாறல் | புத்தம் புதிய மற்றும் பாவித்த வாகனங்கள் பெறுமதி தொடர்பில் சுங்கத்தினால் குறிப்பிடப்படும் பெறுமதியினை வெளியிடுதல் |
| (4) இப்பணிப்பகத்தினது வெப் பக்கத்தினை வரைதல் | நிறைவேற்றப்பட்டுள்ளது |
| (5) பெறுமதி மதிப்பிடல் மாதிரிகளை வெளியிடல் | நிறைவேற்றப்படவேண்டியுள்ளது |

**மீளளிப்புக் கிளை**

**மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை - 2015**

| | எண்ணிக்கை |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 80 |
| நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் | 06 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | இல்லை |

**கடந்த ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு (2012 - 2015)**

| ஆண்டு | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 186 | 165 | 141 | 80 |
| நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் | 98 | 121 | 18 | 06 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 01 | 02 | 02 | 01 |

**கடந்த ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு (2012, 2013,2014 மற்றும் 2015)**



**ஒப்பீட்டாய்வு – வரைபு ரீதியாக (வருடம் 2012 ,2013, 2014மற்றும் 2015)**




**இடர் முகாமைத்துப் பிரிவு**

இடர் முகாமையானது, இடரைத் தெரியப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களுடன் சுங்கம் வழங்கும் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் செய்கைகளை உரிய படிமுறையில் பிரயோகிப்பதாகும். தொடர்புபட்ட சட்டப்படியான தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டின்மைக்கான சாத்தியம் மற்றும் இலகுபடுத்தலில் பொருத்தமானதொரு மட்டம் வழங்குவதற்கானசாத்தியம் நிகழாமை என்பன சுங்க நிர்வாகம் எதிர்கொள்கின்ற பிரதான இடர்களாகும்.

இலங்கை அரசின் கொள்கை நாட்டின் சட்ட ரீதியான சர்வதேச வியாபாரத்தை விருத்தி செய்வதாகும் என்பதுடன், நாட்டுக்குள் வருகின்ற மற்றும் வெளிச்செல்லுகின்ற சரக்கு அசைவுகளது இலகுபடுத்தல் தொடர்பிலான முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்வதுமாகும். ஆகவே, சுங்கம் இதனது வெளியாக்கல் செயன்முறை மற்றும் நடைமுறைகளில் மனித தலையீட்டினைக் குறைப்பதற்கும் மற்றும் முறைமையினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுமுள்ளது.

மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் இலங்கைச் சுங்கம் கட்டுப்பாடு மற்றும் இலகுபடுத்தல் ஆகிய இரண்டுக்கம் இடையே சம மட்டத்தைப் பேணுவதற்கு இடர் முகாமைத்துவக் கருவிகளை பயன்படுத்தும் வகையில் இடர் முகாமைத்துவப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. தன்னியக்க தேர்ந்தெடுக்கும் திட்டமானது சாத்தியமான இடரிலே பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்குமான இடர் சுட்டிக்காட்டி அடங்கலான இடர் முகாமைத்துவக் கருவிகள் பாவிக்கப்படுகின்றன. இடர் மதிப்பீட்டுக் கருவிகள், அடையாளப்படுத்தப்பட்ட இடர் அளவீட்டுக் கருவிகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படவிருக்கும் பிரகடனப்படுத்தப்பட்ட இறக்குமதித் தரவுகளை உள்ளடக்கிய அஸிகுடா முறைகளில் தன்னியக்க தெரிவுசெய்தல் திட்டம் ஊடாக இயக்கப்படுகின்றன. தெரிவுசெய்யப்பட்ட இடர் மட்டங்களின் அடிப்படையில் பொருட்கள் சுங்கப் பரிசோதனைக்காக வித்தியாசமான வாயில்கள் ஊடாக திருப்பப்படும்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு பிரகடனப்படுத்தப்படும் பெறுமதிகளது உண்மைத் தன்மை அல்லது சரியானவை தொடர்பிலான சாத்தியமான இடர் மதிப்பீட்டிற்கான ஏனைய இடர் கருவிகளுடன் சுங்க நிர்வாகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற பிற முக்கியமான இடர் மதிப்பீடாக பெறுமதி மதிப்பீட்டு தரவு நிரல் திகழ்கின்றன. இது தரவு நிரலில் சுங்கத்தினால் குறிப்பிட்ட பெறுமதிக்கு பிரகடனப்படுத்தப்பட்ட பெறுமதியினை ஒப்பீடு செய்வதற்கு சுங்கம் அதிகாரமளிக்கின்றன. முறைமையில் தரவுப் பகுப்பாய்வு மற்றும் சீர்படுத்தலுக்கான புலனாய்வு மென்பாகத்தினது பாவனையுடனான அஸிகுடா முறைமையினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பெறுமதித் தரவு நிரலை நிறுவுவதன் மூலம் இத்தகைய இலக்கினை அடையப்பெற முடியும். பெறுமதி மதிப்பீட்டு தரவுநிரல் நிறுவுதலானது இதன் ஆரம்ப கட்டமாகவிருக்கின்றதுடன் எதிர்வருகின்ற மாதங்களில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான வர்த்தகர்களுக்கான இலகுபடுத்தல் குறிக்கோள்களுடன், ஆவணம் சமர்ப்பித்தல் தொடர்பில் துரித வழிமுறையில் ஆவணமாக்கல் திட்டமொன்று நீள அறையில் செயன்முறைப்படுத்துவதற்காக வழங்கப்படும் பச்சை வாயில் வசதி இப்பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ் இலகுபடுத்தல் வசதி செயன்முறை நேரம் வரும் வேளை சரக்குப் பரிசோதனையிலும் கூட பச்சை வாயில் வசதியினை விரிவுபடுத்தவிருக்கும் கட்டுப்பாடு மற்றும் இலகுபடுத்தல் என்பவற்றுக்கிடையேயான மட்டத்தினை அடையும் வகையில் இடர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பிரயோகித்தல் இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதான இலக்காகும்.

**உயர் இடர் கொண்ட சரக்குகளைத் தெரிவுசெய்தல்**

- 2014.01.08 முதல் 2015.06.01 வரையான காலத்தில் புதிதாக பதிவு செய்துகொண்ட கம்பனிகளின் இறக்குமதி பற்றிய தரவுகளைத் தயாரித்தல்.
- இறக்குமதித் தன்மை, பிரகடனம் பற்றிய விபரங்கள், இறக்குமதிப் பொருட்கள் மற்றும் அவற்றின் உற்பத்தியிடம் போன்ற விடயங்களின் காரணமாக,அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பட்டியலில் இணைத்துக்கொள்ளும் நோக்கில் சரக்கைப் பெறுபவரைத் தெரிவுசெய்தல்.
- மேற்படி விபரிக்கப்பட்ட செயன்முறையூடாக 200 பொருள் பெறுபவர்களை அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பட்டியலில் இணைத்தல்.
- தற்போதுள்ள அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பட்டியலில் இருந்து நீக்கப்படுவதற்கான கம்பனிகளைத் தெரிவுசெய்தல். இச் செயன்முறையில் சுமார் 172 கம்பனிகள் நீக்கப்பட்டன.
- மத்திய புலனாய்வுப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல்களுக்கேற்ப கம்பனிகளை அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பட்டியலில் இணைத்துக்கொள்ளல்.
- தற்போது நீள அறையினூடாக வெளியாக்கப்பட்டகிட்டத்தட்ட 1.2 சதவீதமான அனுப்பு பொருட்கள் நாளாந்த அடிப்படையில் அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பட்டியல் மூலமாக அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

**நீள அறையில் இடம்பெறுகின்ற பாஸ்ட் ட்ரக் ஆவணமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்**

- 2015 இன் இறுதியிலுள்ளவாறு பாஸ்ட் ட்ரக் ஆவணமாக்கல் செயன்முறை வசதியானது 218 கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- நீள அறையூடாக வெளியாக்கப்பட்ட அனைத்து முழுக் கொளகலன் அனுப்பு பொருட்களிலும் கிட்டத்தட்ட 14 சதவீதமானவற்றுக்கு துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்ரக்) ஆவணமாக்கல் திட்டம் மூலம் வசதியளிக்கப்படுகின்றன.
- துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்ரக்) வசதிக்குள்ளாகின்ற கம்பனிகளின் இறக்குமதி பற்றிய தரவுகள் அவற்றின் சீரின்மைகள் தொடர்பில் அவை பகுப்பாய்வுசெய்யப்பட்டன.

**தேர்வுத் திறன் அளவுகோல் பற்றிய அபிவிருத்தி**

- அவுஸ்திரேலியா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுக்கான ஆய்வுப் பயணங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் பிரகாரம்,அளவுகோல் அடிப்படையிலான தானியக்க தேர்வுத்திறனின் அபிவிருத்தியானது ஆரம்பிக்கப்பட்டது.
- பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், பங்களாதேஷ், மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்தான இறக்குமதிகள், இந்நாடுகளிலிருந்தான அசாதாரண இறக்குமதிகளை இலக்குப்படுத்தும் வகையில் குறித்த அளவுகோலை விருத்தி செய்யும் நோக்கில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- பொதுவாக இறக்குமதிசெய்யப்படுகின்ற பொருட்கள் அவற்றின் தரங்கள், அளவுகள் மற்றும் பெறுமதிகள் ஆகியவற்றின் பகுப்பாய்வினூடாக இனங்காணப்பட்டன.
- ஐந்து தேர்வுத்திறன் சார்ந்த அளவுகோல்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து வரக்கூடிய அசாதாரண இறக்குமதிகளை இலக்குப்படுத்தும் வகையில் விருத்தி செய்யப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.
- இந்த அளவுகோலின் மூலம் தற்போது நீள அறை சார்ந்த அனைத்து அனுப்பு பொருட்களிலும் 1.8 சதவீதமானவை அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பரிசோதனைக்காக இலக்குப்படுத்தப்படுகின்றன.
- இடையிடையே முதற்தடவையாக ஈடுபடுகின்ற இறக்குமதியாளர்களை தன்னிச்சையாக இலக்குப்படுத்தும் வகையில் தேர்வுத்திறன் அளவுகோலை விருத்தி செய்வதற்கான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

| நீள் அறை (CBHQ1) அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருள் (முழுக் கொள்கலன்) | | | | |
|---|---|---|---|---|
| திகதி | சுகல அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருள | அதியுயர் இடர்கொண்ட சரக்கு வழிமுறை | அதியுயர் இடர்கொண்ட சரக்குப் பட்டியல் | துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்ரக்) |
| 31/01/2016 | 7 | 0 | 0 | 0 |
| 1/2/2016 | 468 | 9 | 3 | 66 |
| 2/2/2016 | 467 | 7 | 5 | 65 |
| 3/2/2016 | 371 | 8 | 7 | 61 |
| 4/2/2016 | 11 | 0 | 0 | 0 |
| 5/2/2016 | 464 | 10 | 4 | 70 |
| 6/2/2016 | 60 | 1 | 2 | 13 |
| 7/2/2016 | 12 | 0 | 0 | 0 |
| 8/2/2016 | 524 | 19 | 9 | 56 |
| 9/2/2016 | 524 | 18 | 6 | 74 |
| 10/2/2016 | 585 | 14 | 9 | 84 |
| 11/2/2016 | 492 | 9 | 4 | 58 |
| 12/2/2016 | 372 | 4 | 4 | 46 |
| 13/02/2016 | 63 | 0 | 0 | 12 |
| 14/02/2016 | 4 | 0 | 0 | 2 |
| **முழு மொத்தம்** | **4424** | **99** | **53** | **607** |

**செயற்பாட்டுத் திட்டத்துடன் செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு - 2014**

**2015ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் (இடர் முகாமைத்துவ பிரிவு)**

| தொழிற்பாடு | செயற்பாடு | 1ஆவது காலாண்டு | 2ஆவது காலாண்டு | 3ஆவது காலாண்டு | 4ஆவது காலாண்டு |
|---|---|---|---|---|---|
| நீள் அறையில் துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்றக்) திட்டம் | இணக்கபாட்டு வர்த்தகர்களை அடையாளங்காணல் | X | X | | |
| | அலுவலக பயணங்கள் | X | X | X | |
| | துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்றக்) சரக்குப் பெறுபவர்களது பட்டியலினை பேனுதலும் கண்காணித்தலும் (*) | X | X | X | X |
| உயர் இடர் சரக்குகளை தெரிவு செய்தல் | உயர் இடர் சரக்கினை அடையாளங்காணல் | X | X | | |
| | அதியுயர் இடர் சரக்குப்பட்டியலினை கண்காணித்தலும் பரிசோதனை செய்தலும் (*) | X | X | X | X |
| | அடிக்கடி அதியுயர் இடர் சரக்குப்பட்டியலினை இற்றைப்படுத்தல் (*) | X | X | X | X |
| தன்னியங்கித் தேர்ந்தெடுப்பு திட்டம் | பூகோள எடுத்துக்காட்டுகள் தொடர்பிலான ஆராய்வு | X | X | | |
| | சாத்தியமான ஆய்வுகளை மேற்கொள்ளல் | X | X | | |
| | இடர் சிதறல் பண்பளவுகளை அடையாளங்காணல் | | X | X | |
| | இடர் மட்டங்களை அமைத்தல் | | X | X | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருத்தமான சோதனை தரவினை நுனுக்கமாக ஒத்தப்பார்த்தல் | | X | X | X |
| | சோதனை போக்குகளை நிறைவேற்றல் | | | X | X |
| பெறுமதி மதிப்பீட்டு தரவு நிரல் | பூகோள எடுத்துக்காட்டுகள் தொடர்பிலான ஆராய்வு | X | | | |
| | சாத்தியமான ஆய்வுகளை மேற்கொள்ளல் | X | X | | |
| | பொருத்தமான சோதனை தரவினை நுனுக்கமாக ஒத்தப்பார்த்தல் | X | X | | |
| | ஓவ்வொரு இயைபு முறையினை/ வகையினை கொத்தாக்கம் செய்தல | X | X | X | |
| | சோதனை போக்குகளை நிறைவேற்றல் | | | X | X |

(*) தொடர்முன்னெடுப்புச் செயற்பாடுகளைக் குறிக்கின்றது

**2015ஆம் ஆண்டைய திட்டத்தினது செயலாற்றுகை (இடர் முகாமைத்துவ பிரிவு)**

| **தொழிற்பாடு** | **செயற்பாடு** | **பெறுபேறு** |
|---|---|---|
| **நீள் அறையில் துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்றக்) திட்டம்** | இணக்கபாட்டு வர்த்தகர்களை அடையாளங்காணல்<br>அலுவலக பயணங்கள்<br>துரித வெளியாக்கல் (பாஸ்ட் ட்றக்) சரக்குப் பெறுபவர்களது பட்டியலினை பேனுதலும் கண்காணித்தலும் (*) | துரிதப் பாதை ஆவணமாக்கல் திட்டத்திற்காக 218 சரக்குப் பெறுனர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஒரு ஒழுங்குமுறை அடிப்படையில் இறக்குமதிப் பொருட்கள் பற்றிய தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக அனைத்துக் கம்பனிகளையும் கண்காணிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை. |
| **உயர் இடர் சரக்குகளை தெரிவு செய்தல்** | உயர் இடர் சரக்கினை அடையாளங்காணல்<br>அதியுயர் இடர் சரக்குப்பட்டியலினை கண்காணித்தலும் பரிசோதனை செய்தலும் (*)<br>அடிக்கடி அதியுயர் இடர் சரக்குப்பட்டியலினை இற்றைப்படுத்தல் (*) | அதி உயர் இடர் கொண்ட சரக்குமுழுமையாக 2015 ஜுலையில் மீளாய்வு செய்யப்பட்டது. இப் பட்டியலுக்கு மேலாக தரவு பகுப்பாய்வு மற்றும சுங்க புலனாய்வு பிரிவு அறிக்கைகளிலிருந்து கிரம அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **தன்னியங்கித் தேர்ந்தெடுப்பு திட்டம்** | பூகோள எடுத்துக்காட்டுகள் தொடர்பிலான ஆராய்வு<br>சாத்தியமான ஆய்வுகளை மேற்கொள்ளல்<br>இடர் சிதறல் பண்பளவுகளை அடையாளங்காணல்<br>இடர் மட்டங்களை அமைத்தல்<br>பொருத்தமான சோதனை தரவினை நுனுக்கமாக ஒத்தப்பார்த்தல் | ஜோர்தான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட தரவுகள் மற்றும் கடந்து ஆண்டில் பெறப்பட்ட அனுபவங்கள் போன்றவற்றின் மூலம் சரக்கினைத் தெரிவுசெய்வதற்னாக மூலப்பிரமாணத்தை விருத்திசெய்து அதனை அமுல்படுத்துவதானது மேற்கொள்ளப்பட்டது. அசாதாரண இறக்குமதிகள் மற்றும் இறக்குமதி நாடு போன்ற இடர் காரணிகளும் |

| | | |
|---|---|---|
| | சோதனை போக்குகளை நிறைவேற்றல் | பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. ஐந்து தானியம் சார்ந்த சரக்குத் தெரிவு மூலப்பிரமாணங்கள் அமுல்படுத்தப்பட்டதோடு,நீள அறையூடான முழுக் கொல்கலன் பொருள் செயலாக்கத்தின் 3 சதவீதமான தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் அதி உயர் இடர் கொண்ட சரக்கு பட்டியலுடன் சேர்க்கப்பட்டன. |
| **பெறுமதி மதிப்பீட்டு தரவு நிரல்** | பூகோள எடுத்துக்காட்டுகள் தொடர்பிலான ஆராய்வு<br>சாத்தியமான ஆய்வுகளை மேற்கொள்ளல்<br>பொருத்தமான சோதனை தரவினை நுனுக்கமாக ஒத்தப்பார்த்தல்<br>ஓவ்வொரு இயைபு முறையினை/ வகையினை கொத்தாக்கம் செய்தல<br>சோதனை போக்குகளை நிறைவேற்றல் | இந்தியாவில் பயன்படுத்தப்பட்ட பெறுமதியிடல் தரவுத்தள முறைமை பற்றிய ஆய்வின் பின்னர்,ஈ-பெறுமதியிடல் படிவத்தின் விருத்தியாக்கத்தை தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்ப பணிப்பகம் கையளித்தது. இது சுங்கப்பிரகடனத்துடன் இணைக்கப்படவுள்ளது. ஈ-பெறுமதியிடல் படிவம் விருத்திசெய்யப்பட்டுள்ள அதேவேளை, சுங்கப் பிரகடனத்தை சமர்ப்பிக்கும் பொழுது இது கட்டாயமாக்கப்படவும் உள்ளது. |

# மத்திய பெறுமதியிடல் பணிப்பகம்

**அறிமுகம்**

மத்திய பெறுமதியிடல் பணிப்பகமானது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் அட்டவணை-உ வின் பிரகாரம்,இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமதிகளை சரிபார்த்தல் மற்றும் தீர்மானித்தல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றிவருகிறது.

பெறுமதியிடல் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட ஒட்டுமொத்த தீர்மானங்களும் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களை அடைவதற்குப் பங்களிப்புச் செய்யும் வகையிலான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 51 மற்றும் 52 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**குறிக்கோள்கள்**

- பெறுமதியிடல் கருவிகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பங்கள் ஊடாக குறித்த செயற்பாட்டின் வினைத்திறனையும் பயனுறுதியையும் மேம்படுத்தல், திறன் கட்டியெழுப்புதலுக்கான முறைசார் அம்சங்களை மேம்படுத்தல், அதன் மூலம் திணைக்களத்தின் இலக்கினை எட்டுவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- சட்ட ரீதியான வர்த்தகத்திற்கான பொருத்தமான வசதியாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- உலக சுங்க அமைப்ப, உலக வர்த்தக அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகள் மற்றும் கருவிகளுக்கேற்ப சிறந்த நடைமுறை சார் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் இணக்கப்பாட்டின் அளவினை மேம்படுத்தல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- உலக வர்த்தக அமைப்பு GATT 1994 இன் உறுப்புரை VII இன் ஏற்பாடுகளின் சரியான பிரயோகம் தொடர்பில் உறுதிப்படுத்தல்.
- பெறுமதியிடல் கருவிகளை விருத்தி செய்தல் (அதாவது, பெறுமதியிடல் தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல், அவ்வப்போதைய எச்சரிக்கைகளை விடுத்தல்) பெறுமதியிடல் சட்டத்தின் ஒரே சீரான பிரயோகம் மற்றும் வினைத்திறன் மிக்க நடவடிக்கைக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை விருத்தி செய்தல்.
- அட்டவணை-உ உறுப்புரைக்கு ஏற்ப இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதிகளைச் சரிபார்த்தல் மற்றும் அவற்றுக்கான சுங்கத்தின் பெறுமதியைத் தீர்மானித்தல்.
- சுங்கப் பெறுமதியிடலைக் கருத்திற்கொண்டு கொள்கை விடயத்தில் பெறுமதியிடல் குழுவிற்கு உதவுதல்.
- பெறுமதியிடலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அரச-தனியார் பங்காண்மையை வளர்த்துக்கொள்ளல் மற்றும் பெறுமதியைத் தேடிப் பெறுவதில் பொதுமக்களின் பங்களிப்பினையும் வரவேற்றல்.
- அடிக்கடி விலை மாறும் பொருட்களின் பெறுமதியிடல் போக்கினைக் கண்காணித்தல்,பெறுமதியிடல் தொடர்பில் மேற்பார்வையினை மேற்கொள்ளல்,வருமான அறவீட்டினைக் கருத்திற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் ஆய்வு மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்ளல்.
- சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு) மற்றும் சுங்கப் பணிப்பாளர்(சு.ச.அ.ப) ஆகியோர் ஊடாக சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகள்/ மூலங்கள் ஆகியவற்றுடன் சுங்கப் பெறுமதியிடல் விடயங்கள் தொடர்பில் ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.

1. **பிரதான செயற்பாடு 1 : பெறுமதி மதிப்பிடல் பொறிமுறையின் வினைத்திறனையும் பயனுறுதியையும் உறுதிப்படுத்தல**

| பிரதான செயற்பாடு | இலக்கு | உண்மையாக அடையப்பட்ட இலக்கு | அடையப்படாவிடின் அதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1.1அடிக்கடி விலை மாறும் பொருட்களை இனங்காணல் | தெரிவுசெய்யும் நோக்கத்திற்கான இடர் முகாமைத்துவ பிரிவிற்கு அடிக்கடி விலை மாறும் பொருட்களை இனங்கண்டு அவற்றை எச்.எஸ். இலக்கங்களுக்கு அறிக்கைசெய்தல். | வெற்றிகரமாக அடையப்பட்டது (அவ்வப் போது அறிக்கை செய்வதானது தொடர்ந்தும் இடம்பெறுகிறது). | |
| 1.2 தொழில்நுட்ப உதவிகளைப் பெறும் நோக்கில் தனியார்த்துறை மற்றும் அரச துறைகளுடன் பங்காண்மைத்துவத்தை விருத்தி செய்தல் (நிறைவடைந்த பொருட்கள் மற்றும் உற்பத்திச் செயன்முறையிலான மூலப்பொருட்களின் உபயோகம்). | குறிப்பான சில பொருட்களுக்கு குறைந்தபட்ச விலையினைத் தீர்மானிப்பதற்காக தனித்துமிக்க ஏற்றுக்கொள்ளத்தகு முறைமை ஒன்றினை பேணுதல். | சில பொருட்களில் தனித்துவம் அடையப்பட்டது (அதாவது, பாவித்த வாகன உதிரிப்பாகங்கள் சங்கம், நெகிழத்தகு பொதியாக்க சங்கம், மரம் இறக்குமதியாளர்கள் சங்கம் போன்றோரினால் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகள்) | |
| 1.3 விலை மதிப்பிடல் தீர்மானமொன்றில் சர்ச்சையில் உள்ளபோது, அவசியமான ஆய்வுக்காக பெறுமதி ஆராச்சி மற்றும் விசாரணைப் பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்படுதல். | ஏற்றுக்கொள்ளத்தகு பெறுமானங்களை பிரயோகிக்கும் பொருட்டு | வெற்றிகரமாக அடையப்பட்டது. | |
| **பிரதான செயற்பாடு 2: அடிக்கடி விலை மாறுகின்ற பொருட்களுக்கான குறைந்தபட்ச பெறுமானத்தை மதிப்பிடும் நோக்கில் முறைமை ஒன்றினை விருத்திசெய்து அதனைப் பேணுதல்.** | | | |
| 2.1 அடிக்கடி விலை மாறும் பொருட்கள் தொடர்பில் ஆய்வுசெய்து அவற்றை இனங்காணல் (அதாவது, இது மொத்தத் தொழிற்துறையினையும் அரச வருமானத்தையும் கடுமையாகப் பாதிக்கக் கூடியதாகவிருக்கலாம்). | மூலப்பொருளின் விலையின் அடிப்படையில் குறைந்தபட்ச பெறுமதி ஒன்றை தாபித்தல். | கிடைக்கத்தகு குறைந்தபட்ச பெறுமதி அடிப்படையினை உறுதியாக விருத்தி செய்தல். | |
| 2.2உற்பத்திச் செயன்முறை மற்றும் மூலப்பொருள் கலவை ஆகியவற்றை இனங்காணல். | பொருட்களின் பெறுமதியை பல்வேறு மட்டங்களில் வேறுபடுத்தல். உதாரணமாக, ஆரம்பநிலை,அரைநிலைப் பூர்த்தி, முழுப்பூர்த்தி. | மரம், நெகிழத்தகு பொதி, கண்ணாடி வகைப் பொருட்கள், டயபேர்ஸ் போன்ற உற்பத்திப் பொருள் செயலாக்கத்தின் மீது அவ்வப்போதைய | |

| | | | |
|---|---|---|---|
| | | மீளாய்வானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | |
| 2.3 குறைந்தபட்ச விலையுடைய பொருட்கள் குறித்தான கண்டறிதல்களை சு.ப/பி.சு.பாளருக்கு அறிக்கையிடுவதோடு, அவை தொடர்பில் மே.சு.ப (கூ) நாயகத்தின் கவனத்திற்கும் கொண்டுசெல்லல். | உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் அதேவேளை, எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்குகளை அடைதல் | வெற்றிகரமாக முன்னேற்றம் அடையப்பட்டது (அதாவது, உலகச் சந்தையின் விலைக்கேற்ப மூலப்பொருட்களுக்கான பெறுமதிகள் அடிக்கடி மாறுவதன் காரணமாக இது அவ்வப்போது இற்றைப்படுத்தலுக்கு உட்படுகிறது) | |
| **பிரதான செயற்பாடு 3: பெறுமதியிடல் குறித்தான தரவுத்தளத்தை விருத்தி செய்தல்.** | | | |
| 3.1உயர்ந்த வரி வீதம் மற்றும் பெறுமானவரி வீதங்கள் பிரயோகிக்கத்தகு பொருட்களை இனங்காணல் (உயர்ந்தபட்ச வருமானம்) | அத்தகைய பொருட்களின் ஏற்றுக்கொள்ளத்தகு பெறுமானங்களைப் பெறல் (தனித்துவம் மிக்கதும் ஒத்தவையுமான பொருட்கள்) | உயர் வரி வீதங்கள் பிரயோகிக்கப்படுகின்ற சுங்கப்பிரகடனங்கள் குறித்து செயற்படும் நோக்கில் இயைபு முறை குறியீட்டுப் பட்டியலானது அவ்வப்போது இடர் முகாமைத்துவ பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகிறது. | |
| 3.2 புதிய பூரணத்துவமிக்க பெறுமானம் சரிபார்க்கை படிவமொன்றை வடிவமைத்தல் (அதாவது, இலத்திரனியல் VDF) | சுங்கப் பிரகடனம் குறித்தான ஏற்றுக்கொள்ளத்தக்க பெறுமானங்களை தன்னியல்பாக இனங்காணும் வகையில் வினைத்திறன் மிக்கதொரு முறைமையினை விருத்திசெய்தல் (தனித்துவமான மற்றும் ஒத்த வகைப் பொருட்களின் பெறுமானங்கள்) மற்றும் பெறுமதி மதிப்பிடல் தரவுத்தளத்தில் மீளமைத்தல். | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பகத்தின் ஆதரவோடு ஒரு பூர்வாங்க நடவடிக்கையாக e-VDFஅமுல்படுத்தத் தொடங்கியது. | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பகமானது தனி வின்டோவை அமுல்படுத்துவதற்கான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. |
| 3.3 பெறுமதி ஆராய்ச்சி பிரிவின் பணியாளரால் கண்டறியப்படும் விடயங்கள் ஊடாகவும் நாளாந்த அடிப்படையிலும் சுங்கப் பிரகடனத்தை ஆய்வுசெய்து பொருட்களின் ஏற்றுக்கொள்ளத்தக்க பெறுமானங்களை கைமுறை மூலம் சேகரித்தல் | மிகவும் இற்றைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச பெறுமதி ஆற்றுப்படுத்தல் அடிப்படை கிடைக்கின்றமை | அவ்வப்போதைய கைமுறை இற்றைப்படுத்தல் மற்றும் தன்னியக்க பெறுமான தரவுத்தளத்தின் தாபிப்பு ஆகியன தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | |
| | | | |

| 4. சட்ட ரீதியான வியாபாரத்திற்கு வசதியளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | | | |
|---|---|---|---|
| 4.1 இறக்குமதியாளர்களுடனான உரிய கலந்துரையாடலின் பின்னர் பெறுமதியிடல் தொடர்பில் தீர்மானம் எடுத்தல். | சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் குறித்தான பிரயோகம். | புதிய பெறுமதி சரிபார்க்கைப் பட்டியல் (VVF) அமுலாக்கத்தை அடுத்து அடையப்பட்டது. | |
| 4.2 மேன்முறையீடு பற்றிய பொறிமுறை | இறக்குமதியாளர்களின் மனக்குறைகளுக்குத் தீர்வு காணுதல். | வெற்றிகரமாக அடையப்பட்டது. | |
| 4.3 உலக சுங்க அமைப்பின் நேரம் விடுவிப்பு ஆய்வின் பிரகாரத்திலான நடவடிக்கை | துரிதமாக்கிய வெளியாக்கம் | அடையப்பட்டது. | |
| 4.4 பெறுமதியிடல் மாதிரிகளைப் பொறுத்து உத்தரவாதத்தின் பேரில் சரக்குகளை விடுவிப்பதற்கு பரிசீலிக்கப்படுகிறது. | இறக்குமதியாளர்களின் மனக்குறைகளுக்குத் தீர்வு காணுதல். | வெற்றிகரமாக அடையப்பட்டது. | |

**மத்திய பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தினது மாதாந்த புள்ளிவிபரவியல்கள் - 2015**

| மாதம் | பெறப்பட்ட பதிவுகளது எண்ணிக்கை | மீளமைக்கப்பட்ட பெறுமதி தொடர்பிலான பதிவுகளது எண்ணிக்கை | சரிசெய்யப்பட்டவைகளது சதவீதம் | அறவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| ஜனவாரி | 1531 | 676 | 44.00% | 54,449,710.00 |
| பெப்ரவி | 1743 | 979 | 56.00% | 91,402,400.00 |
| மார்ச் | 1359 | 588 | 34.00% | 63,774,886.00 |
| ஏப்ரல் | 1260 | 545 | 31.00% | 51,392,966.00 |
| மே | 1523 | 673 | 44.00% | 64,329,233.00 |
| ஜூன் | 1844 | 832 | 45.00% | 87,569,600.55 |
| ஜூலை | 1504 | 707 | 47.00% | 78,257,088.00 |
| ஓகஸ்ட் | 1420 | 662 | 47.00% | 65,483,265.00 |
| செப்டம்பர் | 1380 | 673 | 49.00% | 84,140,105.00 |
| ஓக்டோபர் | 1484 | 732 | 49.00% | 79,746,391.00 |
| நொவம்பர் | 1711 | 924 | 54.00% | 106,194,920.00 |
| டிசம்பர் | 1512 | 793 | 52.00% | 93,567,883.00 |
| **மொத்தம்** | **18271** | **8784** | **46.00%** | **920,308,447.55** |

| 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | குறித்து அனுப்பப்பட்ட சுங்கப்பிரகடனங்களது எண்ணிக்கை | | மீளமைக்கப்பட்ட சுங்கப் பிரகடன பெறுமதிகளது எண்ணிக்கை | | ஏற்றுக் கொள்ளப்பட்ட சுங்கப் பிரகடன பெறுமதிகளது எண்ணிக்கை | | பெறுமதி சரிப்படுத்தல்களது சதவீதம் | | மேலதிக பதிவுகள் ஊடாக அறவிடப்பட்ட தொகை (ரூபா) | |
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| ஜனவாரி | 2550 | 1531 | 695 | 676 | 1855 | 855 | 27.00% | 44.00% | 57,224,493.00 | 54,449,710.00 |
| பெப்ரவி | 2202 | 1743 | 673 | 979 | 1529 | 764 | 31.00% | 56.00% | 66,208,615.00 | 91,402,400.00 |
| மார்ச் | 2267 | 1359 | 679 | 588 | 1588 | 771 | 30.00% | 34.00% | 65,694,110.00 | 63,774,886.00 |
| ஏப்ரல் | 2153 | 1260 | 737 | 545 | 1416 | 715 | 34.00% | 31.00% | 61,577,199.00 | 51,392,966.00 |
| மே | 2087 | 1523 | 607 | 673 | 1480 | 850 | 29.00% | 44.00% | 43,792,269.00 | 64,329,233.00 |
| ஜுன் | 2244 | 1844 | 649 | 832 | 1595 | 1012 | 29.00% | 45.00% | 50,771,482.00 | 87,569,600.55 |
| ஜுலை | 2300 | 1504 | 807 | 707 | 1493 | 797 | 35.00% | 47.00% | 65,188,511.00 | 78,257,088.00 |
| ஓகஸ்ட் | 2114 | 1420 | 725 | 662 | 1389 | 758 | 34.00% | 47.00% | 54,970,957.00 | 65,483,265.00 |
| செப்டம்பர் | 2020 | 1380 | 752 | 673 | 1268 | 707 | 37.00% | 49.00% | 60,165,713.00 | 84,140,105.00 |
| ஒக்டோபர் | 2104 | 1484 | 885 | 732 | 1219 | 752 | 42.00% | 49.00% | 73,967,692.00 | 79,746,391.00 |
| நொவம்பர் | 2093 | 1711 | 824 | 924 | 1269 | 787 | 39.00% | 54.00% | 71,542,811.00 | 106,194,920.00 |
| டிசம்பர் | 2223 | 1512 | 1036 | 793 | 1187 | 719 | 47.00% | 52.00% | 93,500,943.00 | 93,567,883.00 |
| | **26357** | **18271** | **9069** | **8784** | **17288** | **9487** | **34.50%** | **46.00%** | **764,604,795.00** | **920,308,447.55** |

| | **2015** | **2014** |
|---|---|---|
| நீள அறையில் செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப்பிரகடனங்களது மொத்தம் | 213257 | 185933 |
| மத்திய பெறுமதி மதிப்பிடலுக்கு குறித்து அனுப்பப்பட்ட சுங்கப்பிரகடனங்களது விகிதம் | 8.6% | 14% |

**பெறுமதி மதிப்பிடல் விசாரணை பிரிவின் செயலாற்றுகை – 2015**

| | | |
|---|---|---|
| 1 | 2015 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 2015 டிசம்பர் 31 வரை பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 106 |
| 2 | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 90 |
| 3 | குற்றங்களென நிருபிக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பறிமுதல்களது விடயங்களின் எண்ணிக்கை | 44 |
| 4 | நிறைவேற்றப்பட்ட விடயங்களது விகிதம் | 41.5% |
| 5 | 2014 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 2014 டிசம்பர் 31 வரை சேகரிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா) | 116,783,778.00 |
| 6 | பறிமதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தத் தொகை | இல்லை |
| 7 | முடிவுறுத்தப்பட்டாத விடயக் கோவைகளது மொத்த எண்ணிக்கை (2015 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 2015 டிசம்பர் 31 வரை) | 16 |

**பெறுமதி மதிப்பிடல் விசாரணை பிரிவின் செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு – 2014 மற்றும் 2015**

| | | **2014** | **2015** |
|---|---|---|---|
| **1** | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 95 | 106 |
| **2** | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 85 | 90 |
| **3** | குற்றங்களென நிருபிக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பறிமுதல்களது விடயங்களின் எண்ணிக்கை | 48 | 44 |
| **4** | சேகரிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா) | 252,961,343.04 | 116,783,778.00 |
| **5** | முடிவுறுத்தப்பட்டாத விடயக் கோவைகளது மொத்த எண்ணிக்கை | 10 | 16 |

**சுருக்கக்குறியீடு :**

RMU : இடர் முகாமைத்துவ பிரிவு

VRIU : பெறுமதி ஆராச்சி மற்றும் விசாரணைப் பிரிவு

CVD : மத்திய பெறுமதி மதிப்பிடல் பணிப்பகம்

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம்

*அறிமுகம்*

இப் பணிப்பகத்தின் குறிக்கோள் யாதெனில், தொழில்நுட்பம் மற்றும் சேவைகளை வழங்கல் மேலும் சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தை ஆணையிடுதலுடன் தொடர்பிலான வசதிகளை திணைக்களத்திற்கு வழங்குதல் மற்றும் இடையுறா இணையச் சேவையினை தொடர்ந்தும் வழங்கல் போன்றனவாகும். சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தின் தானியக்கமானது வினைத்திறன்மிக்க மற்றும் பயன்மிக்க சுங்க நிர்வாகம் ஒன்றுக்குத் தேவையான விரைவான, தரமிக்க மற்றும் நம்பகமான தகவல் முறைமைகளை உறுதிப்படுத்துகின்றது. இப்பணிப்பகமானது அனைத்து சுங்கப் பிரகடனங்களையும் துணை ஆவணங்களையும் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதனைப் பேணும் வகையிலான மேலும் புதிய வினைத்திறன்மிக்க அம்சங்களையும் கணினி அடிப்படையிலான பழுது காப்பு முறைமைகளையும் நிறுவிவருகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. தன்னியக்க முறையினை பயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைதல்.
2. அசிகுடா அடங்கலாக சகல மென்பாக முறைமைகளது சீரான தொழில்பாட்டினை உறுதி செய்வதற்காக முறைமை வலைப்பின்னல், கணனிப் பாகங்கள் மற்றும் தரவு நிரல்களைத் திறம்படப் பராமரித்தல்.
3. சுங்க முகாமைத்துவம், பிற அரச முகவரகங்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் ஆகியவர்களுக்கும் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பிரிவுகள், பல்வேறு பிரிவுகளுக்கும் சரியான தகவல்களை உரிய வேளையில் வழங்குவதோடு அறிக்கைகளையும் சமர்ப்பித்தல்.
4. பூகோள முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லுவதற்கு ஏற்றவாறு அசிகுடா ++, சரக்குக் கட்டுப்பாட்டு முறைமை, தினீத் என்பன அடங்கலான தற்போதைய முறைமைகளை விரிவாக்குவதற்காக மதிப்பீடுகள் மற்றும் பயனளிக்கும் தரமுயர்த்தல்களை மேற்கொள்ளல்.
5. விரும்பிய செயற்பாட்டு இலக்குகளை எய்துவதற்காக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர்களினது கணனித் திறமைகளையும் தொழில்சார் தரத்தையும் விரிவாக்கல்.
6. சுங்கத் திணைக்களத்தினது பல்வேறு பிரிவுகள் மற்றும் அலகுகளிலுள்ள அலுவலர்களுக்கு அடிப்படை தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பயிற்சியினை விஸ்தரித்தல்.

**பிரதான செயற்பாடுகள் :**

**1) அரசிறை குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| **பிரதான செயற்பாடு:** | | |
|---|---|---|
| **பிரதான படிமுறைகள்** | **31/12/2015 ஆந் திகதியில் அடையப்பட்டவை %** | **விசேட குறிப்புகள்** |
| 1. அரசிறை குறிக்கொள்களை எய்தும் வகையில் நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றிற்கு புள்ளிவிபர அறிக்கைகளை வழங்குதல் | 100% | |
| 2. அரசிறையினை அதிகரிக்கும் வகையில் வரவு செலவுத்திட்டத்திற்கான ஆலோசனைகளை வழங்குதல் | 100% | |
| 3. வியாபார உடன்படிக்கைகளை அமுல்படுத்தல் | 100% | |

**2)கட்டுப்பாட்டு குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| பிரதான செயற்பாடு : | | |
|---|---|---|
| **பிரதான படிமுறைகள்** | | |
| 1. அசிகுடா வேல்ட் முறையில் சரக்குக் கட்டுப்பாட்டு முறையினை அறிமுகப்படுத்தல் | 100% | |
| 2. அசிகுடா வேல்ட் முறையினது தேர்ந்தெடுப்பு அம்சங்களை அறிமுகப்படுத்தல் | அடையப்படவில்லை | தேர்ந்தெடுப்பு அம்சங்களைதீர்மானிப்பதற்கான குழு நியமிக்கப்பட்டுளன . |
| 3. இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினை அசிகுடா வேல்ட் முறைக்குள் தொடர்புபடுத்தல் | 100% | |
| 4. இலங்கை தர நிர்ணய நிறுவகத்தினை அசிகுடா வேல்ட் முறைக்குள் தொடர்புபடுத்தல் | 100% | |
| 5. இலத்திரனியல் விடய பதிவொன்றினை அறிமுகம் செய்தல் | 100% | |

**3)இலகுபடுத்தல் குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| பிரதான செயற்பாடு : | | |
|---|---|---|
| **பிரதான படிமுறைகள்** | | |
| ஏனைய முகவர்களுடன் தொடர்புகொள்ளுவதற்காக ஒரு தகவல் தரகரினை அறிமுகப்படுத்தல் | 100% | இந்த தேவையினை நிறைவேற்றுவதற்கு மாற்று வெப் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது |
| 2. அசிகுடா வேல்ட் முறையில் வெளியேறு குறிப்பினை அமுல்படுத்தல் | அடையப்படவில்லை | பரிசோதனைச் சாலைகளில் கணனி மற்றும் வலைப்பின்னல் வேலை ஆயத்தமின்மை |
| 3. சாலையினை (டேமினல்) கையாளுபவர்களுக்கு சீ.டீ.என் விபரங்களை இலத்திரனியல் மூலமாக அனுப்புதல் | அடையப்படவில்லை | சுங்கம் தயார். சாலை கையாளுபவர்கள் தயாரில்லை |
| 4. வியாபார இலகுபடுத்தலுக்காக பரிசோதனை சாலைகளுக்கு அசிகுடா வேல்ட் முறையினை வழங்குதல் | அடையப்படவில்லை | பரிசோதனைச் சாலைகளில் கணனி மற்றும் வலைப்பின்னல் வேலை ஆயத்தமின்மை |
| 5. பொருட்பட்டியல் தள்ளுபடியை தானிக்கமாக்குதல் | அடையப்படவில்லை | சோதனையிடல் இடம்பெற்றுள்ளது. த.தொ.தொடர்பாடல் தயார் நிலையில். அமுல்படுத்தல் திகதி தீர்மானிக்கப்படவிருக்கின்றன. |
| 7. திறந்த கணக்குக் கையாளுகை முறைமையொன்றினை அறிமுகம் செய்தல் | அடையப்படவில்லை | முறைமை விரித்திசெய்யப்பட்டுள்ளது |
| 8. ஒரு அரச வங்கியுடன் ஏனைய வர்த்தக வங்கிகளை இணைப்புச்செய்தல் | அடையப்படவில்லை | சுங்கம் தயார் நிலையிலுள்ளது. எனினும், வங்கிகளை ICTA ஊடாக இணைப்பதற்கு தயார் இல்லை. |

**4) ஏனைய குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்**

| பிரதான செயற்பாடு : | | |
|---|---|---|
| **பிரதான படிமுறைகள்** | | |
| 1. அசிகுடா வேல்ட் முறைமையில் அலுவலர்களது குறிப்புக்களை சேமித்தல். | அடையப்படவில்லை | பரிசோதனைச் சாலைகளில் கணனி மற்றும் வலைப்பின்னல் வேலை ஆயத்தமின்மை |
| 2. தரவுத்தளத்தை ஆவணக்காப்பகம் செய்தல் | அடையப்படவில்லை | இது ஒரு தேவையாக இதன் பின்னர் கருதப்படாது. |

# விசேட சேவைகள் பணிப்பகம்

**அறிமுகம்**

இப்பணிப்பகத்தின் குறிக்கோளானது திணைக்களம் மற்றும் திணைக்களத்துடன் தொடர்புடையவர்கள் ஆகியோருக்கான சேவைகளை வழங்குதலாகும். இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் உரிய இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மானித்தல், இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் இரசாயணப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்தல், இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கான இரத்தினக் கல், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை மதிப்பிடல், சுங்க இல்ல முகவர்களைப் பதிவுசெய்தல், மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி சுங்கப் பிரகடனங்களை இலகுபடுத்தல் வசதிகளை செயன்முறைப்படுத்தும் வகையில் அஸிக்குடா முறைமைகளில் ஏற்றுமதியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவுசெய்தல் போன்ற சேவைகள் இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**பிரதான தொழிற்பாடுகள் :**

1. பண்டங்கள் / பொருள் வகைப்படுத்துகை
2. இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தலும் வகைப்படுத்தலும்.
3. மாணிக்கக்கற்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் விலை மதிப்பிடல்.
4. சுங்க இல்ல முகவர்களுக்கான உரிமங்களை வழங்கல், மற்றும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்தல்.

கூட்டுறவுக் கொத்தணியின் கீழான இப்பணிப்பகமானது நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**பொருள் வகைப்படுத்தல் பிரிவு**

இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சரியான இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மாணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. சுங்கப் பிரகடனம் செயன்முறைப்படுத்துகின்ற பிரிவு அல்லது சரக்குப் பரிசோதனைப் பிரிவுகள் ஆகியவற்றிலான பொருட்களது இயைபுமுறைக் குறியிடு தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அவர்கள் அதனை இப்பிரிவுக்கு அனுப்புவார்கள்.

வியாபார இலகுபடுத்தலில் ஒரு அளவீடாக, இப்பிரிவான இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களுக்கான முன்கூட்டிய இறுப்பு வகைப்படுத்தல் வசதியினை விநியோகிக்கின்றது. இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்தி அதனை இப்பிரிவுக்கு சமா்ப்பிப்பதன் மூலம் இவ்விதிமுறைகளைப் பெறமுடியும். விண்ணப்பமானது சுங்கத் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

- **2015ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை**

| 01. முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறைகள் | |
|---|---|
| பெறப்பட்ட மனுக்களது எண்ணிக்கை | 300 |
| வினியோகிக்கப்ட்ட விதிமுறைகளது எண்ணிக்கை | 251 |
| வித்தியாசம் | 49 |

| 02. வகைப்படுத்தல் பிரச்சினைகள் | |
|---|---|
| பெறப்பட்ட வகைப்படுத்தல் பிரச்சினைகளது எண்ணிக்கை | 643 |
| பூர்த்தி செய்யப்பட்ட வகைப்படுத்தல் பிரச்சினைகளது எண்ணிக்கை | 625 |
| வித்தியாசம் | 18 |

- **முன்னய வருடங்களுடனான ஒப்பீட்டாய்வு**

01. முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறைகள்

| வருடம் | பெறப்பட்ட மனுக்களது எண்ணிக்கை | வினியோகிக்கப்ட்ட விதிமுறைகளது எண்ணிக்கை | முடிவுறுத்திய விகிதம் |
|---|---|---|---|
| **2013** | 627 | 514 | 82% |
| **2014** | 497 | 490 | 99% |
| **2015** | 300 | 251 | 84% |



**02. வகைப்படுத்தல் பிரச்சினைகள்**

| | பெறப்பட்ட வகைப்படுத்தல் பிரச்சினைகளது எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வகைப்படுத்தல் பிரச்சினைகளது எண்ணிக்கை | முடிவுறுத்திய விகிதம் |
|---|---|---|---|
| 2013 | 792 | 785 | 99% |
| 2014 | 920 | 912 | 99% |
| 2015 | 643 | 625 | 97% |




**சுங்க ஆய்வுகூடப் பிரிவு**

இப்பிவானது, ஏற்றுமதி செய்யப்படும்/இறக்குமதி செய்யப்படும் இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தல் தொடர்பில் திணைக்கள மற்றும் திணைக்களத்துடன் தொடர்புபபட்டவர்களுக்கு உதவும் வகையில் நிறுவப்பட்டதாகும். இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகள் அவை சந்தேகத்திற்கிடமாக இருப்பின் அதனை இரசாயன கூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அத்தகைய தயாரிப்புகளது வகைப்படுத்தலுடன் சர்ச்சைகள் எழும்போது இப்பிரிவினரின் அபிப்பிராயத்திற்காக ஆவணங்கள் இப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இப்பிரிவானது ஒரு தொழிற்நுட்ப கூறாகவிருந்துகொன்டு, பல்வேறு பேரவைகள் மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிமுறைகள் என்பவற்றினை அமுல்படுத்துவதில் திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனையவர்களுடன் கூட்டிணைப்பினையும் பேணியுள்ளன.

- **2015ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை**

| | | பெறப்பட்டவை | பூரணப்படுத்தப்பட்டவை | முடிவுறுத்திய விகிதம் |
|---|---|---|---|---|
| சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை | அடையாளப்படுத்தலுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட சுங்கப் பிரகடன பகுப்பாய்வு | 8 | 8 | 100% |
| | சுங்கப் பிரகடனங்களது பகுப்பாய்வு மற்றும் வகைப்படுத்தல் மாத்திரம் | 7 | 7 | 100% |
| | வகைப்படுத்தலுக்காக மாத்திரமான சுங்கப் பிரகடனங்கள் | 152 | 150 | 99% |
| விதிமுறைகள் மற்றும் விடயக் கோவைகள் என்பவைகளது மொத்த எண்ணிக்கை | பொ.வ கிளையிலிருந்து கோரப்பட்ட விதிமுறைக் கோவைகள் | 41 | 41 | 100% |
| | ஏனைய கிளையிலிருந்து கோரப்பட்ட விடயக் கோவைகள் | 39 | 39 | 100% |
| | **மொத்தம்** | **247** | **245** | **99%** |

**2015ஆம் ஆண்டு மேலதிக பதிவு தொடர்பில் அறவிடப்பட்டிருக்கும் தொகை ரூபா. 15,599,038**




- **முன்னைய வருடங்களுடனான ஒப்பீட்டாய்வு**

**சுங்கப் பிரகடனங்கள், விதிமுறைகள் மற்றும் விடயக் கோவைகள**

| | பெறப்பட்டவை | பூரணப்படுத் தப்பட்டவை | முடிவுறுத்திய விகிதம் |
|---|---|---|---|
| 2013 | 488 | 488 | 100% |
| 2014 | 357 | 357 | 100% |
| 2015 | 247 | 245 | 99% |
| | | | |

**அறவிடப்பட்டிருக்கும் தீர்வைத் தொகை**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| மேலதிக பதிவு தொடர்பிலான தீர்வுத் தொகை (ரூபா) | 47,726,951 | 7,460,417 | 15,599,038 |






### இரத்தினக்கல், விலையுயர்ந்த உலோகம் மற்றும் ஆபரணப் பிரிவு

இரத்தினக் கல், பெறுமதி மிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான ஆவண செயன்முறைப்படுத்தலானது இப்பிரிவில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையில் விசேடத்துவம் பெற்ற அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை தொடர்பிலான பெறுமதியானது இவ் அலுவலர்களால் தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்களது இணக்கப்பாட்டுடன் கணிக்கப்படுகின்றன.

### 2015 ஆம் ஆண்டிலான செயலாற்றுகை

#### ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள்

| இறக்குமதிகள் | ரூபா. |
|---|---|
| இரத்தினக்கல் | 20,316,475,525 |
| வைர ஆபரணங்கள் | 319,772,066 |
| ஏனைய ஆபரணங்கள் | 2,189,441,012 |
| வைரங்கள் | 19,699,950,499 |
| குஆடா மற்றும் தாதுப்பொருட்கள் | 101,545,926 |
| தங்கம் மீள் ஏற்றுமதிகள் | 0 |

| இறக்குமதிகள்/ மீள் இறக்குமதிகள் | ரூபா. |
|---|---|
| வைரங்கள் | 9,756,034,901 |
| இரத்தினக்கல் | 5,783,035,532 |
| வெள்ளி | 87,021,514 |
| தங்கம் | 4,894,877,223 |
| ஆபரணம் | 2,614,769,890 |
| நுகரத்தக்கவை | 100,511,647 |
| மீள் ஏற்றுமதிகள் | 7,922,137,583 |

#### மொத்தப் பெறுமதிகள்

| மொத்த ஏற்றுமதி (ரூபா) | **42,627,185,028** |
|---|---|
| மொத்த இறக்குமதி (ரூபா) | 31,158,388,290 |






### செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்கள்

| | |
|---|---|
| **மொத்த ஏற்றுமதிப் பிரகடனங்கள்** | **6902** |
| **மொத்த இறக்கமதி பிரகடனங்கள்** | 4701 |

- **முன்னைய வருடங்களுடனான ஒப்பீட்டாய்வு**







### சுங்க இல்ல முகவர் பிரிவு

சுங்க இல்ல முகவர்களுக்கு விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 115 (1) இற்கு இணங்க, சுங்க இல்ல முகவர்கள் அதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருப்பின் அவர்களுக்கான அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் அதிகாரம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அனுமதியளிக்கப்பட்ட சுங்க இல்ல முகவர்கள் மாத்திரமே இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகங்களில் அல்லது இடங்களில் ஏதேனும் கப்பல்களை அல்லது ஏதேனும் பொருட்களை அல்லது ஏதேனும் பொதிகளை வெளியாக்குவதற்கு அல்லது பதிவுடன் தொடர்புடைய வியாபாரத்தினது பரிமாற்றத்திற்கான முகவராகச் செயற்படலாம். இவ் அனுமதிப் பத்திரமானது ஒரு வருடத்திற்கே செல்லுபடியாகுமென்பதுடன், ஆண்டு இறுதியில் அதனைப் புதுப்பிக்க வேண்டியிருக்கும்.

**இவ்வாண்டுக்காலப்பகுதியில் சுங்க இல்ல முகவர் பிரிவினாலான செயலாற்றுகை அறிக்கை**

| தொ. இல | மாதம் | புதிய பதிவுகள் | | புதுப்பித்தல்கள் | | இரத்துச் செய்யப்பட்டவை | | வினியோகிக்கப்பட்ட தற்காலின அனுமதிப்பத்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சுங்க இல்ல முகவர் | சரக்கு மேடை உதவியாளர் | சுங்க இல்ல முகவர் | சரக்கு மேடை உதவியாளர் | சுங்க இல்ல முகவர் | சரக்கு மேடை உதவியாளர் | |
| 1 | ஜனவாரி | 11 | 9 | 138 | 424 | 18 | 1 | 28 |
| 2 | பெப்ரவரி | 7 | 9 | 91 | 307 | 21 | 0 | 24 |
| 3 | மார்ச் | 14 | 17 | 155 | 572 | 22 | 3 | 38 |
| 4 | ஏப்ரல் | 7 | 9 | 72 | 245 | 22 | 1 | 24 |
| 5 | மே | 6 | 6 | 143 | 304 | 0 | 21 | 21 |
| 6 | ஜுன் | 7 | 14 | 32 | 65 | 0 | 11 | 12 |
| 7 | ஜுலை | 6 | 12 | 78 | 153 | 0 | 10 | 14 |
| 8 | ஓகஸ்ட் | 7 | 8 | 78 | 196 | 0 | 20 | 21 |
| 9 | செப்டம்பர் | 9 | 5 | 78 | 238 | 6 | 44 | 25 |
| 10 | ஒக்டோபர் | 11 | 6 | 145 | 439 | 3 | 34 | 33 |
| 11 | நொவம்பர் | 4 | 2 | 138 | 396 | 0 | 30 | 27 |
| 12 | டிசம்பர் | 7 | 6 | 213 | 648 | 2 | 37 | 29 |
| மொத்தம் | | 96 | 103 | 1361 | 3987 | 94 | 212 | 296 |

- **2015ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை**









### வரி அடையாளப்படுத்தல் இலக்கம்/ பெறுமதி சேர் வரி பதிவுப் பிரிவு

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 115 (அ) இற்கு இணங்க, பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர் தவிர்ந்து பிறர் பொருட்களை இலங்கைக்கு வெளியே ஏற்றுமதி செய்யவோ மற்றும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யவோ முடியாது. அவர்களைப் பதிவுசெய்யும் வகையில், சுங்க வெப் தளத்திலுள் விண்ணப்பப்படிவம் மற்றும் அறிவுறுத்தலுக்கு இணங்க இறக்குமதியாளர்களால் அல்லது ஏற்றுமதியாளர்களால் பூரணப்படுத்திய விண்ணப்பத்தினை இப்பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

- **இவ்வாண்டுக்காலப்பகுதியில் வரி அடையாளப்படுத்தல் இலக்கம்/ பெறுமதி சேர் வரி பதிவுப் பிரிவுகளிலான செயலாற்றுகை**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களது எண்ணிக்கை | 187 | 290 | 469 | 411 | 428 | 546 | 413 | 648 | 364 | 433 | 426 | 346 | **4961** |
| 2 | தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான இறக்குமதிகளது எண்ணிக்கை | 776 | 952 | 733 | 578 | 638 | 696 | 975 | 1191 | 872 | 1181 | 679 | 248 | **9519** |
| 3 | பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளது எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட தனியுரிமையாளர் கம்பனிகளது எண்ணிக்கை | 130 | 131 | 150 | 121 | 118 | 148 | 127 | 140 | 171 | 162 | 145 | 153 | **1696** |
| 4 | பதிவு செய்யப்பட்ட பங்குடமைக் கம்பனிகளது எண்ணிக்கை ஏனைய ஆவணங்கள் (பெ.சேர்.வரி இற்றைப்படுத்தப்பட்டவை, கானே திட்டம், சீ.டீ.யு வாகனம், பிரகடன பதிவு) | 76 | 61 | 76 | 69 | 62 | 106 | 104 | 110 | 117 | 101 | 106 | 85 | **1073** |
| 5 | பெறப்பட்ட ஆவணங்களது மொத்த எண்ணிக்கை பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களது எண்ணிக்கை | 26 | 34 | 44 | 25 | 36 | 40 | 54 | 54 | 55 | 69 | 47 | 47 | **531** |
| 6 | தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான இறக்குமதிகளது எண்ணிக்கை | 1555 | 1905 | 2048 | 1904 | 2126 | 2486 | 2187 | 2180 | 2249 | 2417 | 2425 | 2801 | **26283** |
| 7 | பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளது எண்ணிக்கை | 2750 | 3373 | 3520 | 3108 | 3408 | 4022 | 3860 | 4323 | 3828 | 4363 | 3828 | 3680 | **44063** |



| | மொத்தம் |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களது எண்ணிக்கை | 4961 |
| தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான இறக்குமதிகளது எண்ணிக்கை | |
| பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளது எண்ணிக்கை | 1696 |
| பதிவு செய்யப்பட்ட தனியுரிமையாளர் கம்பனிகளது எண்ணிக்கை | 1073 |
| பதிவு செய்யப்பட்ட பங்குடமைக் கம்பனிகளது எண்ணிக்கை | 531 |
| ஏனைய ஆவணங்கள் (பெ.சேர்.வரி இற்றைப்படுத்தப்பட்டவை, கானே திட்டம், சீ.டீ.யு வாகனம், பிரகடன பதிவு) | 26283 |
| பெறப்பட்ட ஆவணங்களது மொத்த எண்ணிக்கை | 44063 |



# மனித வளங்கள் கொத்தணி

# மனித வள முகாமைத்துவப் பணிப்பகம்

**அறிமுகம்**

மனித வள முகாமைத்துவப் பணிப்பகமானது திணைக்களத்தின் மனிதவள முதலீட்டிலிருந்து அதிகூடிய பயனைப் பெறுவதற்கும் நிதி சார் இடரினைக் குறைத்துச் செயற்படுவதற்கும் அயராது உழைக்கின்றது. எதிர்கால நிலைத்திருப்பினை வெற்றிகரமாகப் பாதுகாப்பதற்கும் மனிதவள முதலீட்டிலிருந்தான கூடிய பயனை அடைவதற்குமாக திணைக்களத்தின் செயல்நுணுக்கத் திட்டங்கள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்டு திறமையான மற்றும் தகைமையுடைய நபர்களை வேலைக்கமர்த்தி ஒழுங்கமைப்பதன் மூலமும் மேலும் தற்போதைய பணியாளர் தொகுதியினரின் திறனை அதிகரிப்பதன் மூலமும் மேற்படி இலக்கினை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது. அத்தகைய இலக்குகள் அடையப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துவதில், மனிதவள முகாமைத்துவமானது அரசாங்க ஊழியர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், வியாபார நன்னடத்தை நடைமுறைகள் மற்றும் நிகர செலவுகள் போன்றவற்றைக் கவனத்திற்கொண்டு ஊழியர் ஊக்குவிப்பு, அர்ப்பணிப்பு மற்றும் விளைதிறன் போன்றன முடியுமானவரை அதிகரிக்கப்படும் விதத்தில், திணைக்களத்தின் மனித வள தேவைப்பாடுகளை வினைத்திறன்மிக்க முறையில் அமுல்படுத்துகின்றது.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழான பதவிநிலை மற்றும் பதவிநிலை சாரா அலுவலர்களுக்கான மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அனைத்து அம்சங்களுக்குமான இறுதியாக முடிவெடுக்கும் அதிகாரம் பொதுச்சேவை ஆணைக்குழுவையே சார்ந்ததாகும். எனவே, பொதுச் சேவை ஆணைக் குழுவினால் அவ்வப்போது அறிவிப்புச் செய்யப்படுகின்ற ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, செயலாற்றுகை முகாமைத்துவம் ஆகியன தொடர்பிலும், மேலும் தாபனக் கோவை, சுங்கக் கட்டளைச் சட்டம், மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பிலுமான விடயங்களை மனிதவள முகாமைத்துவப் பணிப்பகமானது உறுதிசெய்கின்றது.

பொதுச் சேவை ஆணைக்குழுவானது, பதவிநிலை ஊழியர்கள் மற்றும் ஏனைய அனைத்து நிலை ஊழியர்கள் தொடர்பில் தாபனக் கோவையின் தொகுதி II இன் இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் (பொதுச் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதற்கான உரிமை) ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேலும் இடமாற்றம் செய்வதற்குமான தத்துவத்தை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்குகின்றது.

அதேவேளை, பொதுச்சேவை ஒழுங்குவிதிகளின் நிலையான ஏற்பாடுகளுடன் இணக்கமுறுகின்ற போதிலும், செயற்திறன் மதிப்பீடு மற்றும் பதவியுயர்வுப் பிரமாணம் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக திணைக்களத்தின் மனிதவளத் தேவைகளுக்குப் பொருத்தமான மனிதவள முகாமைத்துவத் திட்டத்தை திட்டமிடுவதில் சுங்கமானது நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுள்ளது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல் மற்றும் வளமிடல்
2. ஊழியர் கோவையினைப் பேணல் மற்றும் இரகசியம் பேணல்
3. நிறுவணக் கட்டமைப்பினை வடிவமைத்தல் மற்றும் விருத்திசெய்தல்
4. மீள் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவ மாற்றம்
5. செயலாற்றுகை, நன்னடத்தை மற்றும் பழக்கவழக்க முகாமைத்துவம்
6. வாடிக்கையாளர் மற்றும் ஊழியருக்கிடையிலான தொடர்புகள்
7. மனித வளங்கள் (வேலையாட்கள்) பகுப்பாய்வு மற்றும் வேலையாள் நபரது தரவு முகாமைத்துவம்
8. நஷ்ட ஈடு மற்றும் ஊழியர் நலன் முகாமைத்துவம்
9. ஊழியர் ஊக்குவிப்பு மற்றும் மனவுறுதியினைக் கட்டியெழுப்புதல்

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| **2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மதிப்பீட்டினைப் பூரணப்படுத்தல்** | | | |
| 1. அரையாண்டுக் கால மற்றும் இறுதி ஆகிய இரு மதிப்பீடுகளையும் பூரணப்படுத்தல் | 1ஆம் காலாண்டில் பூர்த்திசெய்தல் | 1ஆம் காலாண்டில் பூர்த்திசெய்யப்பட்டது | |
| **மனித வளத்திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 1. மனித வளங்கள் தேவைப் பகுப்பாய்வினை மேற்கொள்ளல் | 2ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டுகளில் பூர்த்திசெய்தல் | 2ஆம் காலாண்டில் பூர்த்திசெய்யப்பட்டது | |
| 2. மனித வளங்கள் திட்டத்தினை தயாரித்தல் | 2ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டுகளில் பூர்த்திசெய்தல் | இலக்குகள் திருத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாட்டு நிபந்தனைகளைக் கருத்திற்கொண்டு, இலக்குகளை திருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 3. மனித வளங்கள் தகவல் தரவு நிரலினை நிறுவுதலும் பேணுதலும் | வருடம் முழுவதும் | | மனித வள முகாமைத்துவ பணிப்பகத்தில், ஆய்வானது மதிப்பீட்டுக்காக மீளகவனித்தும் மற்றும் முடிவுறும் வேலைகள் மீள செய்தும் முடிக்கப்பட்டுள்ளது.<br><br>தேவைப்படும் மாற்றங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிறுவன அமைப்பானது மனித வள முகாமைத்துவ மீள் கட்டமைப்புக்காக நிறைவேற்றப்பட்டுளது. |
| **2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மதிப்பீட்டினைப் பூரணப்படுத்தல்** (நடுத்தர ஆண்டுக்கான மதிப்பீடு) | | | |
| 1. 1.நடுத்தர ஆண்டுக்கான மதிப்பீட்டினைப் பூரணப்படுத்தல் | 3ஆம் காலாண்டில் பூர்த்திசெய்தல் | 3ஆம் காலாண்டில் பூர்த்திசெய்யப்பட்டது | |
| 269 உ.சு.அத்தியட்சகர், 137 சுங்கப் பரிசோதகர்கள் மற்றும் 100 சுங்கக் காவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் | | | |
| 1. சுங்க காவலர்களுக்கான பரீட்சையினை மேற்கொள்ளல் | 1ஆம் காலாண்டில் பூர்த்திசெய்தல் | 2ஆம் காலாண்டில் பூர்த்திசெய்யப்பட்டது | நேர அட்டவணைக்கிணங்க, பரீட்சைகள் திணைக்களத்தினால் உறுதிசெய்யப்படும். |
| 2. 269 உ.சு.ப. மற்றும் 137 சு.ப. பரிசோதகர் தரம்11 இற்கான ஆட்சேர்ப்பு | 2ஆம் காலாண்டில் பூர்த்திசெய்தல் | ஜனவரி மாதத்தில் தகுதிக் கணிப்பீடு ஊடாக 13 உதவி சுங்க அத்தியட்சகர்களாக ஆட்சேர்க்கப்பட்டனர்.<br><br>ஏப்ரல் மாதத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையூடாக 41 சுங்க அத்தியட்சகர்கள் | சிறியதொரு தாமதம் இடம்பெற்றிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பெற்றுள்ளன.<br><br>உ.சு.அ மற்றும் சு.ப ஆட்சேர்ப்பக்கான திறந்த போட்டிப்பரீட்சையில் எதிர்பார்க்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | ஆட்சேர்க்கப்பட்டனர்.<br>திறந்த பரீட்சையூடாக 77 சுங்க பரிசோதகர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.<br>ஜூலை மாதத்தில் திறந்த பரீட்சையூடாக 83 உதவி சுங்க அத்தியட்சகர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். | எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சித்திபெற்றிருக்கவில்லை. |
| 3. 100 சுங்க காவலர்களை ஆட்சேர்த்தல் | 4ஆம் காலாண்டில் பூர்த்திசெய்தல் | • பரீட்சை மே மாதத்தில் நடைபெறங்றன.<br>• பரீட்சை பெறுபேறுகள் டிசம்பர் மாதத்தில் வெளியடப்பட்டன. | ஆட்சேர்ப்பானது 2016ஆம் ஆண்டின் 1அம் காலாண்டில் பூர்த்தி செய்ய இயலுமாகவிருக்கும். |
| 4. உ.சு.அ மற்றும் சு.ப அகியொருக்கான தடைகாண் பரீட்சையினை நடாத்துதல் | வருடம் முழுவதும் | • உ.சு.அலுவலர்களுக்காக 3 பரீட்சைகள் நடைபெற்றன.<br>• சு.பரிசோதகர்ளுக்காக 3 பரீட்சைகள் நடைபெற்றன.<br>• சு.காவலர்களுக்காக 3 பரீட்சைகள் நடைபெற்றன. | • புதிய மற்றும் பழைய பாடத் திட்டத்தின் கீழ் பரீட்சை நடைபெற்றன.<br>• ஏனைய 4 பரீட்சைகளும் 2016 ஜனவாரி மாதத்தில் நடாத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.<br>• பரீட்சை அட்டவணைகள் மாற்றியமைக்கும் தேவை, பரீட்சைகள் திணைக்களத்தினால் அட்டவணைப்படுத்தப்படுத்தம் |
| **ஒழுங்கான பதவியுயர்வுகள்** | | | |
| 1. பதவியயர்வு பட்டியலொன்றினை தயாரித்தலும் பேணுதலும் | வருடம் முழுவதும் | திட்டமிடப்பட்டவாறாக நிறைவுபெற்றள்ள. | |
| 2. பதவியுயர்வு மட்டத்தில் சம்பந்தப்பட்டதும் மற்றும் அரச சேவைகள் ஆணைக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக் கான நேர்முகப்பரீட்சையினை நடாத்துதல் | வருடம் முழுவதும் | மார்ச் மாதத்தில், பிரதி சுங்க அத்தியட்சகர் பதவியுயர்வு தொடர்பிலான நேர்முகப்பரீட்சை முடிவடைந்துள்ளதுடன் இது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுலுவின் சிபாரிசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>ஏப்ரல் மாதத்தில், பிரதி சுங்க பணிப்பாளர் பதவியுயர்வு தொடர்பிலான நேர்முகப்பரீட்சை முடிவடைந்துள்ளதுடன் இது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுலுவின் சிபாரிசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |

# மனித வள அபிவிருத்திப் பணிப்பகம்

**குறிக்கோள்கள்**

- அலுவலர்களை திணைக்களத்தின் தரம் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றினை விருத்தி செய்யும் வகையில் இயங்காற்றல்மிக்க முன்னெடுப்பைக் கொண்டதொரு குழுவாகத் திகழ்வதற்குத் தயார்படுத்தல்.
- திணைக்களத்தின் தேவைப்பாட்டுக்கிணங்க எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அலவலர்களது திறன்கள் மற்றும் அறிவினை விருத்தி செய்தல்.
- ஊழியர்களுக்கான மிகச் சிறந்ததும் சமகாலத்திற்கேற்றதுமான பயிற்சிகளை வழங்குகின்ற உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு உள்ளடங்கலான சர்வதேச மற்றும் உள்நாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.
- பொருத்தமான பயிற்சி வாய்ப்புகளை அடையாளங்காணும் வகையில் அலவலர்களுக்கு உதவுதல்.
- சுங்க அலுவலர்களுக்கு அவர்களது உயர் கல்விக்கான நிதி உதவி உள்ளடங்கலான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல
- வெளிநிலை நிறுவனங்கள் மற்றும் சுங்கத்துடன் தொடர்புடையவர்களுக்கு அவர்களது தேவைப்பாடுகளின் பேரிலான பயிற்சிகளை வழங்குதல்.
- திணைக்களத்தின் இலட்சியங்களை அடைந்துகொள்ளும் வகையிலான குறிப்பிடத்தக்க பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து அவற்றுக்கு வசதியளித்தல்.
- திறமைமிக்க, ஒழுக்கமுடைய சுங்க இல்ல முகவர்களை அறிமுகம் செய்யம் வகையில் சுங்க இல்ல முகவர் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.

**2015ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்துடனான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு ;**

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. உள்ளக மற்றும் வெளிய பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல் | 1475(அலுவலர்கள்) | 1407(அலுவலர்கள்) | இலக்கு பெரும்பாலும் எய்தப்பட்டுள்ளன. |
| 2 வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் | பயிற்சி வாய்ப்புகளது எண்ணிக்கையில் தங்கியுள்ளன | 142 திட்டங்கள் | பொருத்தமற்றவை |
| 3. சுங்க இல்ல முகவர் நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொள்ளல் | 200 பரீட்சார்த்திகள் | 197பரீட்சார்த்திகள் | இலக்கு எய்தப்பட்டுள்ளன. |
| | | | |

| பிரதான செயற்பாடு 1 : உள்ளக மற்றும் வெளிய பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல் | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரதான படிமுறைகள் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | இலக்கு அடையப்பெற்றுள்ளன/ அடையப்பெறவில்லை |
| 1.1 விசாரணை, மதிப்பீடு, வகைப்படுத்தல், பின்னரான கணக்காய்வு மற்றும் தாவர விலங்கின தொற்று நோய் தொடர்பிலான விழப்புணர்வுத்திட்டம் | X | X | X | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.2 பெறுமதி மதிப்பீட்டாளர்களுக்கான திறன் அபிவிருத்தித் திட்டம் | X | | | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.3 புதிதாக நியமிக்கப்பட்ட உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கான விதிமுறை | | X | | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.4 தடுப்புப் பிரிவிலான தொழிற்பாட்டு மாற்றங்களிலான புதிய தொழில் நுட்பம் | | X | | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |

**2) அரசிறை குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடு**

| **பிரதான செயற்பாடு : உள்ளக மற்றும் வெளிய பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்** | | | | | **இலக்கு அடையப்பெற்றுள்ளன/ அடையப்பெறவில்லை** |
|---|---|---|---|---|---|
| பிரதான படிமுறைகள் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | |
| 1.5 பூகோள காப்புத் திட்டம் | | | X | | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.6 கணனி தடயவியல் | | | X | | உலக சுங்க அமைப்பகத்தினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.7 இடர் முகாமைத்துவம் | | X | | | இலக்கு அடையப்பெற்றுள்ளன |

| **பிரதான செயற்பாடு : சுங்க இல்ல முகவர் நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொள்ளல்** | | | | | |
|---|---|---|---|---|---|
| **பிரதான படிமுறைகள்** | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | இலக்கு அடையப்பெற்றுள்ளன/ அடையப்பெறவில்லை |
| 1.8 இயைபு முறைக் குறியீடு மற்றும் இயைபு முறை பேரவையின் சிறப்பு தொடர்பிலான அறிமுகம் | X | X | X | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.9 இரத்தினக்கல் பற்றிய பாடநெறி டிப்ளோமா | | X | X | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.10 குற்றவியல் நுல் பற்றிய பாடநெறி | | | | X | மத்திய வங்கியினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.11 சுங்க பரிசோதகர்களுக்கான விழிப்புணர்வுத்திட்டம் | X | X | X | X | மத்திய வங்கியினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.12 நவீன சுங்க செயற்பாடுகள் தொடர்பிலான விழிப்புணர்வுத்திட்டம் | | | X | X | மத்திய வங்கியினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.13 சுங்க அலவலர்கள், சுங்க பரிசேதகர்கள் மற்றும் சுங்க காவலர்கள் ஆகியோருக்கான சுய பாதுகாப்பு பாடநெறி | X | X | X | X | மத்திய வங்கியினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.14 உடல் அசைவு மொழி மற்றும நுண்ணிய வெளிப்பாடு | | | X | | மத்திய வங்கியினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.15 உ.சு.அ ஆக புதிதாக நியமிக்கப்பட்டவர்களுக்கான அறிமுகப் பயிற்சி | | | X | | மத்திய வங்கியினால் இத்திட்டம் வழங்கப்படவில்லை. |
| 1.16 சு.பரிசேதகர்களாக புதிதாக நியமிக்கப்பட்டவர்களுக்கான அறிமுகப் பயிற்சி | | X | | | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.17 சு.காவலர்களாக புதிதாக நியமிக்கப்பட்டவர்களுக்கான அறிமுகப் பயிற்சி | | X | | | இவ்வாண்டுக்காலப்பகுதியில் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை |
| 1.18 உயிர் பல்வகைமை மற்றும் கலாசார மரபுரிமை தொடர்பிலான விழிப்புணர்வுத் திட்டம் | | X | | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.19 சுங்க விசாரணை நடைமுறை தொடர்பில் பதவிநிலை அலுவலர்களுக்கான விழிப்புணர்வத் திட்டம் | | | X | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| 1.20 மொழி தொடர்பிலான வகுப்புகள் | X | X | X | X | இலக்கு அடையப்பெற்றுள்ளன |
| | | | | | |

## மனித வளங்கள் அபிவிருத்தி

| பிரதான செயற்பாடு 2 : மேலதிக உசாத்துணை நூல்கள் மற்றும் புத்தகங்களை கொள்வனவு செய்வதன் மூலம் நூலகத்தினை மேலும் விருத்தி செய்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | இலக்கு அடையப்பெற்றுள்ளன/ அடையப்பெறவில்லை |
| 2.1 உசாத்துணை புத்தகங்களை அன்பளிப்பு செய்யுமாறு அலுவலர்களுக்கு (சேவையில் உள்ளவர்களுக்கும் அதே போன்று ஓய்வுபெற்றவர்களுக்கும்) வேண்டுகோள் விடுத்தல் | X | X | X | X | நன்கொடையாக 66 புத்தகங்கள் கிடைக்கப்பெற்றன. |
| 2. 2 உசாத்துணைகளாகப் பெறப்படுகின்ற அத்தகைய மூலங்களைக் கண்டறிதல் மற்றும் அவற்றுக்காக விண்ணப்பித்தல். | X | X | X | X | முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |
| 2.3 இரவலுக்காக நூல்களைக் கொள்வனவு செய்தல் | X | X | X | X | 653 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 2.4 ரைடர்ஸ் டைஜெஸ்ட் மற்றும் தேசிய புவியியல் போன்ற பெறுமதிவாய்ந்த பருவ வெளியீடுகளுக்கு சந்தாதாரராகுதல். | X | X | X | X | முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |

| பிரதான செயற்பாடு 2 : வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | இலக்கு அடையப்பெற்றுள்ளன/ அடையப்பெறவில்லை |
| 1. வெளிநாட்டு கலந்துரையாடல்கள், வேலைக்களரிகள், நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி நெறிகள், கூட்டங்கள், பட்டப்படிப்பின் பின்னரான பாடநெறிகள், மாநாடுகள் மற்றும் ஏனையவை | X | X | X | X | 142 வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் 226 அலுவலர்கள் பங்கேற்றனர் |

| பிரதான செயற்பாடு 2 : சுங்க இல்ல முகவர் திட்டம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | இலக்கு அடையப்பெற்றுள்ளன/ அடையப்பெறவில்லை |
| | | X | X | | சுங்க இல்ல முகவர் பரீட்சையில் தோற்றிய 197 பரீட்சார்த்திகளில் 176 பரீட்சார்த்திகள் சித்திபெற்றுள்ளனர் |

# ஊழியர் சேவைகள் பணிப்பகம்

**குறிக்கோள்**

ஊழியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பிற்கானதொரு சூழலை வழங்குவதோடு, திணைக்களத்தின் இலக்குகளை அடையும் செயற்பாடுகளிலும் பங்கேற்றல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

**I. விளைதிறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல் :**
சுங்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் விளைதிறன் விருத்தியின் தரத்தை எய்தும் நோக்கில் தேசிய விளைதிறன் செயலகத்துடனான ஆலோசனையுடன் தேவைப்படும் நடைமுறைகள் மற்றும் நுட்பங்களை அமுல்படுத்தல்.

**II. அரச கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல் :**
சகல பணிப்பகங்'களுடனும் கூட்டிணைப்பினை வைத்திருத்தல் மற்றம் கணக்காய்வு அதிபதியிலால் எழுப்பபடும் வினாக்களுக்கு பதிலளித்தல்

**III. நலன்புரி முகாமைத்துவம் :**
தற்போது வழங்கப்பட்டிருக்கும் சகல நலன்புரி வசதிகளையும் மற்றும் தரமானதொரு நலன்புரிச் சேவையினை வழங்குவதற்கான படிமுறைகளை எடுக்கும் வகையில் அவர்களது தற்போதைய தரங்களை அடையாளங்காணல். சகல மட்டங்களிலுமுள்ள ஊழியர்களுடன் ஆலோசனைகளைப் பெற்று நலன்புரித் திட்டங்களை அடையாளங்கண்டு அவற்றை அமுல்படத்தல்.

**IV. ஒழுக்காற்று முகாமைத்துவம் :**
சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருப்பின் அது தொடர்பில் ஆரம்ப விசாரணைகளையும் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளையும் மேற்கொள்ளல். சுங்க ஒழுக்காற்று நடைமுறை தொடர்பில் ஒன்றாக்கப்பட்ட நன்னடத்தைக் கோவையினை நடைமுறைப்படுத்தல்.அலுவலர்கள் நன்னடத்தைக் கோவையைப் பின்பற்றுவதைக் கண்காணித்தல் மற்றும் நன்னடத்தைக் கோவையினை மீறுபவர்களுக்கு எதிராக முடியுமானளவு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதன் மூலம் நன்னடத்தைக் கோவையை திறம்பட செயற்படுத்தல்.

**V. ஊழியர் மனக்குறைபாடுகள் தொடர்பான முகாமைத்துவம்:**
முகாமைத்துவம் மூலம் ஊழியர்களிடையே அதிக திருப்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் மற்றும் திருப்தியற்ற நிலையை குறைப்பதற்குமாக மனக்குறைபாடு தொடர்பான விடயங்களைக் கையாளுதல். தொடர்பினை கட்டியெழுப்பும் நோக்கில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுடன் முறையான கலந்துரையாடல்களைப் பேணுதல். சச்சரவுக்குரிய விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் வகையில் பேச்சுவார்த்தைக் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஊழியர் பிரச்சினைகளை அடையாளங்காண்பதுடன் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளல்.

**(அ) 2015 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்துடனான செயலாற்றுகை அறிக்கை ஒப்பீட்டாய்வு**

| பிரதான செயற்பாடுகள் | | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| 1. **அரச கணக்காய்வு விசாரணைகளுக்கு விடையளித்தல்** | | 1 தொடக்கம் 4 ஆவது காலாண்டுகள் | 1 தொடக்கம் 4 ஆவது காலாண்டுகள் | |
| 2. **உற்பத்தித் திறன் விருத்தி திட்டத்தினை அமுல்படுத்தல்** | | | | |
| | I. அமுல்படுத்துகை, கணக்காய்வு மற்றும் பயிற்சியளித்தல் குறித்தான குழுவுக்கான உறுப்பினர்களை மீள் நியமித்தல் | 1 ஆம் காலாண்டு | 1 ஆம் காலாண்டு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | II. திணைக்களத்தின் 5எஸ் கையேட்டினை தயாரித்தல் | 1 ஆம் காலாண்டு | 1 ஆம் மற்றும் 2 ஆம் காலாண்டுகள் | நடைமுறைக் கடினம் காரணமாக முன்னேற்றத்தில் மட்டுப்பாடுகள் ஏற்பட்டன. |
| | III. கோவையிடும் முறையினை வடிவமைத்தல் | 1 ஆம் மற்றும் 2 ஆம் காலாண்டுகள் | | நடைமுறைக் கடினம் காரணமாக முன்னேற்றத்தில் மட்டுப்பாடுகள் ஏற்பட்டன. |
| | IV. பெயர் பலகை, கட்டிடத்திற்குள் போகும் வழி காட்டி, வரவேற்பு அட்டைகள் போன்றவைகளை தயாரித்தல் | 1 ஆம் மற்றும் 2 ஆம் காலாண்டுகள் | 1 தொடக்கம் 4 ஆவது காலாண்டுகள் | விநியோகத்தில் பிரச்சினை காரணமாக தாமதமடைந்தது. |
| | V. இலக்கமிடலும் மற்றும் தளபாடங்களை உரியவாறு ஒழுங்குபடுத்துதலும் | 2 ஆம் காலாண்டு | 2 தொடக்கம் 4 ஆவது காலாண்டுகள் | நடைமுறைப் பிரச்சினை காரணமாக தாமதமடைந்தது. |
| | VI. தேசிய உற்பத்தி திறன் விருதுக்கு விண்ணப்பித்தல் | 1 ஆம் காலாண்டு | | நடைமுறைக் கடினம் காரணமாக முன்னேற்றத்தில் மட்டுப்பாடுகள் ஏற்பட்டன. |
| | VII. பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் பசுமை உற்பத்தி திறனையும் மற்றும் மொத்த உற்பத்தித் திறன் முகாமைத்துவத்தினை அமுல்படுத்தல் | 3 ஆம் காலாண்டு | | மேற்படி செயற்பாடுகள் பூர்த்தியடையாமை காரணமாக முன்னேற்றத்தில் மட்டுப்பாடுகள் ஏற்பட்டன. |
| **3.** | தாபன விதிக்கோவையின் கீழான ஒழுங்கு விதிகளுக்கேற்ப ஆரம்ப விசாரணைகள் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளல் | 1 தொடக்கம் 4 ஆவது காலாண்டுகள் | 1 தொடக்கம் 4 ஆவது காலாண்டுகள் | |

# பொருள் விநியோகப் பணிப்பகம்

## அறிமுகம்

இப் பணிப்பகமானது அரசாங்கத்தினால் விடுக்கப்படுகின்ற இன்றியமையா கடமையினை மேற்கொள்ளும் வகையில் முக்கியமான பங்களிப்பினைச் செய்து திணைக்களத்தினுள் தனது வகிபாகத்தை வழங்கி வருகிறது. சேவைகள் உள்ளிட்ட அனைத்து அத்தியவசியமான பொருட்களையும், திறன்மிக்க முறையிலும் மற்றும் வெளிப்படையாகவும் திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களுக்கும் விநியோகிப்பதே இப்பணிப்பகத்தின் குறிக்கோளாகும்.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. திணைக்களத்தின் சகல தொழிற்பாடுகளை தடையின்றி தொடர்ந்து பேணும் வகையில், உரிய நேரத்தில் தரமான பொருட்களையும் சேவையினையும் வேண்டுகின்ற பிரிவுகளுக்கு வழங்குதல்.
2. திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கு இணங்க தெளிவான முறையில் பொருள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.
3. உரிய முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றினைப் பாதுகாக்கும் வகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பொருட் பதிவேட்டில் பதிதல் மற்றும் உரிய களஞ்சியக் கட்டுப்பாடு, திறமையான களஞ்சிய முகாமைத்துவ முறைகள் என்பவற்றை உறுதிப்படுத்தி அனுகூலமான பலன்களைப் பெறுதல்.
4. சுங்கத் திணைக்களத்தினது அசையும், அசையாச் சொத்துக்களை முகாமை செய்தல்.
5. அட்டவணைக்கேற்ப புதிய சுங்கத் தலைமை அலுவலகத்தின் நிர்மானப் பணியின் திருப்திகரமான பூர்த்தி மற்றும் உரிய வளாகங்களது முகாமைத்துவத் திட்ட அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்.
6. செயற்பாட்டு நிலையிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பராமரிப்பதில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**இவ்வாண்டுக்கான பிரதான செயற்பாடு**

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| தேவைப்படும் பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் | பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் | 80% நிறைவுபெற்றுள்ளன | - |
| தலைமை காரியாலய கட்டடத்தினது செயற்பாடுகளை பேணுதல் | திணைக்களத்தின் அலுவலர்களுக்காக துப்பரவான மற்றும் தெளிவான சுற்றாடல் | 100% நிறைவுபெற்றுள்ளன | - |
| சரியான களஞ்சியக்கட்டுப்பாடு மற்றும் சொத்துகள் முகாமைத்தவ முறையினை விருத்தி செய்தல் | முறைமையூடாக சகல சரக்கிருப்பு பொருட்களை கண்காணித்தலும் பேணுதலும் | 80% நிறைவுபெற்றுள்ளன | இடம்பெற்று வருகின்றது |
| 2015ஆம் ஆண்டுக்கான பொருட்களது வருடாந்த ஒப்பாய்வு | பொருத்தமான சொத்துகள் முகாமைத்துவத்தினை பேணுதல் | 50% நிறைவுபெற்றுள்ளன | இடம்பெற்று வருகின்றது |
| கொள்கலன் ஸ்கேனிங் முறைமையினை கொள்வனவு செய்தல் | ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கலன்கள் அனைத்தையும் உரிய முறைப்படி ஸ்கேன் பரிசோதனை செய்தல் | 50% நிறைவுபெற்றுள்ளன | கொள்வனவானது செய்முறையில் |
| திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பேணுதல் | சிறந்த இயங்குநிலையிலுள்ள வாகனங்களை கிரம அடிப்படையில் சேவை வழங்கி கண்காணித்துவரல், பொருளாதாரச் சிக்கனமற்ற பழைய வாகனங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு புதிய வாகனங்களுக்கான கோரிக்கை நிதி அமைச்சிடம் முன்வைக்கப்பட்டது. | 95% நிறைவுபெற்றுள்ளன | - |

# பிராந்திய கொத்தணி

# பயணிகள் சேவை(கட்டுநாயக்க)பணிப்பகம்

**குறிக்கோள்கள்**

- நேர்மையான விமான பயணிகளது சுதந்திர நடமாட்டத்திற்கு வசதியளிக்கும் அதே வேளை அரசிறை மற்றும் சமூக பொறுப்புக்களை காப்பதற்கு உத்தரவாதமளித்தல்.
- சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்களின் கீழ் நிலைநாட்டப்பட்டுள்ள அமுல்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- விமானப் பயணங்களுடன் தொடர்பான எல்லை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலும் கண்காணித்தலும்.
- விமானச் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்கதொரு விதிமுறையினை நிறைவேற்றல்.
- அரசிறை ஒழுக்குகள்/ வெளிநாட்டு நாணயமாற்று ஒழுக்குகளைக் குறைத்தல் மற்றும் அத்தகைய தடுப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கையினை எடுத்தல்.
- பாதுகாப்பு அமைச்சு, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை தர நிர்ணய நிறுவகம்,அழகு சாதரப் பொருட்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய அதிகாரசபைகளது ஒழுங்குவிதிகள் மற்றும் பிற சட்டங்களால் சுங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தல்.
- விமான நிலைய வளாகங்களுக்கிடையிலான பிற நிறுவனங்களான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், விமானம் மற்றும் விமானச் சேவைகள், தொற்றுநோய்த் தடுப்புத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் போதைப் பொருள் பணியகம் போன்ற பிற அரச நிறுவனங்களுடன் தொடர்பினைப் பேணல்.

இப்பணிப்பகத்தின் குறிக்கோள்கள் பல்வேறுபட்ட தரங்கள் மூலம் பல்வேறு மட்டங்களில் நிறைவேற்றப்பட்டன.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. வெளிச்செல்லுகின்ற மற்றும் உள்வருகை தருகின்ற நேர்மையான பயணிகள் மற்றும் அவர்களது பொதிகளின் வெளியாக்கத்தினை இலகுபடுத்தல்.
2. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் மிகவும் முக்கியமான நபர்களது வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
3. விமானப் பணியாட்கள் மற்றும் விமானங்கள் இலங்கையை விட்டு வெளிச்செல்லல் மற்றும் வருகையினைச் செயன்முறைப்படுத்தல்.
4. பயணிகள் பொதி தொடர்பில் தீர்வையற்ற சலுகைகளை வழங்கும் அதேவேளை அத்தகைய வசதிகளை கண்காணித்தலும் மற்றும் அதனைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் நடவடிக்கையெடுத்தல்.
5. ஏ.ரீ.ஏ. கானே, உத்தரவாதங்கள் மற்றும் விசேட சேமிப்புகள் தொடர்பில் பொருள் விடுவித்தல்.
6. சுங்கம்/ தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்ட இரத்தினக்கல்/ ஆபரணம் மற்றும் பொதிகளைப் பாதுகாத்தல்.
7. வருகை தரும்/ வெளிச்செல்லும் பயணிகளால் பிரகடனப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணயமாற்றுப் பிரகடனங்களை சோதனை செய்து அங்கீகரித்தல்.
8. பயணி வெளிச்சென்ற பின்னர் அவருடன் வராத பொதிகளை வெளியாக்குவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்டவாறாக அதிகாரத் தத்துவத்தை வழங்குதல் தொடர்பில் பொதிச் சலுகையினை குறிப்பீடு செய்தல்.
9. சந்தேகத்தின் பேரில் அல்லது தேவையேற்படும் போது பயணியுடன் வரும் பொதிகளை சோதனை செய்தல்.
10. அவசியமேற்படும் போது நபர்களைச் சோதனையிடல்.
    - குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட சுங்க விடயங்கள் மீது புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளல்.
    - வெளியே செல்லும் விமானங்களுக்கு விடுவிப்பு வழங்கல்.
    - வர்த்தக நோக்கம் கருதிய பொருட்களைக் கொண்டுவருகின்ற பயணிகளிடமிருந்து தீர்வைகளையும் பிற வரிகளையும் சேகரித்தல்.

*பிரதான செயற்பாடு :*

**12.1 நேர்மையான பயணிகள் மற்றும் அவர்களுடனான பொதி வெளியாக்கத்தினை விரைவுபடுத்துதல் மற்றும் போதைப்பொருள் மற்றும் பிற சுங்க குற்றங்கள் தொடர்பில் சந்தேகிக்கும் பயணிகள் விடயத்திலான இலக்கினை விருத்தி செய்தல்.**

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| (1) தேவைக்கேற்றவாறு ஸ்கேனர்களையும் கருமபீடங்களையும் மீள அமைப்பதன் மூலம் பச்சை வாயில் மற்றும் பாரமான பொதிகளை பரிசோதனையிடும் பிரதேசங்களை மீள வடிவமைக்கத் தொடங்கல். | புதியதொரு வடிவமைப்பினை தயாரித்தலும் தொழிற்பாட்டினை ஆரம்பித்தலும் | புதியதொரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் புதிய பிரேரணை இலங்கை விமான சேவைகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | பல்வேறு வேண்டுகோள்கள் இலங்கை விமான சேவைகள் நிறுவனத்திடம் விடுக்கப்பட்டுள்ளன. அனால் இதுவரை அவர்களால் தேவையான வசதிகள் எதுவும் வழங்கப்பட்டவில்லை. |
| (2) பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்படும் விடயங்களுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களது தரவுகளை சேமிப்பதற்கான மின்சார தரவு நிரல் திட்டதினை வரைதலும் அதனைப் பேணுதலும். | பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்படும் விடயங்களுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களது தரவுகள் தரவு நிரலில் சேமித்தல் | விபரங்கள் எக்சல் பதிவில் கைமுறை மூலம் பதிவு செய்தல் | த.தொ.தொ பணிப்பகத்தினால் முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை |
| (3) சுங்க பிரதேசங்களில் பயணிகள் காத்துக்கொண்டிருக்கும் நேரத்தினை குறைக்கும் நோக்கில் சட்டவிரோத வாணிபத்தினை தடுக்கம் வகையிலான இருபக்க நோக்குடைய பொதி ஸ்கேனர்களை கொள்வனவு செய்தல். | பல நோக்குகளைக் கொண்ட மிகவும் அதி நவீனமிக்க, நம்பகரமான மற்றும் விரைவாக பொதிகளை ஸ்கேன் செய்யக்கூடிய இயந்திரத்தினை கொள்வனவு செய்தல். | தேவையானவை பற்றி பொருள் கொள்வனவு பணிப்பகத்திடம் அறிவிக்கப்பட்டன | பொருள் பணிப்பகத்தினால் முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை |
| (4) பயணிகளை தனிப்பட்ட முறையில் சோதனையிடுவதைக் குறைத்து அவர்களது உடலில் போதைப்பொருள் மற்றும் பெறுமதிமிக்க உலோகப்பொருட்களை மறைத்து வைத்திருப்பதனை கண்டுபிடிக்கும் வகையிலான உடல் பரிசோதனை ஸ்கேனர்களை கொள்வனவு செய்தல். | பயணிகள் நடந்துசெல்லும் முறையில் கண்டறியும் பிரயோகத்தை கொள்வனவு செய்தல் | இருக்கவில்லை | முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை |
| (5) முறைமைகளின் வெளியீடுகளை மதிப்பிடுவதோடு, அதில் குறைபாடுகள் ஏதேனுமிருப்பின் அதனை சரிசெய்தல் | முறைமையின்பயனுறுதி வினைத்திறன் ஆகியவற்றை அளவிடல் | இருக்கவில்லை | முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை |
| (6) புதிய நடைமுறை தொடர்பில் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்களை தயாரித்தல் | பணிப்பகத்தின் நடைமுறைக் கையேட்டினை தயாரித்தல் | இருக்கவில்லை | வேளைக்கு வேளை அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டன ஆனால் அவை கையேடு வடிவில் இல்லை. |

| ***பிரதான செயற்பாடு :*** 12.2 பயணிகளால் கொண்டுவரப்படும் வர்த்தகப்பொருட்களின் அளவினை உரிய முறையில் பரிசோதனை செய்தல் மற்றும் அறவிடக்கூடிய அரசினையினை சேகரிப்பதற்கும் பயனுறுதியும் வினைத்திறனும் மிக்க பொறிமுறையினை அறிமுகப்படுத்தல் | | | |
|---|---|---|---|
| **பிரதான செயற்பாடுகள்** | **இலக்கு** | **இடம்பெற்றவை** | **இடம்பெறாவிடின், அதற்கான காரணம்** |
| (1)வர்த்தக தன்மை கொண்ட பொருட்களுடனான பயணிகளை வேறானதொரு வரிசையில நிறுத்தி அவர்கள் தொடர்பிலான பரிசோதனைக்காக பாரமான பொதி பிரதேசத்திற்கு அவர்களை அனுப்புதல் | வர்த்தக தன்மை கொண்ட பொருட்களுக்கு புதியதொருதிட்டத்தினை தயாரித்து பரிசோதனை பிரதேசத்திற்கான நிர்மாணப் பணியினை முன்னெடுத்தல். | சுங்கப் பரிசோதனை பிரதேசமானது வேறு இடங்களுக்கு கொண்டுசெல்லத்தகு முறையிலான தடுப்புச் சுவர்களுடன் மூன்று(பச்சை, சிவப்பு மற்றும் பாரிய பொதி) பகுதிகாளக பிரிக்கப்பட்டுள்ளன. | அடையப்பெற்றன. |
| (2) வர்த்தக நோக்கத்திலான பொருட்களை பரிசோதிப்பதற்காக புதிய பரிசோதனைப் பகுதி மற்றும் அலுவலர்களுக்கானதொரு பகுதி ஆகியவற்றினை நிர்மானிப்பதற்கான திட்டங்களை தயாரித்தல் | புதிய திட்டங்களை தயாரித்தல் | புதிய பிரேரணயானது விமான நிலைய சேவைகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | விமான நிலைய சேவைகள் நிறுவனத்தினால் (AASL) தொடக்க வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. |
| (3) பரிசோதனை பிரதேசம் மற்றும் அவசியமான அலுவலகங்களை நிர்மானித்தல் | புதிய எல்லைகள் நிர்ணயிக்கப்படவும் நிர்மானிக்கப்படவும் இருக்கின்றன. | எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன, இருப்பினும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை | விமான நிலைய சேவைகள் நிறுவனத்தினால் நிர்மானப்பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

| ***பிரதான செயற்பாடுகள்:*** ***12.3சந்தேகத்திற்குரிய பயணிகளையும் அவர்களது பொதிகளையும் பரிசோதனை செய்வதற்கான வினைத்திறன் மிக்க முறைமை ஒன்றினை அமுல்படுத்தல்*** | | | |
|---|---|---|---|
| **பிரதான செயற்பாடுகள்** | **இலக்கு** | **இடம்பெற்றவை** | **இடம்பெறாவிடின், அதற்கான காரணம்** |
| (1) வெளிச்செல்லும் பயணிகள் மற்றும் அவர்களது பொதிகள் ஆகியவற்றை பரிசோதனை செய்வதற்கான பிரதேசத்தின் தரைத்திட்ட வரைபினை தயாரித்தல். | தரைத் திட்டமொன்றைத் தயார் செய்தல். | அடையப்பட்டது | அடையப்பட்டது. |
| (2) பிரேரிக்கப்பட்டுள்ள சுங்கப் பரிசோதனைப் பிரதேசம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு ஆகியன தொடர்பில்AASLஉடன் கலந்துரையாடல். | அவசியமான உட்கட்டமைப்பு வசதியை அடையும் நோக்கில் பல்வேறு கலந்துரையாடல்களை விமான நிலைய சேவைகள் நிறுவனததுடன் மேற்கொள்ளல். | அத்தகைய கலந்துரையாடல்கள் விமான நிலைய சேவைகள் நிறுவனத்துடன் இடம்பெற்றதோடு, தேவையான உட்கட்டமைப்புகள் தொடர்பில் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. | நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| (3) சந்தேகத்திற்கிடமான பயணிகளை வினைத்திறன் மிக்க முறையில் இலகுப்படுத்துவதற்கான விமான நிலைய சேவைகள் நிறுவனத்தின் பாதுகாப்பு ஊகங்களிலிருந்து வேறுபட்டுச் செயற்படும் வகையில் சுங்கப் பரிசோதனைப் பிரதேசத்தினை தனியாக நிர்மாணிப்பதற்காக விமான நிலைய சேவைகள் | வெளியேறல் பிரதேசத்தில் தனியான சுங்கப் பிரதேசம் ஒன்றைப் பேணுவதற்காக விமான நிலைய சேவைகள் நிறுவனத்துடன்பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. | விமான நிலைய சேவைகள் நிறுவனத்துடனான பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதோடு, அவர்கள் எங்களுக்கான புதியதொரு பரிசோதனைப் | நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| நிறுவனத்துடன் கலந்துரையாடல் | | பிரதேசத்தினை வழங்குவதற்கு உடன்பட்டனர். | |
| (4) பிரேரிக்கப்பட்ட சுங்கப் பரிசோதனைப் பிரதேசத்தை நிர்மாணித்தல் | பிரேரிக்கப்பட்ட சுங்கப் பரிசோதனைப் பிரதேசத்தை நிறைவுசெய்தல். | நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. | நிர்மாணப் பணிகளைவிமான நிலைய சேவைகள் நிறுவனம் மேற்கொள்ளல் வேண்டும். |
| (5) இயக்கத்தினை ஆரம்பித்தல் | புதிய சுங்கப் பிரதேசத்தில் நடவடிக்கைகளை ஆரம்பித்தல். | எதுவுமில்லை. | நிர்மாணப் பணிகள் இன்னும் பூர்த்தியடையவில்லை |

***பிரதான செயற்பாடு:***
***12.4 விமானநிலையத்தில் பயணிகளினதும் ஏனையோரினதும் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நோக்கில் சுங்கப் பணியாளர் ஒருவரால் இயக்கப்படத்தக்க CCTV முறைமை ஒன்றினை நிறுவுதல்.***

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| (1) கேள்வுமனு குறித்தான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்ட பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கான பொருட்கொள்வனவு அதிகாரசபையின் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தைப் பெறுதல். | அங்கீகாரம் பெறப்பட்டு கேள்வுமனு தொடர்பின அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டன. | அங்கீகாரம் பெறப்பட்டு பிரேரணையானது பொருட்கொள்வன வுப் பிரிவுக்கு கையளிக்கப்பட்ட து. | அடையப்பட்டது. |
